கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை

கைத்தறி மற்றும் துணிநூல்

# கொள்கை விளக்கக் குறிப்பு

## 2015 – 2016

மானியக் கோரிக்கை எண்.17

எஸ். கோகுல இந்திரா
கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2015

## அட்டவணை


| வ. எண் | பொருளடக்கம் | | பக்கம் எண் |
|---|---|---|---|
| 1 | முன்னுரை | | 1 |
| 2 | ஜவுளித் தொழிலின் பல்வேறு பிரிவுகள் | | 3 |
| 3 | கைத்தறி மற்றும் துணிநூல் துறை | | 16 |
| 4 | துறையால் செயல்படுத்தப்பட்டுள்ள சிறப்பு நடவடிக்கைகள் மற்றும் திட்டங்கள் | | 20 |
| 5 | துறையால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் மற்றும் 2015–2016ஆம் ஆண்டுக்கான செயல் திட்டங்கள் | | 61 |
| 6 | பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், திருப்பூர் | | 113 |
| 7 | ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா திட்டம் | | 117 |
| 8 | துறையின் கீழ் இயங்கும் நிறுவனங்கள் | | |
| | 8.1 | தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் லிமிடெட், சென்னை | 121 |
| | 8.2 | கூட்டுறவு நூற்பாலைகள் | 125 |
| | 8.3 | தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் லிமிடெட், கோயம்புத்தூர் | 128 |
| | 8.4 | தமிழ்நாடு சரிகை ஆலை லிமிடெட், காஞ்சிபுரம் | 131 |
| | 8.5 | தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை லிமிடெட், ஈரோடு | 134 |
| | 8.6 | தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் லிமிடெட் (டான்ஸ்பின்), சென்னை | 136 |
| | 8.7 | தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட், (கோ–ஆப்டெக்ஸ்), சென்னை | 137 |
| 9 | 2015–2016–ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட ஒதுக்கீடு | | 162 |

# கைத்தறி மற்றும் துணிநூல்

## 1. முன்னுரை

ஜவுளித்தொழில் நாட்டில் விவசாயத்திற்கு அடுத்ததாக, அதிக வேலைவாய்ப்பு வழங்கும் இரண்டாவது மிகப்பெரிய தொழிலாக விளங்குகிறது. வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றினை வழங்குவதோடு ஜவுளித் தொழிலானது, தொழில் உற்பத்தியில் 14 விழுக்காடு அளவிற்கும், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4 விழுக்காடு அளவிற்கும், நாட்டின் ஏற்றுமதி வருவாயில் 11 விழுக்காடு அளவிற்கும் பங்களித்து, நாட்டின் தொழில் உற்பத்தி, வேலைவாய்ப்பு உருவாக்குதல் மற்றும் ஏற்றுமதி வருவாய் ஈட்டுதல் போன்றவற்றில் முக்கிய பங்கினை வகிக்கிறது. இத்தொழில் 45 மில்லியன் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பும் வழங்கி வருகிறது. இத்தொழிலில் நேரடியாக ஈடுபட்டுள்ள நெசவாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு வாழ்வாதாரம் வழங்கி வருவதோடு, புறநகர் மற்றும் கிராமப்புறங்களில் உள்ள பல இலட்சம் விவசாயிகள் மற்றும் கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கி வரும் பருத்தி, கம்பளி, பட்டு போன்ற முக்கிய இழைப்பயிர்கள் மற்றும் கைத்தொழில்களின் பொருளாதாரமும் ஜவுளித்தொழிலையே சார்ந்துள்ளது.

ஜவுளித்தொழிலின் உட்பிரிவுகளான நூற்பு, கைத்தறி நெசவு, விசைத்தறி நெசவு, தானியங்கித்தறி நெசவு, பதனிடுதல், பின்னலாடை மற்றும் ஆயத்த ஆடை தயாரிப்பு போன்றவற்றில் மிகப்பெருமளவிலான இடத்தினை பெற்றிருப்பதன் மூலம் தமிழ்நாடு பல ஆண்டுகளாக இந்திய ஜவுளித்தொழிலில் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. உள்நாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன், பின்னலாடை ஏற்றுமதிக்கு திருப்பூர், நூல் ஏற்றுமதிக்கு கோயம்புத்தூர், வீட்டு உபயோக ஜவுளிகளுக்கு கரூர் மற்றும் ஆயத்த ஆடை ஏற்றுமதிக்கு சென்னை போன்ற ஏற்றுமதி மையங்களுடன் தமிழ்நாடு செயல்படுகிறது. தமிழ்நாடு மாநிலம் மட்டுமே முழுமையான ஜவுளி மதிப்பு தொகுப்பாக இருப்பதால், ஜவுளித்தொழிலில் மூன்றில் ஒரு பங்கு அளவிற்கு பங்களிப்பதோடு, 47 விழுக்காடு நூற்புத்திறனுடனும், 20 விழுக்காடு விசைத்தறி திறனுடனும், 50 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்களுக்கு வேலைவாய்ப்பும் வழங்கி வருகிறது.

உற்பத்தி, வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு மிகச்சிறந்த பங்களிப்பினை வழங்கக் கூடிய ஒரு வலிமையான மற்றும் உயிரோட்டமுள்ள ஜவுளித் தொழிலை வளர்ப்பதில் தமிழக அரசு உறுதி கொண்டுள்ளது. நாட்டிலேயே, தமிழ்நாடு முதன்மை மாநிலமாகத் திகழ வேண்டும் என்ற உன்னதமான குறிக்கோளை எய்திட, கைத்தறி மற்றும்

துணிநூல் துறை, கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்காகவும், ஜவுளித் தொழிலின் உட்பிரிவுகளான நூற்பு, ஆயத்த ஆடை, பின்னலாடை மற்றும் பதனிடுதல் பிரிவுகளின் வளர்ச்சிக்காகவும் எண்ணற்ற நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இத்தொழிலைச் சார்ந்துள்ள அனைத்து பிரிவுகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு சரியான சூழலை ஏற்படுத்தவும், தேவைப்படும் கட்டமைப்பு வசதிகளை வழங்கவும், அரசு முயற்சி எடுத்து வருகிறது.

## 2. ஜவுளித் தொழிலின் பல்வேறு பிரிவுகள்

### 2.1 கைத்தறிப் பிரிவு

இந்திய கைத்தறியின் பாரம்பரியம் வரலாற்றுக்கு முந்தைய காலகட்டத்திற்கு முற்பட்டதாகும். இதன் ஆரம்பத் தோற்றம் மற்றும் வளர்ச்சிக்கான ஆதாரங்களை வேதங்கள், உபநிடதங்கள், இராமாயணம், மகாபாரதம் மற்றும் கௌடில்யரின் அர்த்தசாஸ்திரம் போன்ற இந்து இதிகாச இலக்கியங்களிலிருந்து காணமுடியும். கி.மு.405–ல் வாழ்ந்த வராஹமிகிரர் தனது பிரிஹட்சமித்தாவில், அக்காலகட்டத்தில் பயன்பாட்டில் இருந்த பல்வேறு வகையான ஜவுளிகள் குறித்து விவரித்திருக்கிறார்.

தொல்லியல் சார்ந்த சான்றுகளின் அடிப்படையில் சிந்துச்சமவெளி நாகரிகத்தின் மொகஞ்சாதாரோ மற்றும்

ஹரப்பா பகுதிகளில் காணப்பட்ட ஒருவகை தாவரத்திலிருந்து பெறப்பட்ட  சிதறலிலிருந்து, சாயமிடப்பட்ட பருத்தி துணியின் கைநூற்பு, கைத்தறி நெசவு, இயற்கை சாயங்களைக் கொண்டு சாயமிடுதல், அச்சிடுதல் போன்ற கலைகள் சுமார் 4500 ஆண்டுகளுக்கு முன்பே நமது மக்கள் பழக்கப்படுத்தி வந்துள்ளதையும், நாட்டில் கூட்டமைக்கப்பட்ட தொழிலை உருவாக்கியுள்ளதையும் அறிய முடிகிறது. இவைகள் அனைத்தும், முடியாட்சி மற்றும் சந்தைத் தேவைக்கேற்பவும், கைவினைஞர்களின் படைப்பாற்றலுக்கேற்ப மாற்றங்களையும் மறுவடிவங்களையும் கொண்டு கிட்டத்தட்ட ஐம்பது நூற்றாண்டு காலமாக ஒரு புகழ்பெற்ற பாரம்பரியமாக இருந்துள்ளது என்பதற்கு சாட்சியளிக்கிறது. இத்தொழில் மொகலாயர்கள், போர்த்துகீஸ்யர்கள், டச்சுக்காரார்கள் மற்றும் பிரிட்டிஷ்காரர்கள் (ஆங்கிலேயர்கள்) போன்றவர்களின் படையெடுப்புகள், வணிகம் மற்றும் கலாச்சார தொடர்புகளினால் அதிக ஆதிக்கம் பெற்றிருந்தது. 18 ஆம் நூற்றாண்டு வரை, உலகிலேயே இயற்கை சாயங்களைக் கொண்டு கையினால் சாயமிடப்பட்ட கைநெசவு ஜவுளிகள் பெருமளவு ஏற்றுமதி செய்த நாடாக இந்தியா விளங்கியுள்ளது. பல நூற்றாண்டு காலமாக இந்திய ஜவுளிகளின் அழகு குறித்து பல்வேறு பாடல்களில் பல கவிஞர்கள் பாடியுள்ளனர்.

கைத்தறி மிக முக்கியமான கைவினைப் பொருளாகவும் நாட்டின் மிகப்பெரிய குடிசைத்தொழிலை உள்ளடக்கியதாகவும் உள்ளது. நாடெங்கும் பல இலட்சக்கணக்கான தறிகள் பருத்தி, பட்டு மற்றும் இதர இயற்கை இழைகள் நெசவில் ஈடுபட்டு வருகின்றன. இந்தியாவின் அழகு பொருந்திய பாரம்பரியமிக்க தொன்மையான நெசவுத் தொழில் செய்யாத நெசவாளர் கிராமமே இல்லை எனலாம்.

கைத்தறிப் பிரிவு, தொழிலாளர்கள் நிறைந்துள்ளதாக இருப்பதோடு, இந்தியாவிலுள்ள 43 இலட்சம் நெசவாளர்கள் மற்றும் உபதொழில் தொழிலாளர்களுக்கு வாழ்வாதாரம் வழங்கி வருகிறது. இப்பிரிவு, குறைந்த மூலதனத் தேவை, குறைவான மின்சக்தி பயன்பாடு, சுற்றுச்சூழல் தோழமை, சிறு உற்பத்திக்கான இலகுத்தன்மை மற்றும் சந்தை நிலவரத்திற்கேற்ப புதுமையான நவீன யுக்திகளை ஏற்றுக் கொள்ளுதல் போன்ற சிறப்புகளைப் பெற்றுள்ளது. கைத்தறித் தொழில் நாட்டின் ஜவுளி உற்பத்தியில் 11 விழுக்காடு அளவிற்கு பங்களிப்பதோடு, ஏற்றுமதி வருவாய் ஈட்டுவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது.

தமிழ்நாட்டின் கைத்தறித் தொழில் பாரம்பரியமிக்க மிகச்சிறந்த திறன்வாய்ந்த கலையாக கருதப்படுகிறது. நெசவு செறிந்த ஆடை தயாரிக்கும் இத்திறன்கள் ஒரு

தலைமுறையிலிருந்து இன்னொரு தலைமுறைக்கு பண்டையக் காலத்திலிருந்து தொடரப்பட்டு வருகிறது.



**வீதியில் பாவு ஓடுதல்**

கைத்தறித் தொழில் தமிழ்நாட்டில் மிகப்பெரிய பொருளாதார செயல்பாடுகள் கொண்ட தொழில்களில் ஒன்றாக இருப்பதோடு, **1.89** இலட்சம் நெசவாளர் குடும்பங்களைச் சார்ந்த சுமார் **3.19** இலட்சம் நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பும் வழங்கி வருகிறது. தனித்தன்மை வாய்ந்த கைத்தறி நெசவு இரகங்களான பட்டு சேலைகள், பருத்தி சேலைகள், வீட்டு உபயோகத்துணிகள், வேட்டிகள், கைலிகள் மற்றும் துண்டுகள் உற்பத்தியில் தமிழ்நாடு பெருமை கொள்கிறது. கைத்தறி இரகங்களில் புதிய வடிவமைப்புகளை மேம்படுத்துவதில், நெசவாளர் சேவை

மையம் மற்றும் தேசிய ஆடை அலங்கார தொழில்நுட்ப நிறுவனம் தேவையான உதவிகளை வழங்கி வருகின்றன.



**கைத்தறி நெசவு**

பெரும்பான்மையான கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு அமைப்பில் உள்ளதால், தமிழ்நாட்டில் கைத்தறிப் பிரிவு தனித்துவம் பெற்று விளங்குகிறது. தமிழ்நாட்டில் **3.50** இலட்சம் கைத்தறி நெசவாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டு **1163** கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. கைத்தறி நெசவாளர்கள் பெருமளவில் வசித்து வரும் கிராமம் மற்றும் புறநகர் பகுதிகளில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன. **2014–2015–**ஆம் ஆண்டில், கைத்தறி நெசவாளர்

கூட்டுறவு சங்கங்களால் **1124.25** இலட்சம் மீட்டர் அளவிற்கு கைத்தறி துணிகள் உற்பத்தி செய்யப்பட்டு, ரூ. **1088.05** கோடி அளவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன. மொத்தமுள்ள **1163** கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில், **946** கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் இலாபத்தில் இயங்கி வருகின்றன. மாநில அரசு மற்றும் மைய அரசால் நெசவாளர்களுக்காக செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சி மற்றும் நலத்திட்டங்கள் அனைத்தும் மாநிலத்திலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கூட்டுறவு அமைப்பின் கீழ் வராத கைத்தறி நெசவாளர்களும் அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா மற்றும் ராஷ்டிரிய ஸ்வஸ்திய பீமா யோஜனா போன்ற பல்வேறு திட்டங்களின் கீழ் பயன் பெற்று வருகின்றனர். கூட்டுறவு அமைப்பில் இல்லாத கைத்தறி நெசவாளர்களுக்கான இதர நலத்திட்டங்கள் தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெய்யும் தொழிலாளர்கள் நல வாரியம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வாரியத்தில் **2,68,282** கைத்தறி நெசவாளர்கள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

## 2.2 விசைத்தறிப் பிரிவு

நாட்டின் மொத்த துணி உற்பத்தியில் விசைத்தறிப் பிரிவு சுமார் **62** விழுக்காடு துணி உற்பத்தி செய்வதனால், இப்பிரிவு முக்கிய பிரிவாக விளங்குகிறது. மேலும், விசைத்தறி, நாட்டின் ஏற்றுமதிக்கான துணி இரகங்களில் **60** விழுக்காடு அளவிற்கு பங்களிக்கிறது. நாட்டிலுள்ள ஆயத்த ஆடைப்பிரிவுகளும் விசைத்தறி தொழிலையே சார்ந்துள்ளன. இந்தியாவின் விசைத்தறித் தொழிலானது, சிறிய அளவிலான, பரவலாக மற்றும் அமைப்புச்சாரா அலகுகளாக நாட்டின் முக்கிய ஜவுளி மையங்களில் பெருமளவு அமைந்துள்ளன. பெரிய விசைத்தறி மையங்களாக மகாராஷ்டிரா, குஜராத் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் விளங்குகின்றன. இந்தியாவின் பெரிய விசைத்தறி குழுமங்களாக, மகாராஷ்டிராவில் பிவாண்டி, குஜராத்தில் சூரத், தமிழ்நாட்டில் சேலம் மற்றும் நாமக்கல் ஆகிய பகுதிகள் விளங்குகின்றன. இந்தியாவின் மொத்த விசைத்தறி மையங்களில் உள்ள விசைத்தறிகளில், இம்மூன்று மையங்களில் உள்ள விசைத்தறிகள் சுமார் **81** விழுக்காடு உள்ளன. விசைத்தறிப் பிரிவு நாட்டிலுள்ள **44.18** இலட்சம் மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கி வருகிறது.



**விசைத்தறி**

மைய அரசு, முக்கியமான பகுதிகளில் அமைந்துள்ள விசைத்தறி சேவை மையங்கள், கணினி வடிவமைப்பு மையங்கள் போன்றவற்றின் மூலம் விசைத்தறித் தொழிலை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. குழுக் காப்பீட்டுத் திட்டம், குழுத் தொழிற்கூடம் அமைக்கும் திட்டம், ஒருங்கிணைந்த விசைத்தறிப் பிரிவு வளர்ச்சி திட்டம், பயனாளிகளுக்கு 20 விழுக்காடு விளிம்புத் தொகை வழங்கும் வகையில் தொழிற்நுட்ப மேம்பாட்டு நிதி திட்டம் உள்ளிட்ட பல்வேறு நலத் திட்டங்கள் மற்றும் வளர்ச்சி திட்டங்களை மைய அரசு விசைத்தறி தொழிலின் வளர்ச்சிக்காக செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் மக்களின் துணித் தேவைகளை பூர்த்தி செய்வதில் விசைத்தறிப் பிரிவு ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. நாட்டிலேயே விசைத்தறி எண்ணிக்கையில் தமிழகம் **இரண்டாம்**

**இடத்தில்** உள்ளது. இத்தொழில் சுமார் **10.19** இலட்சம் நபர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கி வருகிறது. நாட்டிலுள்ள **24.86** இலட்சம் விசைத்தறிகளில், **5.63** இலட்சம் விசைத்தறிகள் தமிழ்நாட்டில் உள்ளன. தமிழ்நாட்டில் சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், அவினாசி, சோமனூர், பல்லடம், கரூர், திருப்பூர், திருச்செங்கோடு, குமாரபாளையம், இராசிபுரம், இராஜபாளையம், மதுரை, சத்திரப்பட்டி, தளவாய்புரம், புளியங்குடி மற்றும் அருப்புக்கோட்டை ஆகியவை விசைத்தறிகள் அதிகம் நிறைந்த குழுமங்களாகும்.

இம்மாநிலத்தில் **59058** விசைத்தறிகள், **188** விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் கீழ் இயங்கி வருகின்றன. விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம் மற்றும் பள்ளி சிறார்களுக்கான விலையில்லா சீருடை வழங்கும் திட்டம் ஆகிய திட்டங்களுக்குத் தேவையான துணிகளை உற்பத்தி செய்வதில் இந்த விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் ஈடுபட்டு வருகின்றன. **2014–2015–**ஆம் ஆண்டில், விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் ரூ.**654.80** கோடி மதிப்புள்ள **16.83** கோடி மீட்டர் துணி வகைகளை உற்பத்தி செய்து, ரூ.**699.27** கோடி மதிப்பிற்கு விசைத்தறி துணிகளை விற்பனை செய்துள்ளன.

## 2.3 நூற்பாலைப் பிரிவு

இந்தியாவிலேயே தமிழ்நாட்டின் நூற்புப் பிரிவு மிகப் பெரிய பிரிவாகும். பெரும்பாலான நூற்பாலைகள் தனியாரால் நிர்வகிக்கப்படும் பருத்தி நூற்பு ஆலைகளாக உள்ளன. இந்தியாவில் மொத்தம் உள்ள **3301** நூற்பாலைகளில், **1983** ஆலைகள் தமிழ்நாட்டில் உள்ளன. **நாட்டிலேயே அதிக எண்ணிக்கையில் நூற்பாலைகளைக் கொண்ட முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது.** இம் மாநிலத்தில், **6** கூட்டுறவு நூற்பாலைகளும், **7** தேசிய துணிநூல் கழக ஆலைகளும் செயல்பட்டு வருகின்றன. இம்மாநிலத்தில் உள்ள நூற்பு ஆலைகள் **22.42** மில்லியன் கதிர்களுடன் இயங்கி வருகின்றன. இம்மாநிலம், ஆண்டொன்றுக்கு சுமார் **2025.64** மில்லியன் கிலோ கிராம் நூல் உற்பத்தி செய்கிறது. இது தேசிய அளவில் நூல் உற்பத்தியில், **46.78** விழுக்காடு அளவாக உள்ளது. பருத்தி நூல் மற்றும் பிறவகை நூல் உற்பத்தியில் நாட்டிலேயே முதல் மாநிலமாகத் தமிழ்நாடு விளங்கி வருகிறது. **நாட்டின் பருத்தி நூல் ஏற்றுமதியிலும், தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது.**



**நூற்பாலை கூடம்**

## 2.4 ஆயத்த ஆடைகள் மற்றும் பின்னலாடை பிரிவு

ஜவுளித் தொழிலில் ஆயத்த ஆடைத் தொழிலானது, வேகமாக வளர்ந்து வரும் தொழிலாக அமைவதுடன், பன்னாட்டு வணிகத்தில், பெரும்பான்மையான பங்கினை வகிக்கிறது. தமிழகத்தில், ஆயத்த ஆடைத் தொழில் மூலப்பொருள் முதல் மதிப்பு கூட்டப்பட்ட முடிவுப் பொருள் வரை தன்னிறைவு பெற்று திகழ்கிறது. கிராமப்புற பகுதிகளில் உள்ள பெண்களுக்கு அதிக அளவில் வேலை வாய்ப்பு வழங்குவதே ஆயத்த ஆடைத் தொழிலின் தனி சிறப்பம்சமாகும்.



**ஆயத்த ஆடை அலகு**

இம்மாநிலத்தில் பின்னலாடைத் தொழில் நிறுவனங்கள் அதிகளவில் திருப்பூரில் அமைந்துள்ளன. இந்தியாவில் மொத்தம் உள்ள **13,000** பின்னலாடைத் தொழில் நிறுவனங்களில் **2500** நிறுவனங்கள் திருப்பூரில் அமைந்துள்ளதுடன், **3.50** இலட்சம் நபர்களுக்கு வேலை வாய்ப்பும் அளித்து வருகின்றன. **2013–2014**–ஆம் ஆண்டில் **24.5** மில்லியன் சதுரமீட்டர் துணிகள் திருப்பூரில் உற்பத்தி செய்யப்பட்டன. **2014–2015**–ஆம் ஆண்டில், ரூ.**20,700** கோடி மதிப்பிலான பின்னலாடைத் துணிகள் திருப்பூரிலுள்ள நிறுவனங்கள் மூலம் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. முன் எப்போதும் இல்லாத வகையில், **2014–2015**–ஆம் ஆண்டில்

அதிக ஏற்றுமதி வருவாயினை திருப்பூர் ஏற்றுமதி நிறுவனங்கள் பதிவு செய்துள்ளன. 2014–2015–ஆம் ஆண்டில், திருப்பூர் பகுதியிலிருந்து மேற்கொள்ளப்படும் பின்னலாடைகளின் ஏற்றுமதியின் ஆண்டு வளர்ச்சி சுமார் 10 விழுக்காடு அதிகரித்துள்ளது.

**2.5 பதனிடும் பிரிவு**

பதனிடும் பிரிவு நெசவுக்கு முந்தைய மற்றும் பிந்தைய நிலை என்ற இரு செயல்பாடுகளுடன், ஜவுளித் தொழில் மதிப்பீட்டு இணைப்பில், துணியின் மதிப்பு மற்றும் தரத்தினை நிர்ணயிப்பதோடு, துணியின் இறுதி மதிப்பைக் கூட்டுவதற்கு உண்டான அதிகப்படியான வாய்ப்புகளையும் யுக்திகளையும் கொண்டதாக உள்ளது. ஜவுளித் தொழிலில், பதனிடுதல் ஒரு முக்கிய மதிப்பு கூட்டப்பட்ட அங்கமாகத் திகழ்கிறது. இந்தியாவில் சுமார் 2300 பதனிடும் ஆலைகள் உள்ளன. அவற்றில் பெரும்பாலானவைகள் தனி அலகுகள் ஆகும். இவைகளில் 22 ஆலைகள் மட்டுமே நூற்பு, நெசவு அல்லது பின்னலாடை தொழிலுடன் இணைந்தவையாக உள்ளன. மேலும், இந்தியாவில் 27,000 உற்பத்தியாளர்களும் 48,000 ஒப்பந்ததாரர்களும், 1000 ஆயத்த ஆடை ஏற்றுமதி உற்பத்தியாளர்களும் உள்ளனர்.

**3. கைத்தறி மற்றும் துணிநூல் துறை**

கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறையின் முதன்மைச் செயலாளரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் கைத்தறி மற்றும் துணிநூல் துறை செயல்பட்டு வருகிறது. கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் இத்துறையின் தலைவராகவும், இவருக்கு உதவியாக தலைமையிடத்தில் பல்வேறு நிலை அலுவலர்களும், சரக அளவில் துணை / உதவி இயக்குநர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

கைத்தறி, விசைத்தறி மற்றும் ஜவுளித் தொழிலுடன் தொடர்புடைய இதர பிரிவுகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காகவும், இத்தொழில் சார்ந்த அனைத்து பிரிவினர் நலனுக்காகவும், குறிப்பாக, கைத்தறி நெசவாளர்கள் மற்றும் ஜவுளித் தொழிலாளர்களின் நலனுக்காக பாடுபடுவதும் கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் அடிப்படை நோக்கமாகும்.

கைத்தறி மற்றும் துணிநூல் தொழிலின் வளர்ச்சிக்காகவும், நெசவாளர்கள் மற்றும் இத்தொழில் சார்ந்த இதர பிரிவினர்களின் நலனுக்காகவும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தும் பொறுப்பு கைத்தறி மற்றும் துணிநூல் துறைக்கு உள்ளது. கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அரசின் கொள்கைகளை செயல்படுத்துவதுடன், திட்டங்களை பல்வேறு

சரக துணை இயக்குநர்கள் / உதவி இயக்குநர்கள் மூலம் நெசவாளர்களுக்கு சீரிய முறையில் சென்றடைவதை உறுதி செய்கிறார்.

கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் மாநிலத்தில் கூட்டுறவின் கீழ் செயல்படும் கைத்தறி மற்றும் துணிநூல் தொழில் சார்ந்த கூட்டுறவு அமைப்புகளின் “செயற்பதிவாளராக” செயல்படுவதற்கு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் **1983** மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் விதிகள் **1988**–இன்படி அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. துறை சார்ந்த அனைத்து பிரிவுகளுக்கும் தேவையான மூலப்பொருட்கள் தங்கு தடையின்றி கிடைப்பதை உறுதி செய்தல் மற்றும் நூல் மற்றும் துணிகளின் உற்பத்தியினை அதிகரித்து சரியான விலையில் கிடைக்கச் செய்தல் போன்ற ஒட்டுமொத்த பொறுப்பும் இத்துறைக்கு உள்ளது. கூட்டுறவு அமைப்பின் கீழ் செயல்படும் நிறுவனங்களுக்குத் தேவையான நூல் மற்றும் இதர மூலப்பொருட்கள் விநியோகம் மற்றும் சங்கங்களால் உற்பத்தி செய்யப்படும் தீர்ந்த சரக்குகளை சொந்த விற்பனை நிலையங்கள், முகவர் விற்பனை நிலையங்கள், கோ-ஆப்டெக்ஸ் மற்றும் லூம் வேர்ல்டு விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்யத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதில்

சிறப்புக் கவனம் செலுத்தும் பொறுப்பும், திட்டமிடுதல், உருவாக்குதல் மற்றும் மத்திய, மாநில அரசுகளின் அனைத்து திட்டங்களின் செயல்பாட்டினையும் கண்காணித்தல் போன்ற பொறுப்புகளும் கைத்தறி மற்றும் துணிநூல் துறையை சார்ந்ததாகும்.

கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் அலுவலகங்கள் மற்றும் நிறுவனங்கள் பின்வருமாறு:—

### 3.1 சரக துணை இயக்குநர் / உதவி இயக்குநர் (கைத்தறி மற்றும் துணிநூல்) அலுவலகங்கள்

| வ.எண் | சரகத்தின் பெயர் | வ.எண் | சரகத்தின் பெயர் |
|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் (துணை இயக்குநர்) | 11 | திருவள்ளூர் |
| 2 | சேலம் (துணை இயக்குநர்) | 12 | ஈரோடு |
| 3 | வேலூர் | 13 | திருப்பூர் |
| 4 | திருவண்ணாமலை | 14 | கோயம்புத்தூர் |
| 5 | கடலூர் | 15 | திண்டுக்கல் |
| 6 | கும்பகோணம் | 16 | மதுரை |
| 7 | திருவாரூர் | 17 | பரமக்குடி |
| 8 | திருச்சிராப்பள்ளி | 18 | விருதுநகர் |
| 9 | கரூர் | 19 | திருநெல்வேலி |
| 10 | திருச்செங்கோடு | 20 | நாகர்கோவில் |

## 3.2 கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம் 1985–ஐ செயல்படுத்தும் அமலாக்க அலுவலகங்கள்

| வ.எண் | அமலாக்க அலுவலகத்தின் பெயர் |
|---|---|
| 1 | துணை இயக்குநர் (அலுவலகம்), சென்னை |
| 2 | உதவி அமலாக்க அலுவலகம், சேலம் |
| 3 | உதவி அமலாக்க அலுவலகம், திருச்செங்கோடு |
| 4 | உதவி அமலாக்க அலுவலகம், ஈரோடு |
| 5 | உதவி அமலாக்க அலுவலகம், திருப்பூர் |
| 6 | உதவி அமலாக்க அலுவலகம், மதுரை |

## 3.3 நிறுவனங்கள்

1) 1163 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள்

2) 188 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள்

3) 6 கூட்டுறவு நூற்பாலைகள் (அண்ணா (தேனி), பாரதி (தூத்துக்குடி), புதுக்கோட்டை, கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி (ஊத்தங்கரை) மற்றும் இராமநாதபுரம் (அச்சங்குளம்)

4) தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட் (கோ–ஆப்டெக்ஸ்), சென்னை

5) தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் லிமிடெட், சென்னை

6) தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் லிமிடெட், கோயம்புத்தூர்

7) தமிழ்நாடு சரிகை ஆலை லிமிடெட், காஞ்சிபுரம்

8) தமிழ்நாடு கூட்டுறவு துணி பதனிடும் ஆலை லிமிடெட், ஈரோடு

9) தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் லிமிடெட் (டான்ஸ்பின்), சென்னை.

## 4. துறையால் செயல்படுத்தப்பட்டுள்ள சிறப்பு நடவடிக்கைகள் மற்றும் திட்டங்கள்

### 4.1 நெசவாளர்களுக்கான முதலமைச்சரின் சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டம்

முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ், கைத்தறி நெசவாளர்களுக்கென **10,000** பசுமை வீடுகள் கட்ட அரசு ரூ.**260** கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. நெசவாளர்களுக்கான பசுமை வீடுகள் ஒவ்வொன்றும் விரிவுபடுத்தப்பட்ட **365** சதுர அடி பரப்பளவில் ரூ.**2.60** இலட்சம் செலவில் (கட்டுமானப் பணிக்கு ரூ.**2.30** இலட்சம் மற்றும் சூரிய மின் விளக்கு வசதி அமைப்பதற்கு ரூ.**0.30** இலட்சம்) என நெசவாளர்கள் தங்கள் இல்லங்களிலேயே கைத்தறிகளை வைத்து நெசவுத் தொழில் செய்ய ஏதுவாக கட்டப்பட்டு வருகிறது. இதனடிப்படையில்,**10,000** பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு, **10,000** பசுமை வீடுகளின் கட்டுமானப் பணிகளும் ஏற்கனவே துவங்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. இத்திட்டம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், **31.03.2015** அன்று உள்ளபடி, **6161** பசுமை வீடுகளின் கட்டுமானப்பணிகள் முழுவதுமாக முடிக்கப்பட்டுள்ளதுடன், எஞ்சிய **3839** பசுமை வீடுகளின் கட்டுமானப்பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன.



ஈரோடு மாவட்டம், சென்னிமலை வட்டத்தில் கட்டப்பட்டுள்ள முதலமைச்சரின் சூரியசக்தியுடன் கூடிய பசுமை வீடு



திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வட்டத்தில் கட்டப்பட்டு வரும் பசுமை வீடுகளின் தொகுப்பு

மாவட்ட வாரியாக கைத்தறி நெசவாளர்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பசுமை வீடுகளின் எண்ணிக்கை விபரம் பின்வருமாறு :—

| வ. எண். | மாவட்டத்தின் பெயர் | பசுமை வீடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கோயம்புத்துார் | 575 |
| 2. | கடலுார் | 167 |
| 3. | விழுப்புரம் | 443 |
| 4. | திண்டுக்கல் | 290 |
| 5. | ஈரோடு | 2550 |
| 6. | காஞ்சிபுரம் | 490 |
| 7. | கரூர் | 110 |
| 8. | தஞ்சாவூர் | 109 |
| 9. | அரியலுார் | 254 |
| 10. | பெரம்பலுார் | 12 |
| 11. | நாகப்பட்டினம் | 30 |
| 12. | மதுரை | 95 |
| 13. | தேனி | 285 |
| 14. | கன்னியாகுமரி | 100 |
| 15. | இராமநாதபுரம் | 76 |
| 16. | சிவகங்கை | 49 |
| 17. | சேலம் | 1490 |
| 18. | தர்மபுரி | 7 |
| 19. | நாமக்கல் | 64 |

| | | |
|---|---|---|
| 20. | திருவள்ளூர் | 117 |
| 21. | திருவண்ணாமலை | 590 |
| 22. | திருநெல்வேலி | 63 |
| 23. | தூத்துக்குடி | 11 |
| 24. | திருப்பூர் | 811 |
| 25. | திருவாரூர் | 36 |
| 26. | திருச்சிராப்பள்ளி | 243 |
| 27. | வேலூார் | 695 |
| 28. | விருதுநகர் | 238 |
| **மொத்தம்** | | **10000** |

### 4. 2 பெடல் தறிகள் வழங்குதல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, கைத்தறி நெசவாளர்களின் வேலைப்பளுவினை குறைக்கவும், உற்பத்தியினை அதிகரிக்கவும் ஆண்டொன்றிற்கு 2000 பெடல் தறிகள் வீதம் மூன்று ஆண்டுகளுக்கு 6000 பெடல் தறிகள் ரூ.24.00 கோடி செலவில் வழங்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி, முதற்கட்டமாக 2013–2014–ஆம் ஆண்டிற்கு 2000 பெடல் தறிகள் வழங்க ரூ.8.00 கோடி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணை வழங்கியுள்ளது. மேலும், 2014–2015–ஆம் ஆண்டில் 2000 பெடல் தறிகள் வழங்க ரூ.8.00 கோடி வழங்கப்பட்டுள்ளது. பல்வேறு மாவட்டங்களிலுள்ள 4000 கைத்தறி நெசவாளர்களுக்கு

பெடல் தறிகள் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வழங்கப்பட்டு வருகின்றன:–

| வ.எண். | சரகத்தின் பெயர் | ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பெடல் தறிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 100 |
| 2 | திருவள்ளூர் | 375 |
| 3 | வேலூர் | 400 |
| 4 | திருவண்ணாமலை | 300 |
| 5 | கடலூர் | 250 |
| 6 | கும்பகோணம் | 100 |
| 7 | திருவாரூர் | 150 |
| 8 | கரூர் | 100 |
| 9 | சேலம் | 325 |
| 10 | திருச்செங்கோடு | 300 |
| 11 | ஈரோடு | 200 |
| 12 | கோயம்புத்தூர் | 244 |
| 13 | மதுரை | 500 |
| 14 | திருநெல்வேலி | 356 |
| 15 | நாகர்கோவில் | 300 |
| **மொத்தம்** | | **4000** |

பெடல் தறி வழங்கும் திட்டத்தின் கீழ், இறுதிகட்டமாக **2000** பெடல் தறிகள் வழங்குவதற்கென, **2015–2016–**ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. **13.105** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.




பெடல்தறி நெசவு

### 4.3 மின் மோட்டார் பொருத்திய தார் சுற்றும் இயந்திரம் வழங்குதல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் வெளியிடப்பட்ட அறிவிப்பின் அடிப்படையில், ஊடை நூலுக்குத் தேவையான தார் கிடைப்பதில் நெசவாளர்களுக்கு ஏற்படும் தட்டுப்பாட்டைப் போக்கவும், நெசவு சார்ந்த நடவடிக்கைகளைத் தொடரவும், செயல்படுத்தும் விதமாக, கைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மின் மோட்டார் பொருத்திய தார் சுற்றும் இயந்திரங்களை வழங்க அரசு முடிவு செய்துள்ளது. நெசவாளர்களுக்கு தலா ரூ.1500/– மதிப்புள்ள 25000 மின் மோட்டார் பொருத்திய தார் சுற்றும் இயந்திரங்கள் வழங்க ஏதுவாக, அரசு 2013–2014–ஆம் ஆண்டில் ரூ.3.75 கோடி

விடுவித்துள்ளது. அதனடிப்படையில், **25000** கைத்தறி நெசவாளர்களுக்கு கீழ்க்கண்டவாறு விலையில்லா மின்மோட்டார் பொருத்திய தார் சுற்றும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன:–

| **வ.எண்** | **சரகத்தின் பெயர்** | **விநியோகம் செய்யப்பட்ட தார் சுற்றும் இயந்திரங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் | 340 |
| 2. | திருவள்ளூர் | 800 |
| 3. | வேலூார் | 1625 |
| 4. | திருவண்ணாமலை | 480 |
| 5. | கடலூார் | 635 |
| 6. | கும்பகோணம் | 1685 |
| 7. | திருவாரூர் | 80 |
| 8. | கரூர் | 290 |
| 9. | சேலம் | 1040 |
| 10. | திருச்செங்கோடு | 1040 |
| 11. | ஈரோடு | 7425 |
| 12. | கோயம்புத்தூார் | 995 |
| 13. | மதுரை | 725 |
| 14. | திருநெல்வேலி | 1120 |
| 15. | நாகர்கோவில் | 2595 |
| 16. | திருப்பூர் | 860 |
| 17. | திருச்சி | 200 |
| 18. | விருதுநகர் | 930 |
| 19. | திண்டுக்கல் | 810 |
| 20. | பரமக்குடி | 1325 |
| | **மொத்தம்** | **25000** |



மின் மோட்டார் பொருத்திய தார் சுற்றும் இயந்திரம்

## 4.4 கைத்தறி நெசவாளர்களுக்கு மின்சார பாவு சுற்றும் இயந்திரம் வழங்குதல்.

நெசவுக்கு முந்தைய பணிகளில் ஒன்றான பாவு சுற்றுதல், நெசவாளர் குடும்பங்களிலுள்ள பெண் நெசவுத் தொழிலாளர்களால் கையினால் இயக்கப்பட்டு வருகிறது. நெடுங்காலமாக நெசவுக்கு முந்தைய பணிகள் அனைத்தும் நெசவாளர் குடும்பங்களில் உள்ள உறுப்பினர்களின் பங்களிப்புடன் வருவாய் ஈட்டித் தரக்கூடிய ஒரு முக்கிய குடும்பத் தொழிலாக நடைபெற்று வருகிறது. ஒரு காலக்கட்டத்தில்,

உடனடி பாவு நூல் கிடைப்பதில் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாக உற்பத்தி பாதிக்கப்பட்டு, கைத்தறி நெசவாளர்கள் வேலை வாய்ப்பை இழக்கும் நிலை உருவானது. பாவு நூல் கிடைப்பதில் நெசவாளர்களுக்கு ஏற்படும் பாதிப்பினை சீராக்கும் நோக்கத்துடன், அரசு பாவு சுற்றும் பணியினை மின்மயமாக்க முடிவு செய்து மின்சார பாவு சுற்றும் இயந்திரத்தை அறிமுகம் செய்தது.



**மின்சார பாவு சுற்றும் இயந்திரம்**

நெசவாளர்களுக்கு குறித்த காலத்திற்குள் பாவு நூல் வழங்கி தொடர் வேலை வாய்ப்பு வழங்குவதற்காக, கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு விலையில்லா மின்சார பாவு சுற்றும் இயந்திரங்களை கொள்முதல் செய்ய அரசு

ரூ.80.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது. அதன்படி, 100 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு மின்சார பாவு சுற்றும் இயந்திரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

## 4.5 விசைத்தறிகளை நவீனப்படுத்துதல்

சாதா விசைத்தறியில் பாவு நிறுத்த இயக்க உபகரணம், எலக்ட்ரானிக் ஊடை நிறுத்த இயக்க உபகரணம் மற்றும் பாசிட்டிவ் லெட்ஆப் மோஷன் போன்ற நவீன உபகரணங்கள் ரூ.10,000/– மானிய உதவியுடன் பொருத்துவதற்கு 2014-2015-ஆம் ஆண்டில் ரூ.80.00 இலட்சம் மானியமாக ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இதனடிப்படையில், சேலம், ஈரோடு, திருப்பூர், திருச்செங்கோடு, கோயம்புத்தூர், மற்றும் மதுரை சரகங்களில் உள்ள 800 விசைத்தறிகள் நவீனப்படுத்தப்பட்டுள்ளன. சரக வாரியாக நவீனப்படுத்தப் பட்டுள்ள விசைத்தறிகளின் விபரம் பின்வருமாறு:–

| வ.எண் | மாவட்டத்தின் பெயர் | நவீனப்படுத்தப்பட்ட விசைத்தறிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | சேலம் | 25 |
| 2. | ஈரோடு | 320 |
| 3. | திருப்பூர் | 50 |
| 4. | திருச்செங்கோடு | 94 |
| 5. | கோயம்புத்தூர் | 286 |
| 6. | மதுரை | 25 |
| மொத்தம் | | 800 |


## 4.6 கைத்தறி தொழிலுக்கான புத்துயிரூட்டுதல், சீர்திருத்தம் மற்றும் மறுசீரமைப்பு திட்டம்

தமிழ்நாடு அரசு, நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் பயனடையும் வகையில், கைத்தறி தொழிலுக்கான புத்துயிரூட்டுதல், சீர்திருத்தம் மற்றும் மறுசீரமைப்பு திட்டத்தினை மத்திய அரசு நிதியுதவியுடன் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் அரசு, **2012–2013** மற்றும் **2013-2014**–ஆம் ஆண்டுகளில், ரூ.**147.71** கோடி தொகையினை (மத்திய அரசு பங்கு ரூ.**116.31** கோடி மற்றும் மாநில அரசு பங்கு ரூ.**31.40**கோடி) **718** கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் (கோ–ஆப்டெக்ஸ்) மற்றும் **520** தனியார் நெசவாளர்கள் ஆகியோர் பயனடையும் வகையில் ஒப்பளிப்பு செய்துள்ளது.

கைத்தறி தொழிலுக்கான புத்துயிரூட்டுதல், சீர்திருத்தம் மற்றும் மறு சீரமைப்பு திட்டம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கான பொது கணக்கு முறை மற்றும் கணினிமயமாக்கலுக்காகவும் நிதியுதவி வழங்குகிறது. **718** பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் கணக்குகளை கணினிமயமாக்கி, பொது கணக்கு முறையை செயல்படுத்துவதற்காக **2014–2015**–ஆம் ஆண்டில் மைய அரசிடமிருந்து ரூ.**285.60** இலட்சம் பெறப்பட்டுள்ளது.

## 4.7 நெசவாளர்களுக்கான கடன் அட்டை வழங்கும் திட்டம்

நெசவாளர்களுக்கு தொழில் முதலீடு மற்றும் நடைமுறை மூலதனக் கடன் தேவைகள் வங்கிகளிடமிருந்து இணக்கமான மற்றும் நிதித்திறன் மிக்க வகையில் சரியான நேரத்தில் போதுமான அளவிற்கு வழங்குவதே ‘நெசவாளர்களுக்கான கடன் அட்டை வழங்கும் திட்டத்தின்’ நோக்கமாகும். தமிழ்நாடு அரசு, நெசவாளர்களுக்கான கடன் அட்டை வழங்கும் திட்டத்தினை 2012–2013–ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் கைத்தறி நெசவாளர்களுக்கு குறைந்த வட்டியில் கடன் வழங்க வழிவகை செய்கிறது. இத்திட்டத்தின் கீழ் தகுதியுள்ள நெசவாளர்களுக்கு நிதியுதவி வழங்கும் வங்கிகள் மூலம் ரூ.25,000/– முதல் அதிகபட்சமாக ரூ.2,00,000/– வரை கடன் தொகை பெற கடன் அட்டைகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் நெசவாளர் ஒருவருக்கு விளிம்புத் தொகையாக ரூ.10,000/– வழங்கப்படுகிறது. இக்கடன் அட்டை மூன்று ஆண்டுகளுக்கு செல்லத்தக்கது மற்றும் வங்கி வட்டியில் 3 விழுக்காடு மானியமும், மத்திய அரசால் மூன்று ஆண்டுகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.



கடலூரில் உள்ள ஒரு நெசவாளர் கடன் அட்டையுடன்

நெசவாளர்களுக்கு கடன் அட்டை வழங்கும் திட்ட செயல்பாடுகளின் விபரம் பின்வருமாறு.

| வருடம் | வழங்கப்பட்ட கடன் அட்டைகளின் எண்ணிக்கை | ஒப்பளிக்கப்பட்ட தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 2012–2013 | 10677 | 26.16 |
| 2013–2014 | 22066 | 56.54 |
| 2014–2015 | 17058 | 42.32 |

**நெசவாளர்களுக்கு கடன் அட்டை வழங்குதல் மற்றும் கடனளித்தலில் தமிழ்நாடு, நாட்டிலேயே முன்னோடி மாநிலமாக உள்ளது.**

## 4.8 முதியோர் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் உயர்த்தி வழங்குதல்

தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த முதியோர் ஓய்வூதியத் தொகை **01.01.2012** முதல் பிரதி மாதம் ரூ.**400/–**லிருந்து ரூ.**1,000/–**ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் **20,456** கைத்தறி நெசவாளர்கள் பயனடைந்து வருகின்றனர். தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டு வந்த குடும்ப ஓய்வூதியத் தொகையும் **01.01.2012** முதல் பிரதி மாதம் ரூ.**550/–**லிருந்து ரூ.**1,000/–** ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் **1,486** குடும்பங்கள் பயனடைந்து வருகின்றனர்.

## 4.9 கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் பங்கு உயர்த்தி வழங்குதல்

கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் **1985–1986–**ஆம் ஆண்டு முதல் **2006–2007–**ஆம் ஆண்டு வரை நெசவாளர்கள் ஈட்டிய கூலியில் ஒரு ரூபாய்க்கு **4** பைசா வீதம் மத்திய அரசால் வழங்கப்பட்டு வந்த மத்திய அரசின் பங்குத்தொகை **01.04.2007** முதல் நிறுத்தப்பட்டது. மத்திய அரசின் பங்குத் தொகை நிறுத்தப்பட்டதால் கைத்தறி நெசவாளர்கள் ஈட்டும் கூலியில்

மாநில அரசு தனது பங்கினை 12.07.2012 முதல் ஒரு ரூபாய்க்கு 4 பைசாவிலிருந்து 8 பைசாவாக உயர்த்தி வழங்கி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 71,842 நெசவாளர்கள் பயனடைந்து வருகின்றனர்.

### 4.10 மாதாந்திர அடிப்படையில் வட்டி மானியம் வழங்குதல்

வட்டி மானியத்தை தீர்வு செய்யும் நடவடிக்கையினை விரைவுப்படுத்தும் நோக்கில், கைத்தறி நெசவாளர் சங்கங்களுக்கு காலாண்டு அடிப்படையில் வழங்கப்பட்டு வந்த வட்டி மானியம் வழங்கப்படும் நடைமுறை, நவம்பர் 2012 முதல் மாதந்தோறும் வழங்கப்படும் வகையில் மாற்றம் செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. தவிர, வட்டி மானியம் ஒப்பளிப்பு செய்ய, கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

### 4.11 சிறந்த நெசவாளர்களுக்கான விருது

நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாகவும், அதிக உற்பத்தி மற்றும் விற்பனைக்கு ஆதரவினை பெற்றுத்தந்த சிறந்த நெசவாளரை ஊக்குவிக்கும் வகையிலும், ரூ.1.00 இலட்சம் ரொக்கப் பரிசு வழங்கும் திட்டத்தினை 2013–2014 ஆம் ஆண்டில் அரசு அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின்கீழ் 2013–2014 ஆம் ஆண்டில் சிறந்த நெசவாளருக்கான விருது ரூ. 1.00 இலட்சம்

பரிசுத்தொகை திருபுவனம் பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்க நெசவாளருக்கு வழங்கப்பட்டது. அதே போல் **2014–2015–**ஆம் ஆண்டிற்கான பரிசு திருபுவனம் சோழன் பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்க நெசவாளருக்கு வழங்கப்பட்டது.

### 4.12 ஆயத்த ஆடை பயிற்சி –உதவித் தொகை

ஆயத்த ஆடை தொழிலில் வளர்ந்து வரும் முன்னேற்றத்திற்கும், தொழில் நுட்ப ரீதியிலான வளர்ச்சிக்கும், ஈடுகட்டும் வகையில் ஆயத்த ஆடை பயிற்சி மற்றும் வடிவமைப்பு மையங்களில் ஜவுளித்துறை தொடர்புடைய தேவையான பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. கிராமப்புற மற்றும் நகர்ப்புற இளைஞர்களுக்கு ஜவுளி, ஆயத்த ஆடை, கைத்தறி, கைவினைப்பொருட்கள், சணல், பட்டு வளர்ச்சி மற்றும் தொழில்நுட்ப துறைகளில் வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தரும் வகையில், ஆயத்த ஆடை பயிற்சி மற்றும் வடிவமைப்பு மையங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. தற்பொழுது மாநிலத்தில் 16 இடங்களில் ஆயத்த ஆடை பயிற்சி மற்றும் வடிவமைப்பு மையங்கள் உள்ளன. இந்த பயிற்சியில் வெற்றிகரமாக பயிற்சியை முடிக்கும் பயிற்சியாளர்களுக்கு **45** நாட்கள் பயிற்சி காலம் முடிந்தவுடன் ஒரு பயிற்சியாளருக்கு தலா ரூ.**2000/–**வீதம் ஊக்கத்தொகை வழங்கப்படும் என ஒரு திட்டத்தினை அரசு அறிவித்துள்ளது. மாநில அரசு

2014-2015-ஆம் ஆண்டு, 1891 பயிற்சியாளர்களுக்கு தலா ரூ.2000/– வீதம் ஊக்கத்தொகை வழங்க ரூ.37.82 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது.

## 4.13 கூட்டுறவு நூற்பாலை மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் வாரிசுகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்குதல்

கூட்டுறவு நூற்பாலைகள் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலையில் பணிபுரியும் தொழிலாளர்களின் வாரிசுகளை ஊக்குவிக்கும் பொருட்டு, பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புகளில் அதிக மதிப்பெண் பெறும் தொழிலாளர்களின் வாரிசுகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் கீழ் பத்தாம் வகுப்பில் முதல் மூன்று நிலைகளில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணாக்கர்களுக்கு முறையே ரூ.5,000, ரூ.3,000, ரூ.2,000 வீதம் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. இதே போல் பன்னிரெண்டாம் வகுப்பில் முதல் மூன்று நிலைகளில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணாக்கர்களுக்கு முறையே ரூ.10,000, ரூ.7,500, ரூ.5,000 வீதம் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

## 4.14 பெருநகரங்களில் கைத்தறி கண்காட்சி நடத்துதல்

இத்துறையின் சிறப்பு முயற்சியாக, கைத்தறி இரகங்களின் விற்பனையை மேம்படுத்துவதற்காக **5** பெருநகரங்களில் கைத்தறி கண்காட்சிகள் நடத்த திட்டமிட்டது. இக்கைத்தறி கண்காட்சிகள் நடத்தப்படுவதன் அடிப்படை குறிக்கோள், நேர்த்தியான கைத்தறி ரகங்களை ஒருங்கிணைத்து ஒரு சாளரத்தின் கீழ் விற்பனை செய்தல் மற்றும் சந்தையினை விரிவுபடுத்துதலுடன், கைத்தறி துணிகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்றவை ஆகும். **2014–2015**–ஆம் ஆண்டில் கைத்தறி கண்காட்சி, **5** பெருநகரங்களில் நடத்துவதற்காக அரசு தலா ரூ. **8.00** இலட்சம் வீதம் மொத்தம் ரூ. **40.00** இலட்சம் ஒப்பளித்துள்ளது. கண்காட்சி நடைபெற்ற காலம் மற்றும் விற்பனை விவரங்கள் பின்வருமாறு: –

| வ. எண். | பெருநகரம் இடம் | தேதி | விற்பனை (ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | புதுடில்லி | 26.02.2015 முதல் 08.03.2015 | 62.55 |
| 2 | கொல்கத்தா | 06.03.2015 முதல் 15.03.2015 | 79.98 |
| 3 | மும்பை | 11.03.2015 முதல் 19.03.2015 | 55.89 |
| 4 | பெங்களூரு | 20.03.2015 முதல் 29.03.2015 | 85.15 |
| 5. | ஐதராபாத் | 01.05.2015 முதல் 10.05.2015 | 63.42 |




**26.02.2015 அன்று புதுடில்லியில் நடைபெற்ற கைத்தறி கண்காட்சியின் துவக்க விழா**

## 4.15 பட்டு தறிகளை மேம்படுத்தும் உதவி திட்டம்

காஞ்சிபுரம், சேலம், கும்பகோணம், திருவண்ணாமலை, கடலூர், திருச்செங்கோடு மற்றும் திருவாரூர் பகுதிகளில் பட்டு நெசவு பிரதான தொழிலாக விளங்குகிறது. பட்டு தொழிலில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களின் வேலைப்பளுவினை குறைத்து உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு இந்த பட்டு தறிகளில் தறி உபகரணங்களான ஜக்கார்டு பெட்டி, டாபி, மின் மோட்டார் பொருத்திய தார் சுற்றும் இயந்திரங்கள் போன்ற உபகரணங்களை வழங்க இந்திய அரசின் ஜவுளி அமைச்சகத்தின் கீழ் இயங்கும் மத்திய பட்டு வாரியமும், மாநில

அரசும் இணைந்து 50:50 என்ற விகிதத்தில் ஒரு நெசவாளருக்கு ரூ.10000/– வரை நிதியுதவி அளித்து வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2014–2015– ஆம் ஆண்டில் 20 தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்களை சேர்ந்த 1239 பட்டு நெசவாளர்கள் பயனடைந்துள்ளனர்.

## 4.16 வடிவமைப்பு மேம்பாடு மற்றும் இரக மாற்றம்

கைத்தறி நெசவாளர்களின் வருவாய் ஈட்டும் திறனை அதிகரிக்கும் நோக்கத்தில், சந்தையில் விற்பனை ஆகக் கூடிய துணி வகைகள் மற்றும் விலை மதிப்பு கூட்டப்பட்ட ரகங்களான வீட்டு உபயோகத் துணிகள், மிதியடி விரிப்புகள், ஆயத்த ஆடைகள், சமையலறை துணிகள் இதர உபயோகிப்பு பொருட்கள் போன்ற துணி வகைகள் உற்பத்தி செய்தலுக்கு மாற்றம் செய்யும் வகையில் நெசவாளர்களை துறை ஊக்குவித்து வருகின்றது.

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களால் உற்பத்தி செய்யப்பட்டு வரும் கைத்தறி துணி வகைகளின் விற்பனையினை மேம்படுத்துவதற்காக சென்னையிலுள்ள தேசிய ஆடை அலங்கார தொழில்நுட்ப நிலையம் மூலம் 500 புதிய வடிவமைப்புகள் உருவாக்கப்பட்டன. இப்புதிய வடிவமைப்புகள் சேலைகளின் உற்பத்திக்காக பரமக்குடி, நெகமம் (கோயம்புத்தூர்), வனவாசி (சேலம்), வடமணப்பாக்கம் (திருவண்ணாமலை), ஆரணி (திருவண்ணாமலை) மற்றும்

சின்னாளப்பட்டி (திண்டுக்கல்) பகுதிகளில் உள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு விநியோகிக்கப்பட்டன. இப்பகுதிகளில் உள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், இப்புதிய வடிவமைப்புகளுடன் கூடிய துணி வகைகளை தொடர்ந்து உற்பத்தி செய்து வெளிச்சந்தையில் விற்பனை செய்து வருகின்றன.

## 4.17 அண்ணா கூட்டுறவு நூற்பாலை, ஆண்டிப்பட்டியில் பொது தரப்பரிசோதனை மையம் அமைத்தல்

நூலின் நிர்ணயிக்கப்பட்ட தரத்தை உறுதி செய்ய, கூட்டுறவு நூற்பாலைகளில் கொள்முதல் செய்யும் பஞ்சு மற்றும் நூலின் தரம் ஆகியவை பரிசோதிக்கப்படுகிறது. பொது தரப் பரிசோதனை மையம் ஆண்டிப்பட்டியில் உள்ள அண்ணா கூட்டுறவு நூற்பாலையில் ரூ.65.00 இலட்சம் செலவில் நிறுவப்பட்டு, இந்த மையமானது 10.07.2014 முதல் செயல்பட்டு வருகிறது. பஞ்சு மற்றும் நூல் தரப் பரிசோதனைக்கு இந்த பரிசோதனை மையத்தினை, கூட்டுறவு நூற்பாலைகள் மற்றும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் பயன்படுத்தி வருகின்றன.



பொது நூல் தரப்பரிசோதனை மையம், அண்ணா கூட்டுறவு நூற்பு ஆலை.

## 4.18 ஈரோட்டிலுள்ள தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலையினை மீண்டும் திறத்தல் மற்றும் நவீனப்படுத்துதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 10.06.2011 அன்று ஈரோட்டில் மூடிக் கிடந்த தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை, மீள திறக்கப்பட்டது. இந்த ஆலை 2012–2013–ஆம் ஆண்டில் ரூ.3.26 கோடியும், 2013–2014–ஆம் ஆண்டில் ரூ.1.24 கோடியும் இலாபம் ஈட்டியுள்ளது.

இவ்வாலை, வெளுத்தல், சாயமிடல், மெருகேற்றல் மற்றும் அச்சிடல் ஆகிய பதனிடும் பணிகளை மேற்கொண்டு வருகிறது. இவ்வாலை, ஒரு நாளைக்கு சுமார் 50000 மீட்டர் துணிகளை பதனிடும் திறன் பெற்றுள்ளது. இவ்வாலையின்

பதனிடும் திறனை ஒரு நாளைக்கு 70000 மீட்டர் அளவிற்கு அதிகரிக்கும் நோக்கத்தோடு, ஆலையின் இயந்திரங்களை நவீனப்படுத்தும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்து, ரூ.5.82 கோடி ஒப்பளிப்பு செய்துள்ளது. அதனடிப்படையில், இவ்வாலையில் பருத்தி துணி சாயம் தோய்க்கும் இயந்திரம், துணி மடிப்பு இயந்திரம், ஸ்டென்ட்டர் இயந்திரம், நீராவி கொதிகலன் மற்றும் எண்ணெய் கொதிகலன் போன்ற புதிய இயந்திரங்கள் நிறுவப்பட்டு இவ்வாலை நவீனப்படுத்தப்பட்டது. இவ்வாலை சோதனை உற்பத்தியினை 01.03.2015 முதல் தொடங்கியுள்ளது. இவ்வாலை தற்போது நாள் ஒன்றுக்கு 70000 மீட்டர்கள் அளவிற்கு துணிகளை பதனிட்டு வருகிறது. தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலையானது தற்போது விலையில்லா வேட்டி, சேலை திட்டம் மற்றும் விலையில்லா சீருடை வழங்கும் திட்டங்களுக்குத் தேவையான அதிக அளவிலான துணிகளை பதனிடும் அளவிற்கு அதிக திறனை பெற்றுள்ளது.



ஈரோடு, தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலையில் நிறுவப்பட்ட புதிய ஸ்டென்ட்டர் இயந்திரம்

## 4.19 கூட்டுறவு நூற்பாலைகளுக்கு நிதி உதவி வழங்குதல்

- தொழிலாளர் வருங்கால வைப்புநிதி போன்ற சட்டப்பூர்வ நிலுவைகள் மற்றும் இதர நிலுவைகளை தீர்வு செய்ய ஏதுவாக, 5 இயங்கும் கூட்டுறவு நூற்பாலைகளுக்கு 2012 முதல் 2014 முடிய மொத்தம் ரூ.863.43 இலட்சங்களை வழிவகை கடன் உதவியாக அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது.
- தொழிலாளர் வருங்கால வைப்புநிதி போன்ற சட்டப்பூர்வ நிலுவைகள் மற்றும் இதர நிலுவைகளை தீர்வு செய்ய ஏதுவாக, இயங்காத கூட்டுறவு நூற்பு ஆலைகளுக்கு 2012 முதல் 2015 முடிய மொத்தம்

ரூ.**9226.44** இலட்சங்களை வழிவகை கடன் உதவியாக அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது.

**4.20 கூட்டுறவு நூற்பாலைகளை நவீனப்படுத்துதல்**

இயங்கும் ஐந்து கூட்டுறவு நூற்பாலைகளை புனரமைப்பதற்காகவும், முழுமையாக நவீனப் படுத்துவதற்காகவும் தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகத்தின் கடனுதவியுடன் அங்கீகரிக்கப்பட்ட திட்ட தொகையான ரூ.**104.41** கோடியுடன் **2014–2015**–ஆம் ஆண்டில் கூடுதலாக ரூ.**42.80** கோடியினையும் சேர்த்து அரசு மொத்தம் ரூ.**147.21** கோடி நிதியுதவி வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் நவீனப்படுத்தும் பணிகள் **5** கூட்டுறவு நூற்பாலைகளான அண்ணா, பாரதி, புதுக்கோட்டை, கன்னியாகுமரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலைகளில் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. நவீனப்படுத்தும் காலங்களில் ஆலை தொடர்ந்து செயல்படும் விதத்தில் நவீனப்படுத்தும் பணிகளானது இரு கட்டங்களாக பிரிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. முதற்கட்ட பணிகள் முடிக்கப்பட்டு, இரண்டாம் கட்ட பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.



பாரதி கூட்டுறவு நூற்பாலை –பஞ்சு பொதி பக்குவப்படுத்தும் அறை



கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை – பஞ்சு பிரிக்கும் அறை



கிருஷ்ணகிரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை – பஞ்சினை திரிக்கும் பிரிவு



அண்ணா கூட்டுறவு நூற்பாலை – நூற்புப்பிரிவு




புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை – பஞ்சு – நூல் நூற்புப் பிரிவு

## 4.21 இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலையினை நவீனமயமாக்கி மீண்டும் திறத்தல்

மூடியிருந்த இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலையினை முழுமையாக நவீனப்படுத்துவதற்காக அங்கீகரிக்கப்பட்ட திட்ட மதிப்பீடான ரூ.18.43 கோடியுடன் 2014–2015–ஆம் ஆண்டில் கூடுதலாக அரசு மேலும் ரூ.9.59 கோடியினையும் சேர்த்து (மொத்தம் ரூ.28.02 கோடி) நிதியினை ஒப்பளித்துள்ளது. அதன் அடிப்படையில் இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலையானது நவீனப்படுத்தப்பட்டு,

மீண்டும் திறக்கப்பட்டு தனது சோதனை ஓட்ட உற்பத்தியை 04.03.2015 முதல் துவக்கியுள்ளது.



**இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை – தானியங்கி கோன் நூல் இயந்திரம்**

நவீனப்படுத்திய பின்னர் ஆறு (6) கூட்டுறவு நூற்பாலைகளின் உற்பத்தி திறன் மற்றும் நூல்களின் தரம் பன்மடங்கு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த 6 இயங்கும் கூட்டுறவு நூற்பாலைகள் மூலம் அரசின் விலையில்லா வேட்டி, சேலை திட்டம் மற்றும் விலையில்லா சீருடை திட்டம் ஆகியவற்றிற்கான நூல் தேவைகளை பெருமளவு பூர்த்தி செய்யப்படும்.

## 4.22 தானியங்கி நாடா இல்லா விசைத்தறிகள் நிறுவுதல்

கோயம்புத்தூரிலுள்ள தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தில் உற்பத்தி செய்யப்படும் துணிகளின் தரத்தை மேம்படுத்தவும், உற்பத்தியை அதிகரிக்கவும், இக்கழகத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பு வழங்கிடவும், 10 நாடா இல்லாத தறிகள் நிறுவுவதற்கு அரசால் ரூ.4.78 கோடி தொகை கடனாக ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் 10 நாடா இல்லாத தறிகள் நிறுவப்பட்டு மார்ச் 2015 முதல் இவ்வாலையின் சோதனை உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது . இதன் மூலம் தமிழ்நாடு பஞ்சாலை கழகம் தரம் வாய்ந்த துணிகள் மற்றும் அதிகளவு சீருடைத் துணிகளை உற்பத்தி செய்ய உதவும்.



**தமிழ் நாடு பஞ்சாலைக் கழகம் , கோயம்புத்தூரில் நிறுவப்பட்டுள்ள புதிய தானியங்கி நாடா இல்லா விசைத்தறி**

## 4.23 பொது வசதி மையம்கள்

அரசு, ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சி திட்டத்தினை மத்திய அரசு நிதியுதவியுடன் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு 49 சிறிய அளவிலான கைத்தறி குழுமங்கள் அமைக்க ஒப்புதல் வழங்கியுள்ளது. கைத்தறி குழும வளர்ச்சித் திட்டத்தில், பொது வசதி மையம் ஓர் அங்கமாகும். மொத்தமுள்ள 49 கைத்தறி குழுமங்களில், 41 பொது வசதி மையங்கள் கட்டுமானத்திற்காக மத்திய அரசால் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி, பொது வசதி மையங்கள் கட்டப்பட்டுள்ளன.

பொது வசதி மையங்களின் விவரம் கீழ்கண்டவாறு:

(ரூபாய் லட்சத்தில் )

| வ. எண் | பொது வசதி மையத்தின் பெயர் | மாவட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| செயல்படுத்தும் நிறுவனம் : கோ–ஆப்டெக்ஸ் | | | |
| 1 | சிறுமுகை | கோயம்புத்தூர் | 19.70 |
| 2 | பழநி | திண்டுக்கல் | 19.70 |
| 3 | ஆப்பக்கூடல் | ஈரோடு | 19.70 |
| 4 | தாண்டம்பாளையம் | ஈரோடு | 19.70 |
| 5 | நிலையூர் | மதுரை | 19.70 |
| 6 | ஜெயங்கொண்டம் | பெரம்பலூர் | 19.70 |
| 7 | பாதிரிவேடு | திருவள்ளூர் | 19.70 |
| 8 | சோளிங்கர் | வேலூர் | 19.70 |
| 9 | கண்டாச்சிபுரம் | விழுப்புரம் | 19.70 |
| | | மொத்தம் | 177.30 |
| செயல்படுத்தும் நிறுவனம் : கைத்தறி மற்றும் துணிநூல் துறை | | | |
| 10 | புதுப்பேட்டை | கடலூர் | 13.75 |
| 11 | சின்னாளப்பட்டி | திண்டுக்கல் | 30.00 |

| | | | |
|---|---|---|---|
| 12 | டி.ஜி.புதூர் | ஈரோடு | 30.00 |
| 13 | சென்னிமலை | ஈரோடு | 30.00 |
| 14 | பள்ளியாடி | கன்னியாகுமரி | 17.45 |
| 15 | வெங்கமேடு | கரூர் | 21.75 |
| 16 | வண்டியூர் | மதுரை | 24.50 |
| 17 | எமனேஸ்வரம் | ராமநாதபுரம் | 23.00 |
| 18 | எடப்பாடி | சேலம் | 29.00 |
| 19 | ஆட்டையாம்பட்டி | சேலம் | 27.50 |
| 20 | திருபுவனம் | தஞ்சாவூர் | 10.75 |
| 21 | திருப்பூர் | திருப்பூர் | 30.00 |
| 22 | சாயர்புரம் | தூத்துக்குடி | 23.75 |
| 23 | குடியாத்தம் | வேலூர் | 29.25 |
| 24 | புனல்வேலி | விருதுநகர் | 30.00 |
| 25 | செங்குந்தபுரம் ஸ்ரீ சுந்தர விநாயகர் | அரியலூர் | 16.76 |
| 26 | வதம்பசேரி | கோயம்புத்தூர் | 18.77 |
| 27 | காஞ்சிக்கோவில் | ஈரோடு | 30.00 |
| 28 | பவானி | ஈரோடு | 28.50 |
| 29 | பள்ளக்காட்டுப்புதூர் | ஈரோடு | 28.00 |
| 30 | முருகன் | ராமநாதபுரம் | 29.75 |
| 31 | பாளையங்கோட்டை | திருநெல்வேலி | 22.75 |
| 32 | பாண்டியன்நகர் | திருப்பூர் | 30.00 |
| | | **மொத்தம்** | **575.23** |
| **செயல்படுத்தும் நிறுவனம் : தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் லிட்.,** | | | |
| 33 | பொள்ளாச்சி | கோயம்புத்தூர் | 19.55 |
| 34 | நடுவீரப்பட்டு | கடலூர் | 11.05 |
| 35 | தொட்டாம்பாளையம் | ஈரோடு | 18.00 |
| 36 | பிள்ளையார்பாளையம் | காஞ்சிபுரம் | 15.45 |
| 37 | பரமத்திவேலூர் | நாமக்கல் | 29.55 |
| 38 | அய்யம்பேட்டை | தஞ்சாவூர் | 11.00 |
| 39 | ஸ்ரீவில்லிப்புத்தூர் | விருதுநகர் | 22.25 |
| | | **மொத்தம்** | **126.85** |
| **செயல்படுத்தும் நிறுவனம் : நெசவாளர் சேவை மையம்** | | | |
| 40 | எஸ்ஸாலம் | கடலூர் | 18.00 |
| 41 | தாதகாப்பட்டி | சேலம் | 10.50 |
| | | **மொத்தம்** | **28.50** |

(ரூபாய் லட்சத்தில்)

| சுருக்கம் | | |
|---|---|---|
| 1 | கோ–ஆப்டெக்ஸ் | 177.30 |
| 2 | கைத்தறி மற்றும் துணிநூல் துறை | 575.23 |
| 3 | தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் லிட்., | 126.85 |
| 4 | நெசவாளர் சேவை மையம் | 28.50 |
| ஆக மொத்தம் | | 907.88 |

மேற்கண்ட பொது வசதி மையங்கள், நெசவாளர்களுக்கான அடிப்படை உட்கட்டமைப்பு, கிடங்கு, அலுவலகம், சாயம் தோய்க்கும் வசதி, பயிற்சி, நெசவுக்கு முந்தைய மற்றும் பிந்தைய பணிகள் போன்றவைகளை வழங்குகின்றன.



**பரமத்திவேலூர் கைத்தறி குழும பொது வசதி மையம்**

## 4.24 ஒருங்கிணைந்த பதனிடுதல் மேம்பாட்டுத் திட்டம்

நீர் ஆதாரம், பாதுகாப்பான சுத்திகரிப்பு, திரவக் கழிவுகள் மற்றும் திடக் கழிவுகளை உண்டாக்குதல் உட்பட பல பிரச்சனைகளை ஜவுளி பதனிடும் தொழில் சந்தித்து வருகிறது. சாயம் மற்றும் சலவை தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் சாயக் கழிவுகளால் பெரிய அளவில் சுற்றுச்சூழல் பிரச்சனைகள் ஏற்படுகின்றன. பதனிடும் தொழிற்சாலை (ஜவுளி) களிலிருந்து வெளியேறும் கழிவுநீர் சார்ந்த இன்னல்களால், ஜவுளி தொழில் மதிப்பு சங்கிலியில் பலவீனமானதாக கருதப்பட்டு, சில பதனிடும் தொழிற்சாலைகள் நீதிமன்றத்தின் தலையீட்டின் காரணமாக மூடப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. மேலோங்கி இருக்கும் இப்பிரச்சனைகளை பதனிடும் தொழிற்சாலைகள் சந்தித்து வருவதை எதிர்கொள்ளும் வகையில், மைய அரசு "ஒருங்கிணைந்த பதனிடும் மேம்பாட்டுத் திட்டம்" என்ற புதிய திட்டத்தினை நடைமுறைப்படுத்தியுள்ளது.

ஜவுளி துறையில் தரமான சுற்றுச்சூழல் மற்றும் தொழில்நுட்பத்தினை ஏற்படுத்தி உலகளாவிய போட்டியினை எளிதாக எதிர்கொள்வதே ஒருங்கிணைந்த பதனிடும் மேம்பாட்டு திட்டத்தின் முதன்மை நோக்கமாகும். இத்திட்டம், புதிய பதனிடுதல் பூங்காக்களை உருவாக்குவதுடன் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்ட பதனிடும் குழுமங்களை மேம்படுத்த, குறிப்பாக,

பதனிடும் தொழிலுக்கு நீர் மற்றும் கழிவுநீர் மேலாண்மை பிரிவுகளை மேம்படுத்தவும் ஆதரவு அளிக்கிறது. தமிழக அரசு திட்ட வழிகாட்டுதலின்படி தேவையான நிதி உதவி / மாநில அரசின் பங்கு ஆகியவற்றை அளிப்பதன் மூலம் இத்தகைய செயற்குறிப்புகளை ஆதரிக்க முன் வந்துள்ளது. தமிழக அரசு, இத்தகைய திட்டங்களுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் பூஜ்ய கழிவுநீர் திட்டத்திற்கு மைய அரசின் பங்களிப்பில் 25 விழுக்காட்டினை மாநில அரசு மானியமாக வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

**4.25 கைத்தறி நெசவாளர்களுக்கு அடையாள அட்டை வழங்குதல்**

மத்திய மற்றும் மாநில அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் கைத்தறி நெசவாளர்களுக்கு கிடைக்க வழிவகை செய்யும் பொருட்டு, நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு “ அடையாள அட்டை” வழங்க அரசு ஆணை வழங்கியுள்ளது. அதனடிப்படையில் 2013–2014–ஆம் ஆண்டில் 1,06,922 கைத்தறி நெசவாளர்களுக்கு அடையாள அட்டைகள் ரூ.28.60 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

**4.26 நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கான தேர்தல்**

இந்திய அரசியலமைப்பு (97வது திருத்தம்) சட்டம் 2011–இன்படி அனைத்து கூட்டுறவு சங்கங்களும்

தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக குழுவால் நிர்வாகம் செய்யப்படவேண்டும். கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் பிரதம, மத்திய மற்றும் தலைமை கூட்டுறவு சங்கங்களுக்கு மூன்று கட்டங்களாக மார்ச் **2013** முதல் ஜூலை **2013** வரை தேர்தல் நடைபெற்றது. மூன்று கட்டங்களாக பிரதம, மத்திய மற்றும் தலைமை கூட்டுறவு சங்கங்களுக்கு தேர்தல் நடைபெற்றது குறித்தான விவரங்கள் பின்வருமாறு.

| **நிலை** | **நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் வகைப்பாடு** | **தேர்தல் நடைபெற்ற நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை** | **தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழு பதவி ஏற்ற நாள்** |
|---|---|---|---|
| முதல் நிலை | பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் | **1345** | **9.5.2013** |
| இரண்டாம் நிலை | மத்திய வகை கூட்டுறவு சங்கங்கள் | **20** | **11.6.2013** |
| மூன்றாம் நிலை | தலைமை வகை கூட்டுறவு சங்கங்கள் | **3** | **17.7.2013** |
| **மொத்தம்** | | **1368** | |

### 4.27 கைத்தறி நெசவாளர்களுக்கு கூலி உயர்வு வழங்குதல்

நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலுள்ள தொழில் செய்து வரும் கைத்தறி நெசவாளர்களுக்கு அவரவர் உற்பத்தி செய்யும்

துணி இரகங்களின் அடிப்படையில் கூலி வழங்கப்பட்டு வருகிறது. அவ்வப்போது உயர்ந்து வரும் அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசியினை ஈடுசெய்யும் வகையில், கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களைச் சார்ந்த கைத்தறி நெசவாளர்களுக்கு **10** விழுக்காடு கூலி உயர்வு வழங்கப்பட்டு வருகிறது. அரசு கடந்த நான்காண்டுகளில் அதாவது **2011, 2012, 2013** மற்றும் **2014** முதல் **10** விழுக்காடு கூலி உயர்வு வழங்குவதற்கு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது. அதனடிப்படையில் கைத்தறி நெசவாளர்கள் உயர்த்தப்பட்ட கூலியினை பெற்று வருகிறார்கள்.

### 4.28 நெசவாளர்களுக்கு நெசவுக்கு முந்தைய பணிகளுக்கான கூடுதல் கூலி வழங்குதல்

விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்ட உற்பத்தி பணியில் ஈடுபட்டுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு, நெசவுக்கு முந்தைய பணிகளுக்காக சேலை ஒன்றுக்கு **ரூ.20.50** மற்றும் வேட்டி ஒன்றுக்கு **ரூ.10.30**உம் கூடுதல் கூலியாக **2012–2013**–ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. இதன் விளைவாக **11,000** கைத்தறி நெசவாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் பயனடைந்து வருகிறார்கள்.



**நெசவுக்கு முந்தையப் பணி**

இதர இரகங்களான பருத்தி மற்றும் பட்டு சேலைகள், லுங்கிகள், டவல்கள் மற்றும் படுக்கை விரிப்புகளை நெய்து வரும் கைத்தறி நெசவாளர்களுக்கும் ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் நெசவுக் கூலியுடன், **01.11.2014** முதல் பாவு சுற்றுதல், பசை போடுதல் மற்றும் நூல் சுற்றுதல் போன்ற நெசவுக்கு முந்தைய பணிகளுக்காக தனியாக நெசவுக்கு முந்தைய கூலி வழங்கப்பட்டு வருகிறது.



நெசவுக்கு முந்தையப் பணி

**4.29 தொகுப்பூதிய அடிப்படையில் பணிபுரியும் நெசவாளர் கூட்டுறவு சங்க பணியாளர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியம் நிர்ணயம் செய்தல் மற்றும் நெசவாளர் கூட்டுறவு சங்க பணியாளர்களின் ஊதியத்தை திருத்தம் செய்ய ஊதியக் குழு அமைத்தல்**

நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் பணிபுரிந்து வரும் தற்காலிக பணியாளர்களின் கோரிக்கையினை ஏற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 10 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்துவரும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் தற்காலிக பணியாளர்களுக்கு காலமுறை ஊதியம் நிர்ணயம் செய்யப்படும் என அறிவித்தார்கள். அதன்படி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் தொகுப்பூதிய அடிப்படையில் 10 ஆண்டுகளுக்கு

மேல் பணிபுரிந்து வந்த **424** பணியாளர்களுக்கு **01.01.2013** முதல் சிறப்பு காலமுறை ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

மேலும், நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் பணிபுரிந்து வரும் பணியாளர்களின் ஊதியம் **01.01.2008** முதல் திருத்தம் செய்யப்பட்டது. முந்தைய ஊதிய உயர்வு அளிக்கப்பட்டு, **5** ஆண்டுகள் **31.12.2012** உடன் முடிவடைந்த நிலையில், நெசவாளர் கூட்டுறவு சங்க பணியாளர் சங்கங்களிடமிருந்து ஊதியக் குழு அமைக்குமாறும், **01.01.2013** முதல் ஊதியத்தை திருத்தி வழங்குமாறும் கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளன. நெசவாளர் கூட்டுறவு சங்க பணியாளர் சங்கங்களின் கோரிக்கைகளை பரிசீலித்து தீர்வு காணும் பொருட்டு ஊதியக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

### 4.30 கூட்டுறவு நூற்பாலைகளின் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களின் ஊதியத்தை திருத்தி அமைத்தல்

கூட்டுறவு நூற்பாலைகளின் பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களின் ஊதிய விகிதத்தினை மாற்றியமைக்கும் கோரிக்கையினை பரிசீலிக்கும் விதமாக **10.07.2012**–இல் குழு ஒன்று அரசால் அமைக்கப்பட்டது. மேற்படி குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் கூட்டுறவு நூற்பாலைகளின் பணியாளர்களின் ஊதிய விகிதத்தினை மாற்றியமைத்து

12 விழுக்காடுகள் ஊதிய உயர்வுடன் **01.01.2013** முதல் அமல்படுத்தும் வகையில் அரசு ஆணை வழங்கியுள்ளது.

இதே போன்று கூட்டுறவு நூற்பாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் ஊதியத்தினை **01.01.2013** முதல் மாதம் ஒன்றுக்கு **ரூ.1800/–** உயர்வு அளித்து அரசு ஆணை வழங்கியுள்ளது. இதன்மூலம் **5** கூட்டுறவு நூற்பாலைகளில் மொத்தம் உள்ள **1015** தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு நிலுவை தொகையாக ரூபாய் **2.19** கோடி வழங்கப்பட்டுள்ளது.

### 4.31 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களை இலாபத்தில் இயங்கச் செய்தல்

அரசானது, புத்துயிரூட்டல், சீர்திருத்தம் மற்றும் சீரமைப்புத்திட்டத்தை விரிவுபடுத்தியும் நபார்டு வங்கியின் மூலம் குறைந்த வட்டியில் கடன் வசதி செய்து கொடுத்தும், வட்டிப் பளுவினை குறைப்பதற்காக வட்டி மானியம் வழங்கியும், நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு நிதி வசதி செய்துள்ளது. கைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா பெடல்தறி மற்றும் விலையில்லா தார் சுற்றும் இயந்திரம் ஆகிய பல்வேறு உபகரணங்கள் வழங்குதல், தள்ளுபடி மானியம் வழங்குதல், விற்பனை ஊக்குவிப்பு செய்தல் மற்றும் மாநிலத்தின் உள்ளேயும், வெளி மாநிலங்களிலும் கண்காட்சிகள் நடத்துவதற்கு உதவி செய்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டது. மேற்கண்டவாறு அரசினால்

மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் மூலம் **2013–2014–**ஆம் ஆண்டில் **819** ஆக இருந்த இலாபத்தில் இயங்கும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை **2014–2015–**ஆம் ஆண்டில் **946** ஆக அதிகரித்துள்ளது. **2013–2014–**ஆம் ஆண்டில் ரூ.**58.77** கோடி அளவிற்கு இலாபம் ஈட்டியுள்ள சங்கங்கள், **2014–2015–**ஆம் ஆண்டில் ரூ.**67.67** கோடி அளவிற்கு இலாபம் ஈட்டியுள்ளதன் மூலம் மொத்த இலாபம் உயர்ந்துள்ளது.


## 5. துறையால் செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்கள் மற்றும் 2015–2016–ஆம் ஆண்டிற்கான செயல் திட்டங்கள்

### 5.1 விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டம்

விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டம் தமிழக அரசின் மிக சீரியத் திட்டங்களில் ஒன்றாகும். இத்திட்டம், பொங்கல் பண்டிகையின் போது ஏழை எளிய மக்களுக்கு விலையில்லா வேட்டி, சேலைகள் விநியோகம் செய்யும் பொருட்டு ஒவ்வொரு ஆண்டும் அரசால் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களைச் சார்ந்த **11,000** கைத்தறி நெசவாளர்கள் மற்றும் **54,000** விசைத்தறி நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் தொடர் வேலைவாய்ப்பு வழங்கப்படுவதுடன், கிராம மற்றும் நகர்புறங்களில் வசிக்கும் **3.28** கோடி மக்களின் துணித் தேவையினையும் பூர்த்தி செய்கிறது.



**விலையில்லா சேலைகளின் தொகுப்பு**



**விலையில்லா வேட்டிகளின் தொகுப்பு**

இத்திட்டத்தினை செயல்படுத்தும் பொறுப்பு துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. துறை, நூலினை கொள்முதல் செய்தல், வேட்டி சேலைகள் உற்பத்தி, கொள்முதல் மற்றும்

வருவாய்த்துறைக்கு அனுப்புதல் போன்ற பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகிறது.

அரசு இத்திட்டத்தினை பொங்கல் 2016–ஆம் ஆண்டுக்கு தொடர்ந்து செயல்படுத்தும் பொருட்டு, 2015–2016-ஆம் ஆண்டுக்கான வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.499.16 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

## 5.2 பள்ளி சிறார்களுக்கு விலையில்லா சீருடை வழங்கும் திட்டம்


விலையில்லா சீருடை வழங்கும் திட்டத்தினை, டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் பள்ளிச் சிறார்களுக்கு சீருடை வழங்கும் பொருட்டு 1985–1986–ஆம் ஆண்டு முதல் அரசு செயல்படுத்தி வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க நான்கு இணை சீருடைத் துணிகள் 2012–2013–ஆம் கல்வி ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. நெசவாளர் கூட்டுறவு சங்கங்களைச் சார்ந்த 10,000 கைத்தறி நெசவாளர்களுக்கும் மற்றும் 53,000 விசைத்தறி தொழிலாளர்களுக்கும் இத்திட்டத்தின் மூலம் ஆண்டு முழுவதும் தொடர் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்கு தேவையான சீருடைத் துணி இரகங்களான மெரூன் டிரில், லைட் பிரௌன் துப்பட்டா,

லைட் பிரௌன் சர்ட்டிங், மெரூன் சர்ட்டிங் மற்றும் மெரூன் கேஸ்மென்ட் இரகங்கள் கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றன. **2014–2015**–ஆம் கல்வி ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் **572.44** இலட்சம் மீட்டர் சீருடைத் துணி இரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டன. இத்திட்டத்தினை **2014–2015** ஆம் ஆண்டில் செயல்படுத்தும் பொருட்டு அரசு **90** சதவீத முன்பணமாக ரூ.**320** கோடியினை ஒப்பளிப்பு செய்து விடுவித்துள்ளது.

விலையில்லா சீருடை வழங்கும் திட்டத்தினை **2015-2016**–ஆம் கல்வியாண்டில் தொடர்ந்து செயல்படுத்திட அரசு நிர்வாக அனுமதி வழங்கி முன்பணமாக ரூ.**160** கோடியினை ஒப்பளிப்பு செய்துள்ளது. அதன்படி, கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு உற்பத்தி திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை ஆகிய துறைகளுக்கு தேவையான சீருடைத் துணிகளையும், கைத்தறி மற்றும் துணிநூல் துறையே வழங்கி வருகிறது.




**சீருடை திட்டம் 2015–2016**
**துணித்தேவை (அளவு இலட்சம் மீட்டரில்)**



**சீருடை அணிந்துள்ள பள்ளிச் சிறார்கள்**




**ஈரோடு, தமிழ் நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலையில் சீருடைத் துணிகள் பதனிடப்படுகிறது**

2015–2016–ஆம் கல்வி ஆண்டிற்கு பல்வேறு துறைகளுக்கான சீருடைத் தேவைகளின் விவரம் பின்வருமாறு:–

| துறையின் பெயர் | மொத்த சீருடை துணி தேவை (இலட்சம் மீட்டரில்) | மாணாக்கர்களின் எண்ணிக்கை (மாணவர்கள்) |
|---|---|---|
| சமூக நலத்துறை (ஆதி திராவிடர் நலத்துறை உட்பட) | 576.48 | 4547000 |
| மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை | 3.48 | 19040 |
| 4–ஆம் வகுப்பு முதல் 10–ஆம் வகுப்பு முடிய பயிலும் விடுதியில் உள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பை சார்ந்த மாணாக்கர்களுக்கு | 3.71 | 20298 |
| **மொத்தம்** | **583.67** | **4586338** |

## 5.3 தள்ளுபடி மானியத் திட்டம்

தமிழ்நாடு அரசு, கைத்தறித் துணி வகைகளின் விற்பனையை மேம்படுத்திட, தள்ளுபடி மானியத்திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம், தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் ஆகியவற்றின் விற்பனையை அதிகரிக்க உதவுவதோடு கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து நிரந்தர வேலைவாய்ப்பினை உறுதி செய்யவும், கைத்தறித் தொழிலை தனியார் வியாபாரிகளுடன் போட்டியிடக்கூடிய தகுதியுள்ளதாக தயார் செய்யவும் உதவுகிறது.

மாநில அரசு, இத்திட்டத்தின் கீழ், தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மூலம் விற்பனை செய்யப்படும் கைத்தறித் துணிகளின் சில்லறை மற்றும் மொத்த விற்பனைக்கு ஆண்டு முழுவதும் 20 விழுக்காடு தள்ளுபடி மானியம் வழங்கவும், பருத்தி இரகங்களுக்கு உருப்படி ஒன்றுக்கு 20 விழுக்காடு அல்லது ரூ.100/– இதில் எது குறைவோ, அத்தொகை, அதேபோன்று பட்டு துணிகளுக்கு உருப்படி ஒன்றுக்கு 20 விழுக்காடு அல்லது ரூ.200/– இதில் எது குறைவோ, அத்தொகையும் தள்ளுபடி மானியமாக வழங்க அனுமதிக்கிறது.

பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 15 ஆம் தேதி முதல் ஜனவரி 31 ஆம் தேதி வரை 139 நாட்களுக்கு வழக்கமாக வழங்கப்படும் 20 விழுக்காடு தள்ளுபடியுடன், கூடுதலாக 10 விழுக்காடு சிறப்பு தள்ளுபடியும் சேர்த்து 30 விழுக்காடு தள்ளுபடி மானியம் கைத்தறி துணிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. அதாவது, பருத்தி துணி வகைகளுக்கு அதிகபட்சமாக 30 விழுக்காடு அல்லது ரூ.150/– இதில் எது குறைவோ அத்தொகையும், பட்டு துணி வகைகளுக்கு 30 விழுக்காடு அல்லது ரூ.300/– இதில் எது குறைவோ, அத்தொகையும் சிறப்பு தள்ளுபடி மானியமாக அனுமதிக்கப்பட்டு வருகிறது. 2014–2015–ஆம் ஆண்டில் தள்ளுபடி மானியத் திட்டத்தின் கீழ் ரூ.78.455 கோடி தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம், 2015–2016–ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்காக வரவு செலவு திட்டமதிப்பீட்டில் ரூபாய் 78.455 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.4 வட்டி மானியத் திட்டம்

தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் நபார்டு வங்கி மறு நிதியுதவித் திட்டத்தின் கீழ் நடைமுறை மூலதனக் கடன்களைப்

பெற்று வருகின்றன. கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் காசுக்கடனுக்கு செலுத்த வேண்டிய வட்டிச் சுமையினைக் குறைக்கும் நோக்கத்திலும், கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு வழங்கவும், வட்டி மானியத் திட்டம் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளால் நிர்ணயிக்கப்படும் வட்டி விகிதத்தில் 4 விழுக்காடு வட்டித் தொகை மானியமாக அரசால் திரும்ப வழங்கப்பட்டு வருகிறது. வட்டிமானியத் தொகையினை விரைவாக வழங்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, மூன்று மாதத்திற்கு ஒருமுறை வழங்கப்பட்டு வந்த இந்த வட்டி மானியத் தொகை நவம்பர் 2012 முதல் ஒவ்வொரு மாதமும் வழங்க ஆணையிட்டுள்ளதோடு, வட்டிமானியத் தொகையினை ஒப்பளிப்பு செய்யும் அதிகாரத்தை கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநருக்கு அரசு வழங்கியுள்ளது.

2014–2015–ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு ரூ.10.50 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம், 2015-2016-ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதற்கென 2015–2016–ஆம்

ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 10.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.5 விரிவாக்கப்பட்ட கைத்தறி வளர்ச்சித் திட்டம்**

மத்திய அரசு கைத்தறி நெசவாளர்களை மேம்படுத்த வேண்டும் என்ற முக்கிய நோக்கத்துடன், ‘‘விரிவாக்கப்பட்ட கைத்தறி வளர்ச்சித் திட்டம்’’ என்ற புதிய திட்டத்தை 12வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டமானது மத்திய அரசின் பதினோராவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டம் (IHDS), விற்பனை மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு திட்டம் (MEPS), மற்றும் பரவலாக்கப்பட்ட கைத்தறி வளர்ச்சி திட்டம் (DHDS) ஆகிய திட்டங்களில் அடங்கியுள்ள பிரதான உட்கூறுகளை ஒருங்கிணைத்து உருவாக்கப் பட்டதாகும்.

இத்திட்டமானது, தேவை அடிப்படையில் கைத்தறியின் ஒருங்கிணைந்த ஒட்டுமொத்த முன்னேற்றம் மற்றும் கைத்தறி நெசவாளர்களின் நலனுக்கான அணுகுமுறையை பின்பற்றும். இத்திட்டம், கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள நெசவாளர்கள், கூட்டுறவு அமைப்பின் கீழ் அல்லாத நெசவாளர்கள், சுய உதவிக் குழு மற்றும் அரசு சாரா அமைப்பின் கீழ் உள்ள நெசவாளர்களுக்கு மூலப் பொருட்கள், வடிவமைப்பு புகுத்துதல்,

தொழில்நுட்ப மேம்பாடு, கண்காட்சிகள் மூலம் சந்தை விற்பனைக்கு ஆதரவு அளித்தல், நிரந்தர உட்கட்டமைப்பு வசதிகள் கொண்ட நகர விற்பனை மையம், விற்பனை வளாகங்கள், நெசவாளர் சேவை மையங்கள் மற்றும் இந்திய கைத்தறி தொழில் நுட்ப நிறுவனம் அமைத்தல், கைத்தறி துணிகளின் விற்பனைக்காக இணையதளம் அமைத்தல் போன்ற இனங்களுக்கு தேவையின் அடிப்படையில் அணுகி இத்திட்டம் ஆதரவு அளிக்கும். இத்திட்டம் பின்வரும் இனங்களை உள்ளடக்கியது.

### 5.5.1 குழுமங்களை தொகுத்தல் திட்டம் (Consolidation of Clusters)

300 முதல் 500 வரையிலான கைத்தறிகளைக் கொண்ட குழுமங்கள் "தொகுத்தலுக்கு" உட்படுத்தப்படும். தனிப்பட்ட முகமை/குழுவினால் அளிக்கப்படும் மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையில், வளர்ச்சிக்கான திறன் கொண்ட குழுமங்கள் மட்டுமே தொகுத்தல் திட்டத்தின் கீழ் பரிசீலிக்கப்படும்.

பத்தாவது ஐந்தாண்டு திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட குழுமங்கள் தொகுப்பிற்கு பல்வேறு உட்கூறுகளை புகுத்தும்வண்ணம் குழுமம் ஒன்றிற்கு ரூ.50.00 இலட்சம் வரை நிதி உதவி அளிக்கப்படும். தொழில் நுட்ப மேம்பாடு போன்ற வன்பொருள் உட்கூறுகளுக்கான நிதி உதவி

மத்திய அரசு மற்றும் செயல்படுத்தும் முகமை / அமைப்பு நிறுவனங்களின் பங்களிப்பு முறையே 80:20 விகிதாச்சார அடிப்படையில் அளிக்கப்படும். ஏனைய உட்கூறுகளுக்கான நிதி உதவி, மத்திய அரசால் முழுமையாக ஏற்றுக் கொள்ளப்படும். இந்நிதி உதவி, செயல்படுத்தும் முகமை நிறுவனத்திற்கு நேரடியாக அளிக்கப்படும்.

மேலும் பதினோராவது ஐந்தாண்டு திட்டத்தின்போது நடைமுறைப்படுத்தப்பட்ட குழுமங்களின் தொகுப்பிற்கு ஒரு குழுமத்திற்கு கூடுதலாக ரூ.20.00 இலட்சம் (ரூ. 60.00 இலட்சம் அல்லது ஒப்பளிப்பு செய்யப்பட்ட திட்டத் தொகைக்கும் மேலாக) நிதி உதவி அளிக்கப்படும். இந்நிதியுதவி மத்திய அரசு மற்றும் மாநில அரசு / செயல்படுத்தும் நிறுவனம் / பயனாளி முறையே 75:25 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளப்படும். இந்நிதியுதவி மாநில அரசின் மூலமாக செயல்படுத்தும் முகமை நிறுவனத்திற்கு வழங்கப்படும்.

### 5.5.2 புதிய கைத்தறி குழுமங்கள் அமைக்கும் திட்டம் (New Handloom Clusters)

வெளிச்சந்தை விற்பனைத் தேவைக்கேற்ப கைத்தறி துணிகள் உற்பத்தி செய்ய பெருமளவு கைத்தறிகள் நிறைந்த இடம் “கைத்தறி குழுமம்” என பொதுவாக வரையறுக்கப்படுகிறது. இக்கைத்தறி குழுமங்கள், ஒரே மாவட்ட

நிர்வாகத்தின் கீழ் அல்லது இரண்டு அருகருகே உள்ள மாவட்டங்களின் நிர்வாகத்தின் கீழ் அமைந்துள்ள இரண்டு வருவாய் கோட்டங்கள் / கிராமங்களில் அமைந்திருக்கும். இத்திட்டத்தின்கீழ் 200 முதல் 500 வரையுள்ள கைத்தறிகள் மற்றும் 2000 முதல் 5000 வரையுள்ள கைத்தறிகளைக் கொண்டு புதிய குழுமங்கள் அமைக்க இயலும்.

ஒவ்வொரு குழுமத்திற்கான நிதியுதவி அளவு, குழுமத்திற்குரிய தேவைகள் குழுமத்திலுள்ள வளர்ச்சித் திட்டம் தொடர்பாக நிர்ணயிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளின் வாய்ப்புகள், நிறுவனத்தின் தொழில்நுட்பம், நிதி மேலாண்மை திறன், முதிர்ச்சி நிலை, குழுமத்தின் கடந்த கால செயல்பாடுகள் ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்டதாகும். மத்திய அரசினால் அனுமதிக்கப்படும் அதிகபட்ச நிதியுதவி 200 முதல் 500 வரை கைத்தறிகளைக் கொண்ட ஒரு குழுமத்திற்கு ரூ.60.00 இலட்சம் மற்றும் 2000 முதல் 5000 வரை கைத்தறிகளைக் கொண்ட ஒரு குழுமத்திற்கு ரூ.150.00 இலட்சம் ஆகும்.

இவ்வினத்தின் கீழ், அடிப்படை ஆய்வு, கூர்ந்தாய்வு அறிக்கை தயாரித்தல், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துதல், தறி தொழிலுக்கான தொழில்நுட்ப மேம்பாட்டு நடவடிக்கையின் கீழ், செயல்பாட்டில் உள்ள தறிகளுக்கு நியூமேட்டிக் ஜாக்கார்டு

அமைப்பு மற்றும் மின் மோட்டாருடன் கூடிய ஜாக்கார்டு இயந்திரம் வழங்குதல், கைத்தறிக்கு தேவையான துணைக் கருவிகளை வழங்குதல், இரகம் மேம்படுத்துதல்/ இரகம் மாற்றம், ஜவுளி வடிவமைப்பாளர் மற்றும் விற்பனை செயல் அலுவலரை நியமித்தல், கணினியுடன் கூடிய ஜவுளி வடிவமைக்கும் இயந்திரம் (CAD) அமைத்தல், ஜக்கார்டு அட்டை துளையிடும் இயந்திரம் வாங்குதல், நூல் கிடங்கு அமைக்கத் தேவையான (Corpus fund) திரண்ட தொகுப்பு நிதி, பொது வசதி மையம்/ சாயச்சாலை அமைத்தல், தொழிற்கூடம் (workshed) கட்டுதல் ஆகியவற்றிற்கான நிதி உதவி அளிக்கப்படுகின்றது.

மத்திய ஜவுளித்துறை, தேசீய கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் (NHDP) கீழ் **2014–2015**–ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் **9** புதிய கைத்தறி குழுமத் திட்டங்களை செயல்படுத்த ஒப்புதல் வழங்கி, திட்ட மதிப்பீட்டு தொகை ரூ.**474.76** இலட்சத்தில், மத்திய அரசின் பங்கு தொகையாக ரூ.**120.09** இலட்சம் முதல் தவணையாக கீழ்க்கண்டவாறு விடுவித்துள்ளது.

(ரூபாய் லட்சத்தில்)

| வ. எண் | கைத்தறி குழுமத்தின் பெயர் மற்றும் மாவட்டம் | ஒப்பளிக்கப் பட்ட மொத்த திட்ட மதிப்பீடு ( கால அளவு 4 ஆண்டுகள்) | நான்காண்டுகளுக்கான உத்தேச திட்ட மதிப்பீட்டின் பகிர்மானம் | | | மத்திய அரசால் விடுவிக்கப் பட்ட முதல் தவணைத் தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | | | மத்திய அரசு | மாநில அரசு | பயனாளிகள் | மத்திய அரசு |
| 1 | அனந்தபுரம், (விழுப்புரம்) | 57.9500 | 45.1500 | 10.0000 | 2.8000 | 17.3650 |
| 2 | கொருகாத்தூர் (திருவண்ணாமலை) | 60.0000 | 50.6800 | 8.1200 | 1.2000 | 11.9450 |
| 3 | கஞ்சம்பட்டி (கோயம்புத்தூர்) | 60.0000 | 45.0240 | 29.3680 | 5.8380 | 13.2632 |
| 4 | செல்வராஜபேட்டை (சேலம்) | 47.8300 | 39.1090 | 7.6960 | 1.0250 | 10.9025 |
| 5 | கே.வி. குப்பம் (வேலூர்) | 46.9000 | 40.8000 | 4.8000 | 1.3000 | 12.5450 |
| 6 | சாவக்காட்டுப் பாளையம் (ஈரோடு) | 54.1900 | 44.2880 | 8.6180 | 1.2840 | 11.3464 |
| 7 | கெளரி (தேனி) | 58.0000 | 45.4750 | 9.0500 | 3.4750 | 19.5590 |
| 8 | வீராசாமி நகர் (கோயம்புத்தூர்) | 60.0000 | 47.3460 | 10.5300 | 2.1240 | 12.6104 |
| 9 | ஸ்ரீ செளடேஸ்வரி (திருப்பூர்) | 29.8900 | 25.3780 | 3.0080 | 1.5040 | 10.5584 |
| | **மொத்தம்** | **474.7600** | **383.2500** | **91.1900** | **20.5500** | **120.0949** |

தமிழ்நாடு அரசு, விரிவாக்கப்பட்ட கைத்தறி வளர்ச்சித் திட்டத்தினை **2015–2016–**ஆம் ஆண்டிலும் தொடந்து செயல்படுத்தும், இதற்கென **2015–2016–**ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.**10.00** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.5.3 புதிய குழு அணுகுமுறை திட்டம்

புவியியல் அமைப்பில் அடுத்தடுத்த எல்லையைக் கொண்ட, ஒரே விதமான உற்பத்தி அம்சத்தில் ஈடுபட்டு குழுமத் திட்டத்தின்கீழ் பயன்பெறாத கைத்தறி நெசவாளர்களுக்கு திட்ட அணுகுமுறையினைச் (Project Mode) செயல்படுத்தி பயனடையச் செய்யும் வகையில், குழு அணுகுமுறைத் திட்டம் செயல்படுத்தப்படும். ஒரு குழுவில் **10** முதல் **50** நெசவாளர்கள் இருக்க வேண்டும். குழு அணுகுமுறைத் திட்டத்தினை செயல்படுத்துவதற்கான கால அளவு **2** ஆண்டுகளாகும்.

மத்திய ஜவுளித்துறை, தேசீய கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் (NHDP) கீழ் **2014–2015**–ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் **15** புதிய குழு அணுகுமுறைத் திட்டங்களைச் செயல்படுத்த ஒப்புதல் வழங்கி, திட்ட மதிப்பீட்டு தொகை ரூ.**115.730** இலட்சத்தில், மத்திய அரசின் பங்கு தொகையாக ரூ.**52.340** இலட்சம் முதல் தவணையாக கீழ்க்கண்டவாறு விடுவித்துள்ளது:–

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | கைத்தறி குழுமத்தின் பெயர் மற்றும் மாவட்டம் | ஒப்பளிக் கப்பட்ட மொத்த திட்ட மதிப்பீடு (கால அளவு 4 ஆண்டு கள்) | மத்திய, மாநில அரசின் திட்ட மதிப்பீடு | | | மத்திய அரசால் விடுவிக்கப்பட்ட முதல் தவணைத் தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | | | மத்திய அரசு | மாநில அரசு | பயனாளிகள் | மத்திய அரசு |
| 1 | செம்மான்டம் பாளையம், (கோயம்புத்தூர்) | 8.0000 | 5.6000 | 1.6000 | 0.8000 | 4.2000 |

| வ. எண் | கைத்தறி குழுமத்தின் பெயர் மற்றும் மாவட்டம் | ஒப்பளிக் கப்பட்ட மொத்த திட்ட மதிப்பீடு (கால அளவு 4 ஆண்டு கள்) | மத்திய, மாநில அரசின் திட்ட மதிப்பீடு | | | மத்திய அரசால் விடுவிக்கப்பட்ட முதல் தவணைத் தொகை |
|---|---|---|---|---|---|---|
| 2 | சேரிபாளையம், (கோயம்பு த்தூர்) | 9.5500 | 7.6300 | 1.2800 | 0.6400 | 5.7225 |
| 3 | சௌடேஸ்வரி (சேலம்) | 4.5000 | 3.1500 | 0.9000 | 0.4500 | 2.3625 |
| 4 | நெய்காரப்பட்டி, சேலம் | 6.3000 | 4.4100 | 1.2600 | 0.6300 | 3.3075 |
| 5 | குடியாத்தம் ஸ்ரீ பாலாஜி (வேலூர்) | 2.0000 | 1.4000 | 0.4000 | 0.2000 | 1.0500 |
| 6 | பொதட்டூர் பேட்டை (திருவள்ளூர்) | 14.0000 | 9.8000 | 2.8000 | 1.4000 | 5.8535 |
| 7 | பரமக்குடி (இராமநாதபுரம்) | 10.5000 | 7.3500 | 2.1000 | 1.0500 | 4.39 |
| 8 | குடியாத்தம் (வேலூர்) | 1.8000 | 1.2600 | 0.3600 | 0.1800 | 0.7526 |
| 9 | மில்லினியம் (கோயம்புத்தூர்) | 10.5000 | 7.3500 | 2.1000 | 1.0500 | 4.39 |
| 10 | அயோத்தியா பட்டணம் ( சேலம்) | 1.0000 | 0.7000 | 0.2000 | 0.1000 | 0.4182 |
| 11 | கோடிகாடு (சேலம்) | 6.0000 | 4.2000 | 1.2000 | 0.6000 | 2.5087 |
| 12 | வீரா (கோயம்புத்தூர்) | 10.0800 | 7.0560 | 2.0160 | 1.0080 | 4.2145 |
| 13 | போனிக்ஸ் (கோயம்புத்தூர்) | 10.5000 | 7.3500 | 2.1000 | 1.0500 | 4.39 |
| 14 | இந்தியன் (கோயம்புத்தூர்) | 10.5000 | 7.3500 | 2.1000 | 1.0500 | 4.39 |
| 15 | உதயம் (கோயம்புத்தூர்) | 10.5000 | 7.3500 | 2.1000 | 1.0500 | 4.39 |
| **மொத்தம்** | | **115.7300** | **81.9560** | **22.5160** | **11.2580** | **52.3400** |

புதிய குழும அணுகுமுறைத் திட்டம் **2015–2016–**ஆம் ஆண்டிலும் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்காக அரசு **2015–2016–**ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.**100.00** இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

### 5.5.4 விற்பனை ஊக்குவிப்பு திட்டம்

கைத்தறி துணி வகைகளின் விற்பனை வசதிக்காக விற்பனை ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படுகிறது. இத்தொகையைக் கொண்டு பயனாளி கைத்தறி நிறுவனம் கைத்தறி துணி வகைகளின் ஒட்டுமொத்த விற்பனையை அதிகரிக்கச் செய்யும் வண்ணம், நுகர்வோர்களை கவரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. மாநில கைத்தறி வளர்ச்சி கழகம், தலைமை நெசவாளர் கூட்டுறவு சங்கம், தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தேசிய அளவிலான கைத்தறி நிறுவனங்கள் ஆகியவை விற்பனை ஊக்குவிப்பு தொகையைப் பெறலாம்.

இத்திட்டத்தின் கீழ், கைத்தறி நிறுவனங்களின் கடந்த 3 ஆண்டுகால சராசரி விற்பனைத் தொகையில் 10 விழுக்காடு தொகை, விற்பனை ஊக்குவிப்பு நிதியாக வழங்கப்படுகிறது. இந்நிதி மைய மற்றும் மாநில அரசுகளால் 50:50 என்ற அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படுகின்றது.

வழக்கமாக, மாநில அரசு விற்பனை ஊக்குவிப்பு தொகையின் மத்திய அரசின் பங்கையும் சேர்த்து முதலில் விடுவிக்கும். பின்னர் மத்திய அரசு தனது பங்கை திரும்ப வழங்கும். 2014–2015–ஆம் நிதி ஆண்டில் விரிவான கைத்தறி வளர்ச்சி திட்டத்தின் கீழ் தகுதியுடைய 871 கைத்தறி நெசவாளர்

கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு (கோ–ஆப்டெக்ஸ்) விற்பனை ஊக்குவிப்பு தொகையாக ரூ.40.86 கோடி வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் 2015–2016–ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். 2015–2016–ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.44.90 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5.5.5 கைத்தறி விற்பனைக்கான நிதி உதவி

'கைத்தறி விற்பனைக்கான நிதியுதவி' என்பது விரிவான கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் ஒரு அங்கமாகும். உள்நாடு மற்றும் வெளிநாட்டு சந்தை அமைப்புகளில், விற்பனை வழிகளை மேம்படுத்தவும், வளர்ச்சியடையச் செய்யவும் ஒருங்கிணைக்கப்பட்ட சூழ்நிலைகளைக் கொண்டு ஒரு உன்னத நிலையினை உருவாக்குவதே கைத்தறி விற்பனைக்கான நிதியுதவியின் முக்கிய நோக்கமாகும். கைத்தறி விற்பனைக்கான நிதியுதவி இனத்தின் உட்கூறுகள் பின்வருமாறு: -

1. உள்நாட்டு சந்தையினை மேம்படுத்துதல்
2. விற்பனை உட்கட்டமைப்பு வசதி ஏற்படுத்துதல்
3. சந்தை அணுகுமுறை உருவாக்குதல்
4. கைத்தறி ஏற்றுமதி அபிவிருத்தி செய்தல்

தேசிய அளவிலான கைத்தறி கண்காட்சிகள், சிறப்பு கைத்தறி கண்காட்சிகள், மாவட்ட அளவிலான கண்காட்சிகள் ஆகியவை உள்நாட்டு சந்தையினை மேம்படுத்துதல் என்ற இனத்தின் கீழ் நடத்தப்படுகின்றன. இக் கண்காட்சிகள் நடத்துவதற்கு, வழங்கப்படும் நிதியுதவி விபரம் பின்வருமாறு :–

| வ எண் | கண்காட்சியின் விபரம் | வழங்கப்படும் நிதியுதவி (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தேசீய அளவிலான கைத்தறி கண்காட்சி | 20.00 |
| 2 | சிறப்பு கைத்தறி கண்காட்சி | 8.00 |
| 3 | மாவட்ட அளவிலான கண்காட்சி | 2.00 |

2014–2015–ஆம் ஆண்டில் மத்திய அரசின் நிதி உதவியுடன் 20 மாவட்ட அளவிலான கைத்தறி கண்காட்சிகளும், 10 சிறப்பு கைத்தறி கண்காட்சிகளும் நடத்தப்பட்டு ரூ.17.38 கோடி அளவிற்கு விற்பனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2015–2016 –ஆம் ஆண்டில், 20 மாவட்ட அளவிலான கைத்தறி கண்காட்சிகளும், 10 சிறப்பு கைத்தறி கண்காட்சிகளும் நடத்தப்படும்.

## 5.6 ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டுத் திட்டம்

மத்திய அரசு, பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ஐந்து ஆண்டுகளில் படிப்படியாக ஜவுளித் துறை தொடர்புடைய பிரிவுகளில் தொழில் சார்ந்த, திறன் வாய்ந்த தொழிலாளர்களை அதிகரித்து வேலை வாய்ப்பினை அதிகரிக்கவும் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களின் தேவையினை மேம்படுத்தவும், புதிய ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டுத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.

இத்திட்டம், **75 : 25** என்ற விகிதாச்சார அடிப்படையில் மத்திய, மாநில அரசுகளின் நிதியுதவியுடன் **3** இனங்களாக செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு :-

1. இனம் **–1** : மத்திய ஜவுளித் துறையின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும் நிறுவனங்கள் மற்றும் துணித் தொழில் ஆராய்ச்சி நிறுவனங்கள்
2. இனம்**–2** : தனியார் நிறுவனங்களின் பங்களிப்புடன் செயல்படுத்துதல்
3. இனம்**–3** : மாநில அரசின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும் நிறுவனங்கள்

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட திட்ட அறிக்கையின்படி, பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத்

திட்டத்தின்கீழ் கீழ்க்கண்டவாறு 5000 நபர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

| ஆண்டு | அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியாளர்களின் எண்ணிக்கை | ஒப்பளிக்கப்பட்ட தொகை (மதிப்பு ரூ. கோடியில்) |
|---|---|---|
| 2014–15 | 1640 | 2.18 |
| 2015–16 | 1680 | 2.23 (தோராயமாக) |
| 2016–17 | 1680 | 2.23 (தோராயமாக) |
| **மொத்தம்** | **5000** | **6.64** |

அதன்படி, ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டு திட்டத்தினை 2014–2015–ஆம் ஆண்டில் 1640 பயிற்சியாளர்களுக்கு செயல்படுத்த மத்திய அரசின் ஜவுளி அமைச்சகம் 75 விழுக்காடு மத்திய அரசின் பங்காக ரூ.1.63 கோடி ஒப்பளிப்பு செய்து விடுவித்துள்ளது.

மேலும், அரசாணை எண். 159, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 11.12.2014–இன்படி மாநில அரசு பங்களிப்பாக 25 சதவீத மான்யம் ரூ.54.53 இலட்சம் விடுவித்துள்ளது.



ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டுத் திட்டம் – கோயம்புத்தூரில் உள்ள சர்தார் வல்லபாய் பட்டேல் சர்வதேச மேலாண்மை கல்லூரியில் நெசவாளர்களுக்கு பயிற்சி அளித்தல்



காஞ்சிபுரத்தில் உள்ள தேசிய கைத்தறி மேம்பாட்டு கழகத்தில் நடைபெற்ற சாயமேற்றுதலுக்கானப் பயிற்சி

2014–2015–ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டுத் திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்த விபரம் பின்வருமாறு :

| வ. எண் | பிரிவு | பயிற்சியாளர் களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கைத்தறி நெசவு | 400 |
| 2. | பெடல் தறி | 300 |
| 3. | சாயப் பயிற்சி | 30 |
| 4. | வடிவமைப்பு மேம்பாடு | 30 |
| 5. | விற்பனையாளர் | 130 |
| 6. | மேலாண்மைப் பயிற்சி | 160 |
| 7. | நூற்பு பயிற்சி | 230 |
| 8. | விசைத்தறி | 200 |
| 9. | துணியின் மேற்பகுதியை அலங்காரப் படுத்துதல் | 100 |
| 10. | தரப்பரிசோதகர் | 30 |
| 11. | இயக்குபவர் | 30 |
| **மொத்தம்** | | **1640** |

## 5.7 தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம்


நெசவாளர்களிடம் சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கவும், அவர்களது எதிர்கால வாழ்க்கைக்கு பாதுகாப்பு அளிக்கவும் 1975–ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தை அறிமுகம் செய்ததன் மூலம் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. இத்திட்டத்தின் கீழ் நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக உள்ள ஒரு நெசவாளர் தாம் ஈட்டும்

கூலியில் ஒரு ரூபாய்க்கு 8 பைசா வீதம் திட்டத்திற்கு சந்தாவாக செலுத்தினால், அதற்கு ஈடாக, மாநில அரசு தனது பங்காக , நெசவாளர் ஈட்டும் கூலியில் ஒரு ரூபாய்க்கு 4 பைசா வீதம் வழங்கி வந்தது.

இத்திட்டத்திற்கு 1985 – 1986–ஆம் ஆண்டிலிருந்து 2006 – 2007–ஆம் ஆண்டு வரையில் மைய அரசு மத்திய சிக்கன நிதி திட்டத்தின் கீழ் தனது பங்காக ஒரு ரூபாய்க்கு 4 பைசா வீதம் வழங்கி வந்தது. எனினும், மத்திய அரசு தனது பங்கான ஒரு ரூபாய்க்கு 4 பைசா வீதம் வழங்குவதை 01.04.2007 முதல் நிறுத்தி கொண்டு விட்டது. மத்திய அரசின் பங்கினை ஈடுசெய்யும் வகையில், மாநில அரசு தனது பங்கினை ஒரு ரூபாய்க்கு 4 பைசாவிலிருந்து 8 பைசாவாக 12.07.2012 முதல் உயர்த்தி ஆணை பிறப்பித்தது.

நெசவாளர்கள் ஈட்டும் கூலியில் ஒரு ரூபாய்க்கு நெசவாளர்கள் பங்காக செலுத்தப்பெறும் 8 பைசா தொகையும், மாநில அரசால் செலுத்தப்பெறும் ரூபாய் ஒன்றிற்கு 8 பைசா தொகையும் சேர்த்து, தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்தின் அரசு கணக்கில் செலுத்தப்பட்டு வருகிறது. மேற்படி திட்டக் கணக்கில் இருப்பிலுள்ள தொகைக்கு, மாநில அரசு 9.5 விழுக்காடு வட்டி வழங்கி வருகிறது. இவ்வாறு பெறப்படும் வட்டித் தொகையில்,


**6.5** விழுக்காடு வட்டித் தொகை நேரிடையாக திட்ட கணக்கில் செலுத்தப்பட்டு, நெசவாளர்களின் கணக்கில் வரவு வைக்கப்பட்டும், எஞ்சிய **3** விழுக்காடு வட்டித் தொகை நலத்திட்டங்களான தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டம் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டங்களை செயல்படுத்த பயன்படுத்தப்பட்டும் வருகிறது.




**சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம்**
**கடந்த நான்கு ஆண்டுகளில் விடுவிக்கப்பட்ட மாநில அரசின் பங்கு தொகை**

மேற்படி திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டுள்ள **71842** நெசவாளர்களில் **55447** கைத்தறி நெசவாளர்கள் தனது பங்கினை **2013–2014–**ஆம் ஆண்டு சந்தாவாக

செலுத்தியுள்ளனர். **2013–2014–**ஆம் ஆண்டில் இத்திட்டத்தில் நெசவாளர்கள் தனது பங்காக செலுத்திய தொகைக்கு ஈடாக மாநில அரசு **2014–2015–**ஆம் ஆண்டில் ரூ.**10.69** கோடி ஒப்பளித்துள்ளது. தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்தின் வைப்புக் கணக்கில் உள்ள தொகைக்கு **2014–2015–**ஆம் ஆண்டில் **9.5** விழுக்காடு வட்டித் தொகையாக ரூ.**22.86** கோடியினை மாநில அரசு ஒப்பளித்துள்ளது.




**சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம்**
**கடந்த நான்கு ஆண்டுகளில் விடுவிக்கப்பட்ட 9.5% வட்டித் தொகை**

**2015–2016–**ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதற்கென **2015–2016** –ஆம் ஆண்டின்

வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 12 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5.8 தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டம்

தமிழக அரசு முதியோர் ஓய்வூதியத் திட்டம் என்ற திட்டத்தினை கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள நெசவாளர்களுக்காக 01.04.1997 முதல் செயல்படுத்தி வருகிறது. சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் உறுப்பினராக இருந்து, 60 வயது பூர்த்தியான நெசவாளர்கள் முதியோர் ஓய்வூதியம் பெற தகுதி பெறுகின்றனர். முதியோர் ஓய்வூதியத் தொகையினை மாதம் ஒன்றுக்கு ரூ.400/– லிருந்து ரூ.1000/– ஆக 01.01.2012 முதல் அரசு உயர்த்தி வழங்கி வருகிறது. இதில், சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்ட நிதிக்கு வழங்கப்படும் 3 விழுக்காடு வட்டித் தொகையிலிருந்து ரூ.200/–ம், அரசு கணக்கிலிருந்து ரூ.800/–ம் சேர்த்து நெசவாளர் முதியோர் ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

2014–2015–ஆம் ஆண்டில், அரசு ரூ.31.38 கோடியினை 20,456 கைத்தறி நெசவாளர்களுக்கு முதியோர் ஓய்வூதியம் வழங்குவதற்காக ஒப்பளித்துள்ளது. இத்திட்டம், 2015–2016ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 5.9 தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம்

தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தினை **01.01.1992** முதல் அறிமுகப்படுத்திய முதல் மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. இத்திட்டத்தின்கீழ், ஒரு நெசவாளர் **60** வயதிற்குள் இறக்க நேரிட்டால், அவரது வாரிசுதாரருக்கு **10** ஆண்டுகள் வரையிலோ அல்லது இறந்தவர் (உயிருடன் இருந்திருந்தால்) **60** வயது வரை எய்தக் கூடிய காலம் வரையிலோ, இதில் எது இறந்த நெசவாளரின் குடும்பத்திற்கு அதிக பயனளிக்குமோ, அவ்வகையில், மாதமொன்றிற்கு ரூ.**1,000/–** வீதம் நெசவாளர் குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது. அரசு **01.01.2012** முதல் நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் தொகையினை மாதம் ஒன்றுக்கு ரூ.**550/–** லிருந்து ரூ.**1000/–**ஆக உயர்த்தி வழங்கி வருகிறது. அவ்வாறு மாதம் ஒன்றுக்கு நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் தொகையாக வழங்கப்படும். ரூ. **1000/–**இல், சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்ட நிதிக்கு வழங்கப்படும் **3** விழுக்காடு வட்டித் தொகையிலிருந்து ரூ.**350/–**ம், அரசு கணக்கிலிருந்து ரூ.**650/–**ம் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் **2014–2015–**ஆம் ஆண்டில் **1,486** இறந்த நெசவாளர்களின் குடும்பங்கள் குடும்ப ஓய்வூதியமாக ரூ.**2.37** கோடி பெற்றுள்ளன.

தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஒய்வூதியம் மற்றும் நெசவாளர் குடும்ப ஒய்வூதியத் திட்டத்தினை செயல்படுத்த **2015–2016**–ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. **2165.93** இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.10 கைத்தறி நெசவாளர்களுக்கான ராஷ்டிரிய ஸ்வஸ்திய பீமா யோஜனா திட்டம் (நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டம்)**

நெசவாளர்கள் அதிக அளவில் மருத்துவ காப்பீடு பெறும் வகையிலும் கைத்தறி நெசவாளர்களின் உடல் நலத்தைப் பாதுகாக்கவும், கைத்தறி நெசவாளர்களின் உடல் நலக்காப்பீட்டிற்காக "ராஷ்டிரிய ஸ்வஸ்திய பீமா யோஜனா" திட்டம் **01.10.2014** முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்புதிய நல்வாழ்வு காப்பீட்டு திட்டத்தின்கீழ் ஒரு நெசவாளர் குடும்பத்தில் நெசவாளர் உட்பட **5** நபர்கள் ஆண்டொன்றுக்கு ரூ. **37,500/–** வரையில் மருத்துவ உதவிகள் பெற்றுக் கொள்ளலாம். இதில் உள் நோயாளிகளுக்கான மருத்துவச் சிகிச்சைகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.**30,000/–**ம், புற நோயாளிகளுக்கான மருத்துவச் சிகிச்சைகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. **7,500/–**ம் மருத்துவ உதவி பெற்றுக் கொள்ளலாம். இப்புதிய காப்பீட்டு திட்டத்தின் கீழ் சேர்க்கப்படும் பயனாளிகளுக்கு கை விரல் ரேகை பதிவுடன் கூடிய மின்னணு அடையாள அட்டைகள் வழங்கப்படுகிறது. இந்த அடையாள

அட்டை மூலம் பட்டியலிடப்பட்ட அனைத்து மருத்துவமனைகளில் பணம் செலுத்தாமல், மருத்துவ சிகிச்சை பெற்றுக் கொள்ளலாம்.

தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சி கழகம் இத்திட்டத்தின் மாநில அளவிலான முகமை நிறுவனமாகவும், யுனைடெட் இந்தியா காப்பீடு நிறுவனம் இத்திட்டத்தின் காப்பீடு நிறுவனமாகவும் செயல்பட்டு வருகிறது. ஓர் ஆண்டிற்கு, ஒரு நெசவாளர் குடும்பத்திற்கான காப்பீட்டு கட்டணமாக யுனைடெட் இந்தியா காப்பீடு நிறுவனத்திற்கு ரூ.179/– செலுத்தப்படுகிறது. இக்காப்பீடு கட்டணமானது 75:25 விகிதாசாரத்தில் மத்திய, மாநில அரசுக்களுக்கிடையே பங்கீடு செய்யப்படுகிறது. இதன்படி ஒரு நெசவாளர் குடும்பத்திற்கு ஆண்டொன்றுக்கு மைய அரசின் பங்கு காப்பீட்டு கட்டணமாக ரூ.134.25–ம், மாநில அரசின் பங்கு காப்பீட்டு கட்டணமாக ரூ.44.75–ம் செலுத்தப்படுகிறது. இது தவிர நெசவாளர் செலுத்த வேண்டிய பதிவுக் கட்டணமான ரூ.30/– நெசவாளர்கள் சார்பாக மாநில அரசால் செலுத்தப்படுகிறது.

இப்புதிய திட்டத்தின்கீழ், 2014–2015ம் ஆண்டில் இதுவரை 1,52,776 கைத்தறி நெசவாளர் குடும்பங்கள் சேர்க்கப்பட்டுள்ளதுடன், மாநிலமெங்கிலும் உள்ள 200 மருத்துவமனைகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு

அங்கீகரிக்கப்பட்டுள்ள மருத்துவமனைகளில் பயனாளிகள் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

**2015–2016–**ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். மாநில அரசு கைத்தறி நெசவாளர்களுக்கென அமல்படுத்தப்படும் ராஷ்டிரிய ஸ்வஸ்திய பீமா யோஜனா திட்டத்திற்கென **2015–2016–**ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ **250.00** இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

**5.11 விசைத்தறி நெசவாளர்கள் / உப தொழிலாளர்களுக்கு ராஷ்டிரிய ஸ்வஸ்திய பீமா யோஜனா திட்டம்**

ராஷ்டிரிய ஸ்வஸ்திய பீமா யோஜனா திட்டத்தினை விசைத்தறி நெசவாளர்கள் / உப தொழிலாளர்களுக்கும் விரிவுபடுத்தி, ஒரு நெசவாளர் குடும்பத்தில் **5** நபர்கள் வரை ஆண்டொன்றுக்கு ரூ.**37,500/–**வரை மருத்துவ உதவிகள் பெறும் வகையில் திட்டத்தினை செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி, முதற்கட்டமாக **33,000** விசைத்தறி நெசவாளர்கள் / உப தொழிலாளர்கள் இத்திட்டத்தின்கீழ் சேர்க்கப்படுவர்.

**5.12. மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா**

**5.12.1 கைத்தறி நெசவாளர் காப்பீட்டுத் திட்டம்**

கைத்தறி நெசவாளர்களுக்கென மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா எனும் காப்பீட்டு திட்டம் மத்திய அரசின்

நிதியுடன் **2004–2005–**ஆம் ஆண்டு முதல் இந்திய ஆயுள் காப்பீட்டு கழகத்துடன் இணைந்து தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கைத்தறி நெசவாளர்களுக்கு ஏற்படும் இயற்கை மரணம், விபத்தினால் மரணம் அல்லது விபத்தினால் நிரந்தர ஊனம் அல்லது விபத்தினால் ஏற்படும் பகுதி ஊனம் போன்ற நிகழ்வுகளில் மேம்படுத்தப்பட்ட காப்பீடு வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இக்காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், கூட்டுறவு அமைப்பில் உள்ள நெசவாளர்கள், கூட்டுறவு அமைப்பு சாரா கைத்தறி நெசவாளர்களும் பயனடைந்து வருகின்றனர்.

மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா திட்டத்தின்கீழ் ஒரு நெசவாளருக்கு பின்வரும் விகிதத்தில் ஆண்டொன்றுக்கு காப்பீட்டு கட்டணம் ரூ.**330/–** செலுத்தி ஒவ்வொரு ஆண்டும் புதுப்பிக்கப்படுகிறது:–

| | | |
|---|---|---|
| மத்திய அரசின் பங்கு | : | ரூ. **150/–** |
| நெசவாளர்கள் சார்பாக மாநில அரசு செலுத்தும் தொகை | : | ரூ. **80/–** |
| இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் செலுத்தும் பங்கு | : | ரூ. **100/–** |

இத்திட்டத்தின்கீழ் உறுப்பினர்களாக உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு, இந்திய ஆயுள் காப்பீட்டு கழகத்தால் வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை விவரங்கள் பின்வருமாறு:-

| வரிசை எண். | விவரம் | காப்பீட்டுத் தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | இயற்கை மரணம் | 60,000 |
| 2 | விபத்தினால் ஏற்படும் மரணம் | 1,50,000 |
| 3 | விபத்தினால் ஏற்படும் நிரந்தர ஊனம் | 1,50,000 |
| 4 | விபத்தினால் ஏற்படும் பகுதி ஊனம் | 75,000 |

இது தவிர, கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள கைத்தறி நெசவாளர்களின் குடும்பங்களுக்கு, கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் நெசவாளர் நல்வாழ்வுத் தொகையாக ரூ.25,000/– வழங்கி வருகிறது.

2014–2015 ஆம் ஆண்டில், சுமார் 320 இறப்பு கோரிக்கைகள் தீர்வு செய்யப்பட்டு, பயனாளிகளுக்கு ரூ.1.97 கோடி காப்பீட்டுத் தொகையாக இந்திய ஆயுள் காப்பீட்டு கழகத்தால் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கான காப்பீட்டுக் காலம் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 2 முதல் அடுத்த ஆண்டு அக்டோபர் 1 வரை ஆகும். 2014–15–ஆம் ஆண்டில் தமிழகத்தில் 2,32,937 கைத்தறி நெசவாளர்கள் மற்றும் கைத்தறி தொடர்பான உபதொழில் செய்பவர்கள் இத்திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளனர்.

2015–2016–ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். 2015–2016–ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் நெசவாளர்கள் சார்பாக மாநில அரசால் செலுத்தப்படவுள்ள காப்பீடு கட்டணம் செலுத்தும் பொருட்டு ரூ.2 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.12.2 சிக்ஷா சஹாயக் யோஜனா கல்வி உதவி**

சிக்ஷா சஹாயக் யோஜனா கல்வி உதவித் திட்டமானது, மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா திட்டத்தின் ஒரு அங்கமாகும். இத்திட்டத்தின் கீழ் உறுப்பினர்களாக உள்ள கைத்தறி நெசவாளர்களின் குடும்பத்தில் உள்ள 9 ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு, (இரண்டு குழந்தைகளுக்கு) ஆண்டொன்றுக்கு ரூ.1,200/– வீதம் (ரூ. 600/– வீதம் இரு தவணைகளில்) அதிக பட்சமாக 4 ஆண்டுகளுக்கு அல்லது 12–ஆம் வகுப்பு முடிக்கும் வரை கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

2014–2015–ஆம் ஆண்டில் 32,518 மாணவ மாணவியர்கள் சிக்ஷா சஹாயக் யோஜனா திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர். பயனாளிகளுக்கு கல்வி உதவித் தொகையாக ரூ.1.95 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

## 5.13 கைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்குதல்

கைத்தறி நெசவாளர்களுக்கு 100 அலகு வரை (இரு மாதங்களுக்கு) இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தினை தமிழக அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றது. தமிழ்நாடு மின் பகிர்மான கழகத்திற்கு 2014–2015–ஆம் ஆண்டில், ரூபாய் 8.33 கோடி அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் 31.03.2015 வரை 133764 கைத்தறி நெசவாளர்கள் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டம் 2015–2016– ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும் மற்றும் 2015–2016–ஆம் ஆண்டு வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.9.85 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5.14 விசைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்குதல்

விசைத்தறி நெசவாளர்களுக்கு 500 அலகு வரை (இரு மாதங்களுக்கு) இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தினையும் அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றது. தமிழ்நாடு மின் பகிர்மான கழகத்திற்கு 2014–2015–ஆம் ஆண்டில், ரூ.269.10 கோடி அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் 31.03.2015–ஆம் தேதியில் 101410 விசைத்தறி நெசவாளர்கள் பயனடைந்து வருகிறார்கள்.

விசைத்தறி நெசவாளர்களுக்கு 12.12.2014 முதல் தற்போதைய மின்சார கட்டண விவரம் பின்வருமாறு :-

| யூனிட்கள் | தற்போதைய மின்சார கட்டணம் ( 12.12.2014 முதல்) | | |
|---|---|---|---|
| | ஒரு யூனிட்டின் கட்டணம் | அரசு மானியம் | நெசவாளர் செலுத்த வேண்டிய கட்டணம் |
| | ரூ. | ரூ. | ரூ. |
| 1 – 500 வரை | 5.20 | 5.20 | இலவசம் |
| 501 – 1000 வரை | 5.75 | 3.45 | 2.30 |
| 1001 – 1500 வரை | 5.75 | 2.30 | 3.45 |
| 1501 மற்றும் அதற்கு மேல் | 5.75 | 1.15 | 4.60 |

இத்திட்டம், 2015–2016–ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும் மற்றும் 2015–2016–ஆம் ஆண்டு வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.303.42 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.15 டாக்டர் எம்.ஜி.ஆர் கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளையின் கீழ் கல்வி உதவித் தொகை வழங்குதல்

நெசவாளர்களின் குழந்தைகள் உயர்கல்வி பயில ஊக்குவிக்கும் பொருட்டு, டாக்டர் எம்.ஜி.ஆர் கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளை 1986–ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. ஒவ்வொரு வருடமும், முதல் மற்றும்

இரண்டாம் மதிப்பெண் பெறும் இரண்டு மாணவர்கள் மற்றும் இரண்டு மாணவிகளுக்கு 33 பாடப்பிரிவுகளில் அவர்கள் தங்கள் படிப்பை முடிக்கும் காலம் வரை உதவித் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் மொத்தம் 132 மாணாக்கர்கள் (66 மாணவர்கள் மற்றும் 66 மாணவிகள்) உதவித் தொகை பெறுகின்றனர்.

33 பாடப்பிரிவுகளில் கல்வி உதவித் தொகை வழங்கப்படும் விபரம் பின்வருமாறு:–

| வ. எண் | படிப்பு | கல்வி தகுதி | ஆண்டு | தற்போது முதல் நிலை மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகை | இரண்டாம் நிலை மாணவர் களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித்தொகை |
|---|---|---|---|---|---|
| 1. | எம்.பி.பி.எஸ். | +2 | 5 | ரூ.7500 | ரூ.5000 |
| 2. | பி.டி.எஸ். | +2 | 5 | ரூ.7500 | ரூ.5000 |
| 3. | பி.வி.எஸ்.சி. | +2 | 5 | ரூ.7500 | ரூ.5000 |
| 4. | எம்.எஸ். (தகவல் தொழில்நுட்பம்) | +2 | 5 | ரூ.7500 | ரூ.5000 |
| 5. | பி.,இ., | +2 | 4 | ரூ.7500 | ரூ.5000 |
| 6. | பி.டெக். | +2 | 4 | ரூ.7500 | ரூ.5000 |
| 7. | வேளாண்மை / தோட்டக்கலை | +2 | 4 | ரூ.4000 | ரூ.2500 |
| 8. | பி.பார்ம் | +2 | 4 | ரூ.4000 | ரூ.2500 |
| 9. | பி.எஸ்.சி.நர்சிங் | +2 | 4 | ரூ.4000 | ரூ.2500 |
| 10. | எம்.ஈ. | பி.இ.பட்டப் படிப்பு | 2 | ரூ.5000 | ரூ.3500 |
| 11. | எம்.டெக். | பி.இ /பி.டெக் | 2 | ரூ.5000 | ரூ.3500 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12. | எம்.டி. | எம்.பி.பி.எஸ். /பி.டி.எஸ். | 2 | ரூ.5000 | ரூ,3500 |
| 13. | எம்.எஸ். | எம்.பி.பி.எஸ். /பி.டி.எஸ். | 2 | ரூ.5000 | ரூ,3500 |
| 14. | எம்.காம். | இளங்கலை பட்டப்படிப்பு | 2 | ரூ.5000 | ரூ,3500 |
| 15. | எம்.ஏ. | இளங்கலை பட்டப்படிப்பு | 2 | ரூ.5000 | ரூ,3500 |
| 16. | எம்.எஸ்சி. | இளங்கலை பட்டப்படிப்பு | 2 | ரூ.5000 | ரூ,3500 |
| 17. | எம்.பி.ஏ. | இளங்கலை பட்டப்படிப்பு | 2 | ரூ.5000 | ரூ,3500 |
| 18. | எம்.சி.ஏ. | இளங்கலை பட்டப்படிப்பு | 2 | ரூ.5000 | ரூ,3500 |
| 19. | பி.ஏ. | +2 | 3 | ரூ.4000 | ரூ.2500 |
| 20. | பி.எஸ்சி. | +2 | 3 | ரூ.4000 | ரூ.2500 |
| 21. | பி.காம். | +2 | 3 | ரூ.4000 | ரூ.2500 |
| 22. | பி.பி.ஏ. | +2 | 3 | ரூ.4000 | ரூ.2500 |
| 23. | பி.பி.எம். | +2 | 3 | ரூ.4000 | ரூ.2500 |
| 24. | பி.சி.ஏ. | +2 | 3 | ரூ.4000 | ரூ.2500 |
| 25. | பி.எஸ்சி. (கணினி அறிவியல்) | +2 | 3 | ரூ.4000 | ரூ.2500 |
| 26. | பாலிடெக்னிக் | 10ம் வகுப்பு | 3 | ரூ.4000 | ரூ.2500 |
| 27. | இ.ஆ.ப./இ.கா.ப. வங்கி அலுவலர் தேர்வு | பட்டப்படிப்பு | 1 | ரூ.4000 | ரூ.2500 |
| 28. | ஹோட்டல் நிர்வாகம் மற்றும் சமையல் தொழில் நுட்பம் | +2 | 3 | ரூ.4000 | ரூ.2500 |
| 29. | விலை மதிப்பீடு | பட்டப்படிப்பு | 3 | ரூ.4000 | ரூ.2500 |
| 30. | கைத்தறிதொழில் நுட்ப பயிற்சி (டிப்ளமோ) | +2 | 3 | ரூ.4000 | ரூ.2500 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 31. | பிசியோதெரபி (டிப்ளமோ) | +2 | 2 | ரூ.4000 | ரூ.2500 |
| 32. | +2 அதிக மதிப்பெண் | +2 | 1 | ரூ.4000 | ரூ.2500 |
| 33. | 10ம் வகுப்பு அதிக மதிப்பெண் | 10ம் வகுப்பு | 1 | ரூ.4000 | ரூ.2500 |

**2014–2015–**ஆம் கல்வியாண்டில் **83** மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை ரூ. **3.62** இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் **2015–2016** ஆம் ஆண்டிலும் தொடரப்படும்.

## 5.16. இந்திய கைத்தறி தொழில்நுட்ப பயிலகத்தில் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்குதல்

நெசவாளர்களின் வாரிசுகளை ஊக்கப்படுத்தும் விதமாக, சேலத்திலுள்ள இந்திய கைத்தறி தொழில் நுட்ப பயிலகத்தினால் நடத்தப்படும் **3** ஆண்டு கைத்தறி மற்றும் துணிநூல் பட்டயப் படிப்பிற்கு மாணவ/மாணவியர்கள் தேர்வு செய்யப்படும்போது முன்னுரிமை வழங்கப்படுகிறது. தமிழக அரசு சேலத்தில் உள்ள இந்திய கைத்தறி தொழில் நுட்ப பயிலகத்தில் **3** ஆண்டுகள் பட்டயப்படிப்பு பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு ஆண்டுதோறும் கீழ்க்காணும் விபரப்படி கல்வி உதவித் தொகை வழங்கி வருகிறது:–

(தொகை ரூபாயில்)

| ஆண்டு | உதவித் தொகை (ஒரு மாதத்திற்கு) | மைய அரசின் 50 சதவீத பங்கு (ஒரு மாதத்திற்கு) | தமிழக அரசின் 50 சதவீத பங்கு (ஒரு மாதத்திற்கு) |
|---|---|---|---|
| முதலாம் ஆண்டு | 1000 | 500 | 500 |
| இரண்டாம் ஆண்டு | 1100 | 550 | 550 |
| மூன்றாம் ஆண்டு | 1200 | 600 | 600 |

இத்துடன் கூடுதல் கல்வி உதவித் தொகை மற்றும் புத்தகப்படியாக ஆண்டொன்றுக்கு தலா ரூ.1000/– வழங்கப்படுகிறது. மேலும் இரண்டாம் ஆண்டு மாணவ/மாணவியர்களுக்கு கல்விச் சுற்றுலாவிற்காக ஆண்டொன்றுக்கு ரூ.1000/– மற்றும் மூன்றாம் ஆண்டு பயிலும் மாணவ/ மாணவியர்களுக்கு திட்டப் பணிகளுக்காக ரூ.500/–ம் வழங்கப்படுகிறது. தமிழக அரசால் இக்கல்வி உதவித் தொகை தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கூட்டுறவு கல்வி நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

கதக் (கர்நாடகம்) மற்றும் வெங்கடகிரி (ஆந்திரப்பிரதேசம்) ஆகிய இடங்களில் தமிழக அரசு இட ஒதுக்கீட்டில் பயின்று வரும் மாணவ/மாணவியருக்கும் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கல்வி நிதியிலிருந்து கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு

வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 2014–2015 ஆம் ஆண்டில் சேலத்திலுள்ள இந்திய கைத்தறி தொழில் நுட்ப பயிலகத்தில் பயிலும் 103 மாணவர்களுக்கும், கதக்கிலுள்ள (கர்நாடகம்) பயிலகத்தில் பயிலும் 3 மாணவர்களுக்கும் ரூ.12,000/–ம், வெங்கடகிரியிலுள்ள (ஆந்திரப் பிரதேசம்) பயிலகத்தில் பயிலும் 10 மாணவர்களுக்கும் ரூ.25,250/–ம் ஆக மொத்தம் ரூ.8.24 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

### 5.17 சிறந்த கைத்தறி ஏற்றுமதியாளர்களுக்கான பரிசு வழங்கும் திட்டம்

கைத்தறி துணிகளின் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கும், அயல்நாட்டு சந்தையில் கைத்தறி துணி விற்பனையினை மேம்படுத்தவும் தமிழ்நாட்டிலுள்ள சிறந்த கைத்தறி துணி ஏற்றுமதியாளர்களுக்கு பரிசு வழங்கும் திட்டத்தை 1975–ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிடையே ஏற்றுமதி உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் சிறந்த ஏற்றுமதியாளர்களுக்கும், நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கும் கேடயங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்க ஆண்டொன்றுக்கு ரூ.1.00 இலட்சம் வழங்கப்படுகிறது.

2015–2016–ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இதற்கென ரூ.1.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5.18 புதிய வடிவமைப்பை உருவாக்கும் சிறந்த நெசவாளர்களுக்கு பரிசு வழங்கும் திட்டம்

கைத்தறி இரகங்களில் புதிய வடிவமைப்புகளை அறிமுகப்படுத்துவதை ஊக்குவிக்கும் வகையில் பருத்தி மற்றும் பட்டு இரகங்களில் புதிய வடிவமைப்புகளை உருவாக்கும் சிறந்த நெசவாளர்களுக்கு பரிசு வழங்கும் திட்டம் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சிறந்த வடிவமைப்புகளுக்கான பரிசுத் தொகை விவரம் பின்வருமாறு:–

| | |
|---|---|
| முதல் பரிசு | ரூ.5,000 |
| இரண்டாம் பரிசு | ரூ.3,000 |
| மூன்றாம் பரிசு | ரூ.2,000 |

புதிய மற்றும் நவீன வடிவமைப்புகளை உருவாக்குவதை வழிவகுப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்திற்கான செலவினம் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டம் 2015–2016–ஆம் ஆண்டிலும் தொடரப்படும்.

## 5.19 தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெய்யும் தொழிலாளர் நலவாரியம்

**2000–2001**–ஆம் ஆண்டில் தமிழ்நாடு உடல் உழைப்பு தொழிலாளர் வாரியம் மற்றும் தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு தொழிலாளர் வாரியம் உட்பட **9** நலவாரியங்கள் தோற்றுவிக்கப்பட்டன. தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு தொழிலாளர் நல வாரியம் **21.07.2004** முதல் தமிழ்நாடு உடல் உழைப்பு வாரியத்துடன் இணைக்கப்பட்டது. இதன் பின்னர் அரசாணைப்படி இந்த வாரியம் தொழிலாளர் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் **01.09.2006** முதல் தனியே செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இவ்வாரியத்தின் தலைவராக உள்ளார். இந்த வாரியத்தில் ஏழு அரசுப்பிரதிநிதிகள், ஏழு தொழில் அளிப்பவர்களின் பிரதிநிதிகள் மற்றும் ஆறு தொழிலாளர் பிரதிநிதிகள் உறுப்பினர்களாக உள்ளனர். இந்த வாரியத்தால் கல்வி உதவி தொகை இயற்கை மரணம் / விபத்து / உடல் ஊனம் ஆகியவைகளுக்கான காப்பீடு அளிக்கப்பட்டு வருகிறது. அதன் விபரம் பின்வருமாறு:-

| வ.எண் | இனம் | ஒரு நபருக்கு வழங்கப்படும் நிதி உதவி (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | விபத்து காப்புறுதி<br>அ) விபத்தால் மரணம் | 1,00,000 |
| | ஆ) விபத்தால் ஊனம் (ஊனத்தின் தன்மையை பொறுத்து) | 1,00,000 வரை |
| | இ) செயற்கை உறுப்புகள் மற்றும் சக்கர நாற்காலி | |
| 2 | இயற்கை மரணம் | 15000 |
| 3 | ஈமச்சடங்கு உதவி | 2000 |
| 4 | கல்வி உதவி | |
| | i) 10ஆம் வகுப்பு பயிலும் பெண் குழந்தை | 1000 |
| | ii) 10ஆம் வகுப்பு தேர்ச்சி | 1000 |
| | iii) 11ஆம் வகுப்பு பயிலும் பெண் குழந்தை | 1000 |
| | iv) 12ஆம் வகுப்பு பயிலும் பெண் குழந்தை | 1500 |
| | v) 12ஆம் வகுப்பு தேர்ச்சி | 1500 |
| | vi) இளநிலை பட்டப்படிப்பு | 1500 |
| | vii) இளநிலை பட்டப்படிப்பு (விடுதி) | 1750 |
| | viii) முதுநிலை பட்டப்படிப்பு | 4000 |
| | ix) முதுநிலை பட்டப்படிப்பு (விடுதி) | 5000 |
| | x) தொழில்நுட்ப படிப்பு (Professional Degree) | 4000 |
| | xi) தொழில்நுட்ப படிப்பு (விடுதி) | 6000 |
| | xii) தொழில்நுட்ப மேற்படிப்பு | 6000 |
| | xiii) தொழில்நுட்ப மேற்படிப்பு (விடுதி) | 8000 |

| | | |
|---|---|---|
| | xiv) ஐடிஐ / பட்டயப்படிப்பு | 1000 |
| | xv) ஐடிஐ / பட்டயப்படிப்பு (விடுதி) | 1200 |
| 5 | திருமண உதவி அ) ஆண்<br>ஆ) பெண் | 3000<br>5000 |
| 6 | மருத்துவ உதவிகள் | |
| | i) மகப்பேறு உதவி<br>ii)கருக்கலைப்பு கருச்சிதைவு | 6000<br>3000 |
| | iii) மூக்குக்கண்ணாடி | 500 வரை |
| 7 | ஓய்வூதியம் (மாதம் ஒன்றுக்கு) | 1000 |

இந்நலவாரியத்தில் நாளது தேதியில் **2,68,282** நெசவாளர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.

இதுவரை, இவ்வாரியத்தின் மூலம் **2,40,369** நெசவாளர்களுக்கு மொத்தம் ரூ.**54.46** கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. **2014–2015–**ஆம் ஆண்டில் **33,029** பயனாளிகளுக்கு ரூ.**8.77** கோடி அளவிற்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

## 5.20 தமிழ்நாடு விசைத்தறி நெசவு தொழிலாளர் நலவாரியம்.

தமிழக அரசு விசைத்தறி நெசவு தொழிலாளர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தும் பொருட்டு, தமிழ்நாடு உடல் உழைப்பு தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைபடுத்துதல்) சட்டம் 1982இன் கீழ் ***"தமிழ்நாடு விசைத்தறி நெசவு தொழிலாளர் நலவாரியம்"*** என்ற அமைப்பினை ஏற்படுத்தியது. இந்த நலவாரியத்தின் மூலம்

விபத்து காப்பீடு பயன், இயற்கை மரணத்திற்கான காப்பீடு பயன், ஈமச்சடங்கு செலவினத்திற்கான உதவித்தொகை, கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை, கண் கண்ணாடி வாங்க உதவித்தொகை வழங்குவதுடன் ஓய்வூதிய பயன் போன்ற உதவித்தொகைகள் விசைத்தறி நெசவு தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. **1,42,893** விசைத்தறி நெசவு தொழிலாளர்கள் இவ்வாரியத்தில் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்கள் மற்றும் ரூ. **22.53** கோடி நிதியுதவி **1,03,943** பயனாளிகளுக்கு **31.3.2015** வரை வழங்கப்பட்டுள்ளது.

**2014–2015**–ஆம் ஆண்டில் **7,264** விசைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் புதிய உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். **23,214** பயனாளிகளுக்கு ரூ.**5.66** கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

### 5.21 கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம் 1985

கைத்தறி நெசவாளர்களையும், கைத்தறித் தொழிலையும் விசைத்தறிகள் ஆதிக்கத்திலிருந்து பாதுகாக்கும் பொருட்டு, மத்திய அரசானது கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம் **1985**–னை இயற்றி கீழ்க்காணும் **11** இரகங்களை பிரத்யேகமாக கைத்தறிகளில் உற்பத்தி செய்வதற்கு ஒதுக்கீடு செய்துள்ளது:–

| | |
|---|---|
| (1) சேலை | (2) வேட்டி |
| (3) துண்டு /கம்சா மற்றும் அங்கவஸ்திரம் | (4) லுங்கி |
| (5)ஜடார் மேகலா/பாநெக் | (6) ஜமக்காளம்/ டர்ரி (அ ) டர்ரட் |
| (7)டிரஸ் மெட்டீரியல் | (8)பேரெக் பிளாங்கெட், கம்பல் (அ) கம்பளிஸ் |
| (9)ஷால், லாய், மப்ளர், பங்கி முதலியன | (10) உல்லன் ட்வீடு |
| (11) கேஸ்/ பெட்ஷீட் / பெட் கவர்/ கவுண்டர்பேன்/ பர்னிசிங் (டேப்பஸ்டிரி, அப்ஹோல்ஸ்டிரி உள்பட) | |

இச்சட்டத்தை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம் 1985–ஐ தமிழ்நாட்டில் முனைப்புடன் செயல்படுத்திட துணை இயக்குநர் (அமலாக்கம்) அலுவலர் தலைமையில், சென்னையை தலைமையிடமாகக் கொண்டும் மற்றும் சரக அளவில் சேலம், திருச்செங்கோடு, ஈரோடு, திருப்பூர் மற்றும் மதுரை ஆகிய உதவி அமலாக்க அலுவலர்களின் தலைமையின் கீழ் சரக அலுவலகங்களும் பிரத்யேக அமலாக்கப்பிரிவாக செயல்பட்டு வருகிறது.

கைத்தறி தொழிலை பாதுகாக்கும் பொருட்டு விசைத்தறிகள் செறிந்துள்ள பகுதிகளில், விசைத்தறி நெசவாளர்கள் மற்றும் தொழிலாளர்களிடையே கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம் குறித்து தெரிவித்திட விழிப்புணர்வு பிரச்சாரங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம் 1985–னை தீவிரமாக செயல்படுத்தும்

பொருட்டு விசைத்தறிகள் செறிந்துள்ள பகுதிகளில் தொடர்ந்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2014–2015–ஆம் ஆண்டிற்கான விசைத்தறிகள் ஆய்வு இலக்காக 57,252 விசைத்தறிகள் நிர்ணயிக்கப்பட்டதில், மார்ச் 2015 திங்கள் முடிய 60,279 விசைத்தறிகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம் 1985–னை முனைப்புடன் செயல்படுத்தியதன் விளைவாக 77 முதல் தகவல் அறிக்கைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் 68 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டுள்ளன. 129 விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

## 5.22 கைத்தறி நெசவாளர் பயிற்சி மையங்கள்

தமிழக அரசு, கைத்தறி நெசவு, சாயப்பயிற்சி, வடிவமைப்பு, சித்திரப்பூ வேலைப்பாடு மற்றும் துணிகளில் சிறப்பு வேலைப்பாடு ஆகியவற்றில் கைத்தறி நெசவாளர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கும் பொருட்டு, ஈரோட்டில் ரூ.25.71 இலட்சம் மதிப்பீட்டில் கைத்தறி நெசவாளர் பயிற்சி மையத்தை நிறுவியுள்ளது. மேலும், கும்பகோணம், காஞ்சிபுரம் மற்றும் பரமக்குடி ஆகிய மூன்று இடங்களிலும் “கைத்தறி நெசவாளர் பயிற்சி மையங்கள்” தமிழக அரசால் அமைக்கப்பட்டுள்ளன.

இப்பயிற்சி மையங்களின் மூலம், வகுப்பறைப் பயிற்சி மற்றும் செய்முறைப் பயிற்சி என இருவகைப் பயிற்சிகள் கைத்தறி நெசவாளர்களுக்கு அளிக்கப்படுகின்றன. வகுப்பறைப் பயிற்சியில், தறி வகைகள், நூல் வகைகள் மற்றும் தரம், நெசவுத் தொழில் நுட்பம் ஆகியவற்றிலும், செயல்முறைப் பயிற்சியில் தடிம இரக துணி நெசவுப் பயிற்சி, சன்ன இரக துணி நெசவுப் பயிற்சி, மேம்படுத்தப்பட்ட ஜக்கார்டு தறியில் நெசவுப் பயிற்சி ஆகியவற்றிலும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இப்பயிற்சி மையங்களில் புதிய இரகங்களுக்கு மாறுவதற்கான நெசவு பயிற்சி அளிக்கப்படுவதால் கைத்தறி நெசவாளர்களது வருமானம் கணிசமாக அதிகரிக்கிறது. காலப் போக்கில் நலிந்து வரும் நெசவுத் தொழிலில் இளந்தலைமுறையினரை ஆர்வத்துடன் ஈடுபடுத்துவதே இப்பயிற்சி மையங்களின் பிரதான நோக்கமாகும்.

தமிழக அரசால் நிறுவப்பட்டுள்ள கைத்தறி நெசவாளர் பயிற்சி மையங்களின் செயல்பாடுகள் **31.03.2015**–ஆம் தேதிய நிலவரப்படி பின்வருமாறு உள்ளது:-

| வ.எண். | கைத்தறி நெசவாளர் பயிற்சி மையத்தின் பெயர் | பயிற்சி மையம் துவக்கப் பட்ட நாள் | ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை (ரூ.இலட்சத்தில்) | இதுவரை பயிற்சி பெற்றுள்ள பயிற்சியாளர் களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | கைத்தறி நெசவாளர் பயிற்சி மையம், ஈரோடு | 12.03.2010 | 25.71 | 1187 |
| 2. | கைத்தறி நெசவாளர் பயிற்சி மையம், கும்பகோணம் | 27.03.2013 | 46.09 | 742 |
| 3. | கைத்தறி நெசவாளர் பயிற்சி மையம், காஞ்சிபுரம் | 30.03.2013 | 46.09 | 457 |
| 4. | வடிவமைப்பு மற்றும் பயிற்சி மையம், பரமக்குடி | 31.03.2013 | 54.28 | 1000 |

## 5.23 கைத்தறி முத்திரைத் திட்டம்

கைத்தறி துணி இரகங்களுக்கு தனித் தன்மையை உருவாக்கி, அதன் விற்பனையை உள்நாடு மற்றும் வெளிநாடுகளிலும் அதிகரிக்கும் நோக்கோடு கைத்தறி முத்திரைத் திட்டம் மத்திய அரசால் 28.06.2006–இல் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் கைத்தறி உற்பத்தியாளர்களுக்கு தனித்தன்மை கிடைப்பதுடன், கைத்தறி உற்பத்திப் பொருட்களை தனித்து அறியவும், வாடிக்கையாளர்களுக்கு உண்மையான கைத்தறி உற்பத்தி என்பதற்கான உத்தரவாதமும் கிடைக்கப்பெற்று விற்பனையை அதிகரிக்க வழிவகுக்கிறது. இத்திட்டம் மத்திய ஜவுளித் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள டெக்ஸ்டைல்ஸ் கமிட்டி மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது

தமிழ்நாட்டில் தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் (கோ–ஆப்டெக்ஸ்), தனி நபர்கள், தனியார் நெசவாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள், கைத்தறி முத்திரை திட்டத்தின் கீழ் பதிவு செய்து கைத்தறி முத்திரையினை உபயோகம் செய்து வருகின்றனர். 31.03.2015 தேதிய நிலவரப்படி மொத்தம் 8,200 நிறுவனங்கள்/தனியார்கள் இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

**5.24 பட்டு முத்திரை**

உள்ளூர் சந்தையிலும், சர்வதேச சந்தையிலும், பட்டு இரகங்களின் விற்பனையினை அதிகரிக்கும் பொருட்டு, மத்திய அரசு **17.04.2004** முதல் பட்டு முத்திரைத் திட்டத்தை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. சுத்தமான இயற்கை பட்டு வகைகளான மல்பெரி, டஸ்ஸர், எரி அல்லது முகா

பட்டினை கொண்டு தரத்தினை உறுதி செய்து உற்பத்தி செய்யப்படும் பட்டு ரகங்களில் இப்பட்டு முத்திரை ஒட்டப்படுகிறது. அங்கீகரிக்கப்பட்ட உபயோகிப்பாளர்கள் மட்டுமே இப்பட்டு முத்திரை வில்லைகளை உபயோகிக்கலாம். இந்த பட்டு முத்திரைத் திட்டம், மத்திய அரசின் ஜவுளி அமைச்சகத்தின் மத்திய பட்டு வாரியத்தின் நிதி பங்களிப்புடன் கர்நாடக சங்கங்களின் பதிவு சட்டம் **1960**–இன் கீழ் பதிவு செய்யப்பட்ட இந்திய சில்க் மார்க் நிறுவனம் (SMOI) மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த நிறுவனத்தில் தனியார் நிறுவனங்கள், மத்திய மற்றும் மாநில அரசு நிறுவனங்கள், மாநில மற்றும் தனியார் நிறுவனங்கள் உறுப்பினர்களாக சேரலாம். இந்த நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் மட்டுமே அவர்களது பட்டு உற்பத்தியில் பட்டு முத்திரை வில்லைகளை உபயோகிக்கலாம்.

இது வரை, **81** பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் இந்திய சில்க் மார்க் நிறுவனத்தில் உறுப்பினர்களாக சேர்ந்து அங்கீகரிக்கப்பட்ட உபயோகிப்பவர்களாக உள்ளனர்.

**6. பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம், திருப்பூர்**

நாட்டின் ஆயத்த ஆடை மற்றும் பின்னலாடை உற்பத்தியில் திருப்பூர் முக்கிய பங்கு வகிக்கின்றது. ஆயத்த ஆடை ஏற்றுமதியில் நாட்டின் முக்கிய மையமாக திருப்பூர்

விளங்குகின்றது. திருப்பூரிலிருந்து 2014–2015 –ஆம் ஆண்டில் ரூ.20,730 கோடி அளவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது மீண்டும் அதிக சாதனையாக பதிவு செய்யப்பட்டுள்ளது. திருப்பூரில் 743 சாயச்சாலைகள் உள்ளன. அதிக எண்ணிக்கையில் ஜவுளி நிறுவனங்கள், சாயமிடுதல், வெளுத்தல் மற்றும் பதனிடுதல் போன்ற பணிகளில் ஈடுபட்டு வருவதால் இதன்மூலம் வெளியேற்றப்படும் சாயக்கழிவு நொய்யல் ஆறு மற்றும் இதர நீர் நிலைகளில் கலப்பதால் நீர் நிலைகள் மாசு அடைந்து நீர் மற்றும் நிலத்தின் தரம் பாதிப்படைகின்றது.

திருப்பூர் பகுதியில் சாயம் மற்றும் சலவை தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரை சுத்திகரிக்க, ரூ.742.94 கோடி திட்ட மதிப்பீட்டில், 18 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க ரூ.519.46 கோடி அளவுக்கு வங்கியில் கடன் பெற்று அமைக்கப்பட்டன. வங்கி கடன் வட்டி சுமை அதிகரிப்பினால் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் கடன் சுமையினை குறைக்க நிர்வாகம் சார்பில் அரசிடம் கோரிக்கை வைத்தனர்.



**பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், திருப்பூர் உயிரி வடிகட்டும் பிரிவு**

கடன் சுமையைக் குறைக்கும் நோக்கத்தோடு, மத்திய மற்றும் மாநில அரசு ரூ.300 கோடியினை மானியமாக 18 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு வழங்கியது. அதில் மைய அரசின் பங்கு ரூ.187.50 கோடியும், மாநில அரசின் பங்கு ரூ.112.50 கோடியும் ஆகும். ஒப்பளிப்பு செய்யப்பட்ட மானிய தொகையானது வங்கிகளுக்கு விடுவிக்கப்பட்டு, 18 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் நிலுவைக் கடன் தொகை நேர்செய்யப்பட்டது.

மேலும், கூடுதல் கருவிகளை கொள்முதல் செய்து நிறுவி, பூஜ்ய கழிவுநீர் நிலையை எட்டும் பணியை மேற்கொள்ள, 18 பொது சுத்திகரிப்பு நிலையங்களுக்கு வட்டியில்லா கடன்

தொகையாக **ரூ.179.34** கோடியினை அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது.



**பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், திருப்பூர்**
**எதிர் சவ்வூடு பரவுதல் முறை பிரிவு**

திருப்பூரில் அமைக்கப்பட்ட **18** பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு **31.03.2015** முடிய ஒப்பளிப்பு செய்யப்பட்ட மானியம் மற்றும் வட்டியில்லா கடன் விபரங்கள் பின்வருமாறு **:–**

**(ரூபாய் கோடியில்)**

| வ.எண். | பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு | சுத்திகரிப்பு நிலையத்தின் அலகுகள் | வெளியேற்றப்படும் கழிவுநீர் அளவு (MLD) | வங்கிகளிடம் இருந்து பெறப்பட்ட கடன் நிலுவை தொகை (31.03.2010) | மைய, மாநில அரசுகள் வழங்கிய மானியம் | | | மாநில அரசு வழங்கியுள்ள வட்டியில்லா கடன் தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | மைய அரசின் மானியத் தொகை | மாநில அரசின் மானியத் தொகை | மொத்த மானியத் தொகை | |
| 1 | வீரபாண்டி | 74.86 | 72 | 12.00 | 54.22 | 20.04 | 12.02 | 32.06 | 19.81 |
| 2 | அங்கேரி பாளையம் | 60.72 | 77 | 10.00 | 40.60 | 15.42 | 9.25 | 24.67 | 16.25 |
| 3 | பார்க் | **26.69** | **3** | **2.00** | **18.87** | **6.97** | **4.18** | **11.15** | **3.88** |
| 4 | மண்ணரை | **28.74** | **28** | **4.20** | **22.40** | **8.28** | **4.97** | **13.25** | **8.12** |
| 5 | எஸ். பெரியபாளையம் | **14.15** | **7** | **1.50** | **10.72** | **3.94** | **2.36** | **6.30** | **2.92** |
| 6 | சிறுபூலுவாப்பட்டி | **53.01** | **24** | **5.00** | **35.30** | **13.05** | **7.83** | **20.88** | **9.70** |
| 7 | காரைப்புதூர் | **33.00** | **25** | **4.50** | **19.85** | **7.64** | **4.59** | **12.23** | **8.73** |
| 8 | ஆண்டிப் பாளையம் | **23.00** | **20** | **4.50** | **12.72** | **5.03** | **3.02** | **8.05** | **8.00** |
| 9 | வேட்டுவபாளையம் | **6.90** | **9** | **1.50** | **3.99** | **1.47** | **0.88** | **2.35** | **2.92** |
| | நொய்யல் (SPV) | **203.85** | | | **135.68** | **50.89** | **30.54** | **81.43** | **0** |
| 10 | அ) அருள்புரம் | | **15** | **5.50** | **0** | **0** | **0** | **0** | **10.67** |
| 11 | ஆ) கள்ளிக்காடு | | **12** | **3.00** | **0** | **0** | **0** | **0** | **5.82** |
| 12 | இ) முருகம்பாளையம் | | **67** | **11.00** | **0** | **0** | **0** | **0** | **19.94** |
| 13 | ஈ) ராயபுரம் | | **25** | **5.50** | **0** | **0** | **0** | **0** | **10.67** |
| | மங்களம் ஈஸ்டர்ன் (SPV) | **90.31** | | | **59.75** | **22.43** | **13.46** | **35.89** | **0** |
| 14 | அ) மங்களம் | | **17** | **4.00** | **0** | **0** | **0** | **0** | **7.76** |
| 15 | ஆ) ஈஸ்டர்ன் | | **27** | **5.80** | **0** | **0** | **0** | **0** | **10.00** |
| | திருப்பூர் தொழிலியல் (SPV) | **127.71** | | | **86.26** | **32.34** | **19.40** | **51.74** | **0** |
| 16 | அ) சின்னக்கரை | | **29** | **8.00** | **0** | **0** | **0** | **0** | **15.52** |
| 17 | ஆ) காசிப்பாளையம் | | **14** | **4.40** | **0** | **0** | **0** | **0** | **7.96** |
| 18 | இ) குண்ணங்கல் பாளையம் | | **19** | **5.50** | **0** | **0** | **0** | **0** | **10.67** |
| **மொத்தம்** | | **742.94** | **490** | **97.90** | **500.36** | **187.50** | **112.50** | **300** | **179.34** |

## 7. ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா திட்டம்

ஜவுளித்தொழிலில், சர்வதேச தரத்துடன் கூடிய உட்கட்டமைப்பு வசதிகளை ஒரே இடத்தில் ஏற்படுத்தும்

வகையில் மத்திய அரசு  ஏற்கனவே நடைமுறையில் இருந்த இரண்டு திட்டங்களான ஆயத்த ஆடை ஏற்றுமதி பூங்கா திட்டம் மற்றும் ஜவுளித்தொழில் மைய உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களை இணைத்து ஒருங்கிணைந்த ஜவுளிப்பூங்கா திட்டம் என்ற திட்டத்தினை **2005 –**ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தியது.

இத்திட்டம் சர்வதேச தரத்துடன் கூடிய புதிய ஜவுளிப்பூங்காக்கள், வளர்ச்சியடையக் கூடிய மையங்களில் அமைக்க உதவும். இத் திட்டமானது பொது–தனியார் பங்களிப்பு மற்றும் திட்டத் தொகையில் மத்திய அரசின் **40** சதவீதம் அல்லது ரூ.**40.00** கோடிக்கு மிகாமல் அரசு மான்யத்தை கொண்டது. திட்டத் தொகையில் **9** சதவீதம் அதாவது ரூ.**9.00** கோடிக்கு மிகாமல் மான்யமாக வழங்கி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் ஜவுளிப்பூங்காவின் தொழில் முனைவோர்களுக்கு பல்வேறு உரிமங்கள் பெறுவதற்கும், நிலத்தினை பதிவு செய்தல் போன்ற  சலுகைகள் பெறுவதற்கும் துறை உதவி செய்து வருகிறது.

இது வரையில் ஒருங்கிணைந்த ஜவுளிப்பூங்கா திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் **9** ஜவுளிப் பூங்காக்கள் அமைக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.




**ஜவுளி பூங்கா, கரூர் மாவட்டம்**



**ஜவுளி பூங்காவில் நெசவு அலகு**

## பல்வேறு திட்டங்களில் ஒப்புதலளிக்கப்பட்ட ஜவுளிப் பூங்காக்களின் தற்போதைய நிலை கீழ்க்கண்டவாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது

| வ. எண். | திட்டத்தின் பெயர் | ஒப்பளிப்பு செய்யப்பட்ட வருடம் | திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்) | மத்திய அரசு மானியம் | மாநில அரசு மானியம் | நேரடி / மறைமுக வேலைவாய்ப்பு பெறுவோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| **ஆயத்த ஆடை ஏற்றுமதி பூங்கா திட்டம்<br>( Apparel park for Exports Scheme)** | | | | | | |
| 1 | நேதாஜி ஆயத்த ஆடை பூங்கா, திருப்பூர் | 2002 | 17.62 | 13.76 | 50 சதவீதம் பத்திர பதிவு சலுகை | 16000 |
| 2 | ஆயத்த ஆடை பூங்கா இருங்காட்டுக் கோட்டை, காஞ்சிபுரம் | 2004 | 26.70 | 10.68 | சிப்காட் நிலம் | 20000 |
| **ஜவுளித் தொழில் மைய உட்கட்டமைப்பு வசதி மேம்பாட்டுத் திட்டம்<br>(Textile Centre Infrastructure Development Scheme)** | | | | | | |
| 3 | ஜவுளித் தொழில் மையங்களுக்கான அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டம், காஞ்சிபுரம் | 2004 | 21.81 | 19.08 | 2.73 | உட் கட்டமைப்பு |
| 4 | காற்றாலை மின் உற்பத்தி திட்டம், டெகிக், (TEKIC) திருப்பூர். | 2003 | 25.00 | 12.25 | காற்றாலை மின் உற்பத்தி திட்டம் | |
| 5 | காவேரி உயர் தொழில் நுட்ப நெசவுப் பூங்கா, குமாரப்பாளையம் | 2005 | 20.83 | 15.93 | 3.98 | 3500 |
| **ஒருங்கிணைந்த ஜவுளி பூங்கா திட்டம்<br>(Scheme for Integrated Textile parks)** | | | | | | |
| 6 | உயர் தொழில் நுட்ப நெசவுப் பூங்கா,பல்லடம், திருப்பூர் மாவட்டம் | 2006 | 55.42 | 22.17 | 4.98 | 6000 |
| 7 | உயர்தொழில் நுட்ப நெசவுப் பூங்கா, குமாரப்பாளையம் நாமக்கல் மாவட்டம் | 2006 | 34.82 | 13.93 | 3.13 | 3000 . |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 8 | மதுரை ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா, வாடிப்பட்டி. மதுரை. | 2007 | 78.76 | 31.50 | 7.08 | 8500 . |
| 9 | ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா, கரூர் மாவட்டம் | 2007 | 116.10 | 40.00 | 9.00 | 7000 . |
| 10 | கில்ட் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா, செங்கப்பள்ளி, திருப்பூர் மாவட்டம் | 2006 | 149.45 | 40.00 | 9.00 | 12500 |
| 11 | சைமா பதனிடும் ஆலை, கடலூர் மாவட்டம் | 2007 | 111.60 | 40.00 | 9.00 | 15000 |
| 12 | காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா நூற்றாண்டு கைத்தறி பட்டுப் பூங்கா, காஞ்சிபுரம் மாவட்டம் | 2010 | 83.83 | 33.53 | 7.54 | 10000 |
| 13 | எஸ்.எல்.எஸ் ஜவுளிப் பூங்கா, பாகலூர், கிருஷ்ணகிரி மாவட்டம் | 2011 | 126.20 | 40.00 | 9.00 | 7330 |
| 14 | பல்லவாடா தொழில் நுட்ப ஜவுளிப் பூங்கா, பல்லவாடா, ஈரோடு மாவட்டம் | 2011 | 115.27 | 40.00 | 9.00 | 5300 |
| **மொத்தம்** | | | **983.41** | **372.83** | **74.74** | **114130** |

## 8. துறையின் நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் நிறுவனங்கள்

### 8.1 தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் லிமிடெட், சென்னை

கூட்டுறவு அமைப்பில் உறுப்பினரல்லாத நெசவாளர்களுக்கு கைத்தறி, விசைத்தறி மற்றும் பின்னலாடை இரகங்களின் உற்பத்தி, விற்பனை மற்றும் சந்தைப்படுத்துதல் ஆகியவற்றிற்காக நிதியுதவி

வழங்கும் நோக்கத்துடன் தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் **1964–**ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

இக்கழகம், **11,841** நபர்களை உறுப்பினர்களாக கொண்டுள்ளது. அரசு இதர பிரிவுகளுக்கு விரிவுபடுத்தியதைப் போல கடன் தள்ளுபடித் திட்டத்தை அமல்படுத்த வாய்ப்புள்ளதை எதிர்நோக்கி, உறுப்பினர்கள் கடன் தொகையை திரும்பச் செலுத்தாததால், இக்கழகம் குறைந்த நடைமுறை மூலதனத்துடன் செயல்பட்டு வருகிறது. கடன் மற்றும் வட்டி வசூலித்தல் மந்தமாக இருந்தபோதிலும், இக்கழகம் தனது இதர நடவடிக்கைகள் மூலம் ஈட்டி வரும் தொகையினைக் கொண்டு அதனுடைய உறுப்பினர்களுக்கு கடனுதவி வழங்கி வருகிறது.

இக்கழகம் அரசு மற்றும் உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட பங்கு மூலதனம் மற்றும் பாரத மாநில வங்கியில் பெற்ற காசுக்கடன் ஆகியவை மூலம் பின்வருமாறு நிதி திரட்டி உள்ளது.

(ரூபாய் இலட்சத்தில்)

| பங்கு மூலதனம் | | | | வங்கிக் காசுக்கடன் | |
|---|---|---|---|---|---|
| அ | அரசின் பங்கு | **267.00** | | பாரத மாநில வங்கி | **330.00** |
| ஆ | உறுப்பினர்கள் | **162.24** | | | |
| மொத்தம் | | **429.24** | | | |

ராஷ்ட்ரிய ஸ்வஸ்திய பீமா யோஜனா என்ற மருத்துவ காப்பீட்டு திட்டம், ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டுத் திட்டம், விரிவாக்கப்பட்ட கைத்தறி வளர்ச்சி திட்டத்தின் கீழ் குழும வளர்ச்சித் திட்டம் போன்ற இதர நலத்திட்டங்களை

செயல்படுத்தும் நடவடிக்கைகளிலும் இக்கழகம் தன்னை ஈடுபடுத்தி உள்ளது.

ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் முதல் நிலையில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட 9 கைத்தறி குழும வளர்ச்சித் திட்டங்களின் செயல்படுத்தும் முகமை நிறுவனமான இக்கழகம் அனைத்து பணிகளையும் நிறைவு செய்துள்ளது. 2014–15–ஆம் ஆண்டில் இக்கழகம் 105 கடன்களுக்கான தொகை ரூ.52.13 இலட்சத்தினை வழங்கியுள்ளது. 2014–2015–ஆம் நிதியாண்டில் கழகத்தின் உத்தேச நிகர இலாபம் ரூ.12.85 இலட்சமாக உள்ளது.



**2015–2016 ஆம் ஆண்டுக்கான செயல்திட்டம்**

- 210 உறுப்பினர்களுக்கு ரூ.175 இலட்சம் அளவிற்கு மறுகடன் ஒப்பளிப்பு செய்யவும், மறுகடன் வழங்கவும், கடன்தாரர்களிடமிருந்து ரூ.170 இலட்சம் கடன் மற்றும் ரூ.120 இலட்சம் வட்டியினை வசூலிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.
- கைத்தறி நெசவாளர்கள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டு வரும் ராஷ்ட்ரிய ஸ்வஸ்திய பீமா யோஜனா என்ற மருத்துவ காப்பீட்டு திட்டத்தை செயல்படுத்தும் முகமை நிறுவனமாக தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சி கழகத்தை அரசு நியமனம் செய்துள்ளது.
- ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டு திட்டத்தினை செயல்படுத்தும் முகவராக தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தினை அரசு நியமனம் செய்துள்ளது. இக்கழகம், 2015-2016–ஆம் ஆண்டிலும், பயிற்சி திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்தும்.
- திருச்சி பெரும் கைத்தறி குழுமத்தை செயல்படுத்தும் முகவராகவும், குழும மேலாண்மை மற்றும் தொழில் நுட்ப முகமை நிறுவனமாகவும், தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சி கழகத்தை அரசு நியமனம் செய்துள்ளது. இதற்கான வரைவு திட்ட அறிக்கைக்கு ஜவுளி அமைச்சகம் ஒப்புதல்

அளித்துள்ளதன் அடிப்படையில் இத்திட்டத்தின் கீழ் பல்வேறு இனங்கள் **2015–2016–**ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட உள்ளன.

- இக்கழகம் ஆகாஷ் நிறுவனம் மூலமாக ரெயில்வே துறைக்கு ரூ.**10.00** கோடி மதிப்பிலான கைத்தறி துணிகளை விற்பனை செய்யவும் திட்டமிட்டுள்ளது.
- **2015–2016–**ஆம் ஆண்டில் தேதிய கைத்தறி வளர்ச்சி கழகம் மூலம் ஆலைவாயில் விலையில் ரூ.**185** இலட்சம் அளவிற்கு நூல் விற்பனை செய்ய உத்தேசித்துள்ளது.

## 8.2 கூட்டுறவு நூற்பாலைகள்

தமிழகத்தில் **18** கூட்டுறவு நூற்பாலைகள் **1958** முதல் **1985** வரையிலான காலக்கட்டத்தில் **4.70** இலட்சம் கதிர்களுடன் கிராமப்புற நெசவாளர் குடும்பங்கள், தாயகம் திரும்பியோர் மற்றும் ஆதிதிராவிட மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குதல் மற்றும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் நூல் தேவையினை நியாயமான விலையில் தடையின்றி வழங்கும் நோக்குடன் துவங்கப்பட்டன.

பொருளாதார மந்த நிலை, சந்தை நிலவரம், பஞ்சு விலையேற்றம், பழைய இயந்திரங்கள், உற்பத்தி குறைவு

மற்றும் மூலதனப் பற்றாக்குறை போன்ற பல்வேறு காரணங்களினால் 13 கூட்டுறவு நூற்பாலைகள் முற்றிலுமாக செயலிழந்தன. இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை தவிர இதர 12 கூட்டுறவு நூற்பாலைகள் கலைத்தல் நடவடிக்கையில் உள்ளன. தற்பொழுது அண்ணா கூட்டுறவு நூற்பாலை, ஆண்டிப்பட்டி, பாரதி கூட்டுறவு நூற்பாலை, எட்டயபுரம் , கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, ஆரல்வாய்மொழி, புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, அறந்தாங்கி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, ஊத்தங்கரை ஆகியவைகள் தொடர்ந்து இயங்கி வருகின்றன. இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை நவீனப்படுத்தப்பட்டு 04.03.2015 முதல் சோதனை ஓட்ட உற்பத்தியைத் துவங்கியுள்ளது.

**கூட்டுறவு நூற்பாலைகளின் 2014–2015 ஆம் ஆண்டிற்கான சாதனைகள்**

- கடந்த 2013–2014–ஆம் ஆண்டில் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டவாறு, கூட்டுறவு நூற்பாலைகளில், நூல் உற்பத்தி மற்றும் தரத்தினை மேம்படுத்துவதற்கு ஏதுவாக, தொழிலாளர்களின் பங்கேற்பினை ஊக்குவிக்கும் பொருட்டு, 2014–2015–ஆம் ஆண்டிலும் ஒவ்வொரு

ஆலையிலும் சிறப்பாக பணியாற்றியதாக தேர்வு செய்யப்பட்ட தொழிலாளிக்கு ரொக்கப்பரிசாக தலா ரூ.25,000/– மற்றும் நற்சான்றிதழ் வழங்கப்பட்டது.


- விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டம், பொங்கல் 2015–இன் கீழ் துணி வகைகளை உற்பத்தி செய்வதற்காக ரூ.44.12 கோடி மதிப்புள்ள 1881 மெட்ரிக் டன் நூலினை நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு இயங்கும் கூட்டுறவு நூற்பாலைகள் வழங்கியுள்ளன.
- சீருடை வழங்கும் திட்டத்தின் கீழ் 2014–2015–ஆம் ஆண்டில் துணி வகைகளை உற்பத்தி செய்வதற்காக ரூ.53.38 கோடி மதிப்புள்ள 2125.47 மெட்ரிக் டன் நூலினை நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு இயங்கும் கூட்டுறவு நூற்பாலைகள் வழங்கியுள்ளன.
- சீருடை வழங்கும் திட்டத்தின் கீழ் 2015–2016–ஆம் ஆண்டில் துணி வகைகளை உற்பத்தி செய்வதற்காக ரூ.50.00 கோடி மதிப்புள்ள 2100 மெட்ரிக் டன் நூலினை நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு உற்பத்தி செய்து வழங்கும் பணியில் இயங்கும் கூட்டுறவு நூற்பாலைகள் முனைப்புடன் ஈடுபட்டுள்ளன. இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலைக்கும் இத்திட்டத்திற்கான நூல் உற்பத்தி திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

- பல்வேறு அரசு திட்டங்களின் கீழ் துணி வகைகளை தயாரிக்கத் தேவையான நூல் இரகங்களை ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக உற்பத்தி செய்து வழங்கும் பணியை அனைத்து இயங்கும் கூட்டுறவு நூற்பாலைகளும் வெற்றிகரமாக நிறைவேற்றி வருகின்றன.

## 8.3. தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் லிமிடெட், கோயம்புத்தூர்

தமிழகத்தில் மூடப்பட்ட நலிவுற்ற ஆலைகளின் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் பொருட்டும், ஜவுளி தொழிலுக்கு புத்துயிரூட்டவும், தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் முற்றிலும் அரசு நிறுவனமாக 24.04.1969 அன்று 1956ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் கீழ் துவங்கப்பட்டது.

தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்திற்கு தலா 96 தறிகளுடன் இரண்டு விசைத்தறிக்கூடங்கள், அருப்புக்கோட்டை (விருதுநகர் மாவட்டம்) மற்றும் சிவகிரியில் (ஈரோடு மாவட்டம்) செயல்பட்டு வருகின்றன. மேலும் கோயம்புத்தூரிலுள்ள குறிச்சியில் ஒரு தானியங்கி தறிக்கூடம் 36 சாதா தறிகளுடன் செயல்பட்டு வருகின்றது.



**விசைத்தறி கூடம், தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், கோயம்புத்தூர்**

இக்கழகம், மேற்படி விசைத்தறிக் கூடங்களில் பாலியஸ்டர் சூட்டிங் பேண்ட் மற்றும் சட்டை துணி வகைகளை உற்பத்தி செய்து பல்வேறு அரசு நிறுவனங்களுக்கு வழங்கி வருகின்றது. மேலும் இக்கழகம், அரசின் விலையில்லா சீருடைத்துணி வழங்கும் திட்டத்திற்கு சட்டை துணி, சூட்டிங் பேண்ட் துணி, கேஸ்மெண்ட் மற்றும் டிரில் ஆகிய துணிகளை உற்பத்தி செய்து வழங்கி வருகின்றது.

அரசின் மதிய உணவு திட்டத்தின் (கல்வியாண்டு **2014-2015)** கீழ் வழங்கும் சீருடை துணிகளை இக்கழகம் வழங்கி வருகின்றது. மேற்காணும் அரசு திட்டங்களுக்கு

**2014–2015**ஆம் ஆண்டில் இக்கழகம் வழங்கிய மொத்த சீருடைத் துணிகளின் விவரம் பின்வருமாறு:–

| ஆண்டு | உருப்படி (இலட்சம் மீட்டர்களில்) | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 2014–2015 | 377.13 | 20724.03 |

இக்கழகம், **2014–2015–**ஆம் ஆண்டிற்கு விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின் கீழ் வேட்டி உற்பத்தி செய்து வழங்க ஆணைகள் பெற்றுள்ளது. விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தின் கீழ் இக்கழகம் உற்பத்தி செய்து வழங்கப்பட்ட வேட்டி சேலைகளின் முன்னேற்ற விவரம் பின்வருமாறு:–

| ஆண்டு | உருப்படி (இலட்சத்தில்) | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 2014–2015 | 1.31 | 133.52 |

இக்கழகம் மாநில போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு மின்சார வாரியம், கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், தமிழ்நாடு சிமெண்ட், மாநகராட்சிகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களிடமிருந்து பாலியஸ்டர் சீருடைத் துணிகள் விநியோகம் செய்ய ஆணைகள் பெற்றுள்ளது. அதன்படி விநியோகம் செய்த விவரங்கள் பின்வருமாறு:–

| ஆண்டு | அளவு (இலட்சம் மீட்டர்களில்) | விற்பனை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 2014–2015 | 6.73 | 458.12 |

இக்கழகத்தின் **2014–2015**–ஆம் ஆண்டிற்கான உத்தேச நிதி செயல்பாடுகள் விவரம் பின்வருமாறு:–

| ஆண்டு | மொத்த உற்பத்தி (இலட்சம் மீட்டர்களில்) | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) | மொத்த விற்பனை (இலட்சம் மீட்டர்களில்) | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) | நிகர லாபம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 2014–2015 | 16.49 | 659.88 | 26.90 | 1202.92 | 198.47 |

## 2015–2016ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம்

இக்கழகம், அரசு திட்டத்திற்கு தேவைப்படும் **38.57** இலட்சம் மீட்டர்கள் சீருடைத் துணிகளையும், அரசு நிறுவனங்களுக்குத் தேவையான ரூ.**1397.44** இலட்சம் மதிப்புள்ள துணிகளையும் உற்பத்தி செய்ய உத்தேசித்துள்ளது.

மேலும் **2015–2016**–ஆம் ஆண்டில், விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலிருந்து உற்பத்தியாகும் சீருடைத் துணிகளில் **115.56** இலட்சம் மீட்டர் துணிகளை அரசு திட்டத்திற்காக வழங்க திட்டமிட்டுள்ளது.

## 8.4 தமிழ்நாடு சரிகை ஆலை லிமிடெட், காஞ்சிபுரம்

தமிழ்நாடு சரிகை ஆலை, பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்குத் தேவைப்படும் சரிகையினை உற்பத்தி செய்யும் நோக்கத்துடன் **1974** ஆம் ஆண்டு

தொடங்கப்பட்டது. இந்நிறுவனம் ISO 9001 : 2008 தரச் சான்று பெற்ற மாநில அரசு சார்ந்த ஒரு பொதுத்துறை நிறுவனமாகும். இந்நிறுவனம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்குத் தேவைப்படும் சரிகையினை உற்பத்தி செய்து, நியாயமான விலையில் விநியோகம் செய்து வருகின்றது. இந்நிறுவனம், சரிகை உற்பத்தியினை மேற்கொள்வது மட்டுமல்லாமல், மத்திய சரிகை கொள்முதல் குழுவின் ஒதுக்கீட்டு ஆணையின் மூலம் பெறப்படும் சரிகையின் தரத்தினை பரிசோதனை செய்யும் பணியினையும் மேற்கொண்டு வருகின்றது. இந்நிறுவனம் காஞ்சிபுரத்தில் நிறுவியுள்ள "எக்ஸ்ரே ஊடுகதிர் பகுப்பாய்வு இயந்திரம்" (X-Ray Fluorescence analyzer) மூலம் சரிகை மாதிரிகள் மற்றும் சரிகையைக் கொண்டு தயாரிக்கப்பட்ட துணிகள் போன்றவற்றிற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் (Non Destructive Method) அவற்றில் உள்ள சரிகையின் தரத்தை ஆய்வு செய்யும் பணியையும் மேற்கொள்கிறது.

இந்நிறுவனத்தில் 6 பணியாளர்களும் 86 தொழிலாளர்களும் பணிபுரிகின்றனர்.



**தமிழ்நாடு சரிகை ஆலை**

இந்நிறுவனம் சரிகை உற்பத்திக்குத் தேவைப்படும் மூலப்பொருளான வெள்ளிப்பட்டிழையினை கொள்முதல் செய்து உற்பத்தி செய்து வருகிறது. அரசு, தமிழ்நாடு சரிகை ஆலைக்கு ரூ.123.14 இலட்சம் பங்காக செலுத்தியுள்ளது.

தமிழ்நாடு சரிகை ஆலையின் தொழிலாளர்களுக்கு புதிய ஊதிய உயர்வாக மாதம் ஒன்றுக்கு ரூ.1,600/– உயர்த்தி வழங்கி தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

2014–2015–ஆம் ஆண்டில் இந்நிறுவனம் 28276 மார்க்குகள் சரிகை உற்பத்தியினை மேற்கொண்டு ரூ.27.04 கோடி மதிப்புள்ள 26745 மார்க்குகள் விற்பனை செய்து தோராயமாக ரூ.15 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது.

**2015–2016–ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம்**

தமிழ்நாடு சரிகை ஆலை, **2015–2016**–ஆம் ஆண்டில் மாதம் ஒன்றுக்கு **2500** மார்க் சரிகையினை உற்பத்தி செய்து விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளது.

தங்க முலாம் பூசும் பிரிவிற்கு மட்டும் சூரிய ஒளி மின்சாரம் தயாரித்து உபயோகிக்கும் திட்டத்தை **2015–2016**-ஆம் ஆண்டில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**8.5 தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை லிமிடெட், ஈரோடு**

வெளுத்தல், சாயமிடல், மெருகேற்றல், அச்சிடல் போன்ற பல்வேறு பதனிடும் பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை, 1973ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இவ்வாலை ISO:9001-2008 சான்றிதழ் பெற்ற நிறுவனமாகும். இவ்வாலை தமிழக அரசு சீருடைத் திட்டத்திற்கான துணிகளை பதனிடுவதோடு மட்டுமல்லாமல் மாதம் ஒன்றிற்கு **21** இலட்சம் மீட்டர் துணிகளைப் பதனிடும் திறன் பெற்றுள்ளது. இவ்வாலை, தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், காதி சர்வோதயா சங்கம், கோவை மத்திய சிறைச்சாலை, கைத்தறி வளர்ச்சிக் கழகம், கேரளா மற்றும் கர்நாடகா ஆகியவற்றின் துணிகளை பதனிடுதல் மற்றும் அச்சிடும் பணிகளை மேற்கொண்டு வருகிறது. தேசிய ஜவுளி கழகம், கோவை மற்றும்

தனியார் ஏற்றுமதியாளர் வழங்கும் துணிகளைப் பதனிடும் பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

இவ்வாலை பூஜ்ய கழிவு நீர் வெளியேற்றும் பணிக்கு எதிர் சவ்வூடு பரவுதல் முறை மற்றும் திடக்கழிவு மேலாண்மை முறையில் (Reverse Osmosis plant with Reject Management System) சாயக்கழிவு நீரினை சுத்திகரித்தல் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட நீரினை மீண்டும் பதனிடுவதற்கு பயன்படுத்துகிறது.

இந்நிறுவனத்தின் **2013–2014** மற்றும் **2014–2015** **–**ஆம் ஆண்டின் செயல்பாட்டு விவரம் பின்வருமாறு:**–**

| வ. எண் | விவரம் | 2013–2014 | | 2014–2015 | |
|---|---|---|---|---|---|
| | | (அளவு கிலோ கிராம் / மீட்டர் இலட்சத்தில், மதிப்பு ரூ.இலட்சத்தில்) | | | |
| | | அளவு | மதிப்பு | அளவு | மதிப்பு |
| 1 | வெளுத்தல் | 18.60 கி.கி | 149.69 | 17.08 கி.கி | 146.62 |
| 2 | சாயம் தோய்த்தல் | 18.16 கி.கி | 2259.28 | 16.15 கி.கி | 2318.14 |
| 3 | அச்சிடுதல் | 0.27 மீ. | 19.52 | 0.35 மீ. | 34.33 |
| 4 | பாலியஸ்டர் துணி பதனிடுதல் | 136.10 மீ. | 2375.41 | 124.05 மீ. | 2408.48 |
| 5 | பருத்தி துணி பதனிடுதல் | 3.42 மீ. | 53.08 | 4.70 மீ. | 90.61 |
| 6 | மொத்த வணிகம் | | 2428.49 | | 2499.09 |
| 7 | நிகர இலாபம் | (+) 124.39 | | (+) 160.67 | |

இவ்வாலை 2014–2015–ஆம் ஆண்டில், 128.75 இலட்சம் மீட்டர் துணிகளை பதனிட்டு ரூ.24.99 கோடி மதிப்பிற்கு பதனீட்டுக் கூலியாக பெற்றுள்ளது. ஆலை இவ்வாண்டில் ரூ.160.67 லட்சம் நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

**8.6 தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் லிமிடெட் (டான்ஸ்பின்), சென்னை**

தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் (டான்ஸ்பின்), கூட்டுறவு நூற்பாலைகளின் பஞ்சு கொள்முதல் நடைமுறையினை முறைப்படுத்தும் பொருட்டு, டிசம்பர், 1994 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இவ்விணையத்தின் முக்கிய நோக்கம் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கூட்டுறவு நூற்பாலைகளுக்கும் தேவையான தரமான பஞ்சினை, நியாயமான விலையில் நாடு முழுவதும் உள்ள பல்வேறு கூட்டுறவு நிறுவனங்கள், இணையங்கள், இந்திய பஞ்சு கழகம் மூலம் கொள்முதல் செய்து விநியோகிப்பதாகும். இதற்காக, தமிழக அரசு பங்கு மூலதனமாக ரூ.25 கோடியும், பஞ்சு சுழற்சி நிதியாக ரூ.2.07 கோடியும், இவ்விணையத்திற்கு வழங்கியுள்ளது.

2011–2012–ஆம் ஆண்டில் டான்ஸ்பின் நிறுவனம் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் மூலமாக இயங்கும் ஐந்து கூட்டுறவு நூற்பாலைகளுக்கு பஞ்சு கொள்முதல் செய்து கொள்ள ஏதுவாக ரூ.1.50 கோடி

முன்பணம் வழங்கியுள்ளது. இது தவிர, கூட்டுறவு நூற்பாலைகளுக்கு பஞ்சு கொள்முதல் செய்வதற்காக நேரடியாக ரூ.**65.00** இலட்சம் முன்பணம் வழங்கியுள்ளது. மேலும் டான்ஸ்பின் நிறுவனம் கிருஷ்ணகிரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலைக்கு பஞ்சு கொள்முதல் செய்வதற்காக ரூ.**25.00** இலட்சம் கடனுதவி வழங்கியுள்ளது. இதன் மூலம் இவ்விணையம் சேவைக் கட்டணமாக ரூ.**72.38** இலட்சம் பெற்று **2014–2015**–ஆம் ஆண்டில் தோராயமாக ரூ.**41.55** இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது.

## 8.7 தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட் (கோ–ஆப்டெக்ஸ்)

மாநில அளவில் முதன்மையான மற்றும் மிகப்பெரிய கூட்டுறவு நிறுவனமாக விளங்கி வரும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம், தமிழக நெசவாளர் பெருமக்களுக்கு தொடர்ந்து சேவையாற்றி தனது **80** ஆண்டு கால பணியினை நிறைவு செய்துள்ளது. கோ– ஆப்டெக்ஸ் என்ற பிரசித்தி பெற்ற வணிகப் பெயரில் அழைக்கப்பட்டு வரும் இந்நிறுவனம், மாநில அளவிலான கூட்டுறவு நிறுவனமாக **1935** –ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது.

**8.7.1 நிறுவனம்**

கோ–ஆப்டெக்ஸ், நாடு முழுவதும் பரந்து விரிந்துள்ள தனது 200 விற்பனை நிலையங்கள் மூலமாக கைத்தறித் துணி இரகங்களை சந்தைப்படுத்தி வருகிறது. இதில் 133 விற்பனை நிலையங்கள் தமிழ்நாட்டிலும், 67 விற்பனை நிலையங்கள் வெளி மாநிலங்களிலும் செயல்பட்டு வருகின்றன.


முதியோர் ஒய்வூதியம் பெறும் பயனாளிகளுக்கு விலையில்லா வேட்டி சேலைகள் வழங்கும் திட்டம், மற்றும் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு விலையில்லா சீருடை வழங்கும் திட்டம் ஆகிய அரசுத் திட்டங்களை நிறைவேற்றும் முகமை நிறுவனமாக கோ–ஆப்டெக்ஸ் நியமிக்கப்பட்டுள்ளது. மேலும் மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதியுதவியுடன் சில கைத்தறி குழுமத்திட்டங்களையும் கோ–ஆப்டெக்ஸ் செயல்படுத்தி வருகிறது. கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:–

1) நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் உற்பத்தியை சந்தைப்படுத்துவதற்கு உறுதுணையாக இருத்தல்
2) கூட்டுறவு அமைப்பின் கீழ் இயங்கும் கைத்தறி பிரிவின் உற்பத்தியை அதிகரித்தல்


3) மாநிலத்தில் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பு வழங்குதல்.

### 8.7.2 2014–2015–ஆம் ஆண்டின் செயல்பாடுகள்


2014–2015– ஆம் ஆண்டில், ரூ.306.57 கோடி மதிப்பிற்கு கைத்தறி மற்றும் விசைத்தறி துணி இரகங்களின் சில்லறை விற்பனை மேற்கொள்ளப்பட்டன. இது கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் நடைபெற்ற சில்லரை விற்பனையை விட, ரூபாய் 4.59 கோடி அதிகமாகும். 6 விற்பனை நிலையங்களை நவீனப்படுத்தியது, பிரசித்திப்பெற்ற பெரிய நிறுவனங்களில் வளாக விற்பனை செய்தது, புதிய வடிவமைப்புகளுடன் கூடிய இரகங்களான பட்டுச்சட்டைகள், குர்தீஸ் மற்றும் நியாய விலையில் அறிமுகப்படுத்தப்பட்ட ஜெயகார்த்திகா சேலைகள் போன்ற புதிய இரகங்களை அறிமுகப்படுத்தியதாலும் இந்த கூடுதல் விற்பனை சாதனையை கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் எய்தியுள்ளது.




**சில்லரை விற்பனை**




**இரகவாரியான விற்பனை 2014–2015**




**துணிவகை வாரியான விற்பனை 2014–2015**

### 8.7.3 அரசுத்திட்டங்கள்

#### 8.7.3.1 முதியோர் ஒய்வூதியம் பெறும் பயனாளிகளுக்கு விலையில்லா வேட்டி சேலை வழங்குதல்

முதியோர் ஒய்வூதியம் பெறும் பயனாளிகளுக்கு விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின் முகமை நிறுவனமாக கோ–ஆப்டெக்ஸ் விளங்கி வருகிறது. தீபாவளி 2014 மற்றும் பொங்கல் 2015 பண்டிகையின் போது 40.65 இலட்சம் சேலைகளும், 15.64 இலட்சம் வேட்டிகளும் முதியோர் ஒய்வூதிய பயனாளிகளுக்கு கோ–ஆப்டெக்ஸ் வழங்கியுள்ளது. இம்மொத்த விநியோகத்தின் மதிப்பு சுமார் ரூ.101.29 கோடி ஆகும்.

**8.7.3.2 பள்ளிச் சீருடைத் துணி விநியோகம்**

**2013–2014**ஆம் ஆண்டு **(2014–2015** கல்வி ஆண்டு**)** பள்ளி மாணவர்களுக்கு சீருடைத் துணிகள் வழங்கும் முகமை நிறுவனங்களில் ஒரு நிறுவனமாக கோ–ஆப்டெக்ஸ் நியமிக்கப்பட்டு, கீழ்க்காணும் விபரப்படி சீருடைத்துணிகளை வழங்கியுள்ளது.

| **வ.எண்** | **இரகம்** | **வழங்கப்பட்ட துணிகளின் அளவு (இலட்சம் மீட்டரில்)** |
|---|---|---|
| 1 | மெரூன் டிரில் | 36.09 |
| 2 | மெரூன் கேஸ்மெண்ட் | 86.01 |
| 3 | மெரூன் சட்டைத்துணி | 1.36 |
| 4 | லைட் பிரவுன் சட்டைத்துணி | 1.62 |
| 5 | லைட் பிரவுன் துப்பட்டா | 75.84 |
| **மொத்தம்** | | **200.92** |

பள்ளிச் சீருடைத் திட்டத்தின் கீழ் வழங்கியுள்ள இரகங்களின் மொத்த மதிப்பு தோராயமாக ரூ.**100.29** கோடி ஆகும்.

## 8.7.4 2014–2015ஆம் ஆண்டு விற்பனையை மேம்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

### 8.7.4.1 **ஐந்து ஜவுளி பரிசோதனைக் கூடங்கள் துவக்கம்**

கோ–ஆப்டெக்ஸ் தலைமை அலுவலகத்தில் ஜவுளி பரிசோதனைக்கூடம் துவங்கப்பட்டதை அடுத்து, மேலும் ஐந்து ஜவுளி பரிசோதனை கூடங்கள் கைத்தறி உற்பத்தியில் முக்கிய மையங்களான சேலம், கோயம்புத்தூர், சென்னிமலை, (ஈரோடு) மதுரை மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளது. உறுப்பினர் சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் இரகங்கள், இந்த தரப்பரிசோதனை கூடங்களில் ஆய்வு செய்யப்பட்டு அதன் தரம் உறுதிபடுத்தப்படுகிறது.



**காஞ்சிபுரம் பரிசோதனைக் கூடம்**

### 8.7.4.2 மின் வணிகம்

கோ–ஆப்டெக்ஸ் வாடிக்கையாளர்கள் இணையதளம் மூலம் துணிகளை வாங்கிட **www.cooptex.com** என்ற மின்வணிக தளம் **15.12.2014** அன்று துவக்கப்பட்டுள்ளது. துவக்கத்தில், பட்டு மற்றும் பருத்தி சேலை இரகங்கள் மட்டுமே மின்வணிக முறையில் விற்பனைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. வாடிக்கையாளர்களின் ஆதரவினைத் தொடர்ந்து, தற்போது பட்டு சட்டைகள், பருத்தி சட்டைகள், சுடிதார் இரகங்கள், பருத்தி மற்றும் பட்டு இரக வேட்டிகள், படுக்கை விரிப்புகள் மற்றும் பருத்தி இரக அச்சிட்ட சேலை இரகங்களும் மின்வணிகம் மூலம் விற்பனைக்கு கூடுதலாக வைக்கப்பட்டுள்ளன. அதிக எண்ணிக்கையிலான இரகங்களை மின்வணிகம் மூலம் மேற்கொள்வதால் எதிர்வரும் நாட்களில் விற்பனையை கணிசமாக உயர்த்தி, அதன் மூலம் ஒட்டு மொத்த விற்பனையின் மதிப்பை அதிகரிக்க வழிவகை ஏற்பட்டுள்ளது. **31.03.2015** வரை, **146** வாடிக்கையாளர்களுக்கு ரூ**5,12,578/–** மதிப்பிற்கு மின்வணிகம் மூலம் விற்பனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 8.7.4.3 பரிசுக்கூப்பன் திட்டம் அறிமுகம்

**2014–2015**–ஆம் ஆண்டில் கோ–ஆப்டெக்ஸ் ஒரு புதிய வணிக யுத்தியாக பரிசுக்கூப்பன் திட்டத்தினை

அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த திட்டத்தில் வாடிக்கையாளர்கள் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் ஏதாவது ஒரு விற்பனை நிலையத்தில் பணம் செலுத்தி, செலுத்தும் தொகைக்கு பரிசுக் கூப்பனைப் பெற்றுக்கொள்ளலாம். இப்பரிசுக் கூப்பனை வாடிக்கையாளர்கள் தமது உற்றார் உறவினர்களுக்கு வழங்கி, அதனை தெரிவு செய்யப்பட்ட கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களில் தங்களுக்கு தேவையான கைத்தறி துணிகளை பரிசுக் கூப்பன் மதிப்பிற்கு பெற்றுக்கொள்ளலாம். பரிசுக் கூப்பன்களை வாங்குவதன் மூலம் தனது சமூக பங்களிப்பிற்கு உதவுவதோடு, தமிழக கைத்தறி நெசவாளர்களுக்கும் உதவி புரிய இயலும்.

**31.03.2015** வரை ரூ.**10,63,000/–** மதிப்புள்ள பரிசுக் கூப்பன்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. பரிசுக் கூப்பன்கள் ரூ.**500/–** முதல் ரூ.**2,000/–** வரையிலான மதிப்பிற்கு கிடைக்கும்.



### 8.7.4.4 புதிய இரகங்கள்

கோ–ஆப்டெக்ஸ் **2014–2015**–ஆம் ஆண்டில் பல்வேறு புதிய இரகங்களை அறிமுகப்படுத்தியுள்ளது, அவற்றில் குர்தீஸ், ஆடவருக்கான பட்டு சட்டைகள், ஜெயகார்த்திகா சேலைகள் மற்றும் இயற்கை பருத்தி சேலைகள் ஆகியவை குறிப்பிடத்தக்க இரகங்களாகும்.




**இயற்கை சாயமிடப்பட்ட பருத்தி சேலை**

இயற்கை பருத்தியில் இரசாயன கலப்படமற்ற இயற்கை சாயங்களை பயன்படுத்தி பருத்தி சேலைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. மூன்று ஆண்டு காலமாக இரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் பயன்படுத்தாத விளை நிலங்களில் இயற்கை பருத்தி உருவாக்கப்படுகிறது.

மேற்கண்ட வகையில் உற்பத்தியாகும் பருத்தி கீழ்க்குறிப்பிட்டுள்ள தாவரங்களிலிருந்து ரசாயன கலப்பற்ற முறையில் தயாரிக்கப்படும் இயற்கை வண்ணங்கள் கொண்டு சாயம் தோய்க்கப்படுகிறது.

1. கருங்காலி (பழுப்பு நிறம்)
2. அவுரி நீலம் (கருநீலம்)
3. கமலா மரம் (சிவப்பு)
4. மஞ்சிச்சி (சிவப்பு, இளஞ் சிவப்பு, செம்மஞ்சள்)
5. மாதுளை தோல் (மஞ்சள்)

இவை வாடிக்கையாளர்களின் அமோக ஆதரவைப் பெற்றுள்ளன.

### 8.7.4.5 புதிய வடிவமைப்பு இரகங்களின் அறிமுகம்

2014–2015ஆம் ஆண்டிற்கான புதிய இரக அறிமுகக் குறியீடான 1000 வடிவமைப்புகள் என்பதையும் தாண்டி சுமார் 1110 புதிய வடிவமைப்புகள் பல்வேறு இரகங்களில் கண்கவர் வண்ணக் கலவைகளில் கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களில் விற்பனைக்கு அறிமுகப்படுத்தப்பட்டன. அறிமுகப்படுத்தப்பட்ட புதிய வடிவமைப்புகளில் குறிப்பிடத்தக்க இரகங்கள் பின்வருமாறு.

1. முகூர்த்த பட்டுச் சேலைகள்

2. சங்கீத் சேலைகள்
3. வடிவியல் வடிவமைப்பு தொகுப்பு பட்டுச் சேலைகள்
4. ஜெயகார்த்திகா சேலை தொகுப்புகள்.
5. கோலம் தொகுப்புகள்
6. மகாராணி பட்டுச் சேலைகள்.



மகாராணி பட்டு சேலை

கோ–ஆப்டெக்ஸ் 200 ஆண்டுகளுக்கு முந்தைய சேலைகள் வடிவமைப்புகளிலிருந்தும், மகாராணிகள் உடுத்திய சேலைகளின் புகைப்பட தொகுப்புகளிலிருந்தும், புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம் சமஸ்தானம், தலைவன் கோட்டை வம்சாவழியினர் மற்றும் மைசூர் சமஸ்தானம் ஆகிய இடங்களுக்கு சென்று சேலைகளின் அழகு மற்றும் மதிப்பு மாறாமல் மகாராணி பட்டு சேலை வடிவமைப்புகள்

உருவாக்கப்பட்டன. மகாராணி பட்டுச் சேலைகள் பழங்கால பாரம்பரியங்களைப் பிரதிபலிக்கும் நோக்கத்துடன் மேம்படுத்தப்பட்டு புத்துயிர் ஊட்டும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஆடை நாகரீகத்தின் அற்புத அம்சமான புதிய வடிவமைப்பு சேலைகள் இளையதலைமுறை வாடிக்கையாளர்கள் மத்தியில் மிகுந்த ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளது.

### 8.7.4.6 தங்கமழைத் திட்டம்

பண்டிகைக் காலங்களான தீபாவளி, கிருஸ்துமஸ் மற்றும் பொங்கல் ஆகிய விழாக்காலங்களில் சில்லரை விற்பனையை ஊக்குவிக்கும் நோக்கில், **“தங்க மழைத் திட்டம்”** என்னும் திட்டத்தினை ரொக்கத்திற்கு வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு கோ–ஆப்டெக்ஸ் கடந்த ஆண்டைப்போல் நடப்பு ஆண்டிலும் தொடர்ந்து நடைமுறைப்படுத்தியது. வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் பரிசுகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு, முதல் பரிசாக 110 வாடிக்கையாளர்களுக்கு 4 கிராம் தங்க நாணயமும், 330 நபர்களுக்கு ஆறுதல் பரிசாக 2 கிராம் தங்க நாணயமும் 11 மண்டலங்களில் வழங்கப்படவுள்ளது.

### 8.7.4.7 கனவு நனவு திட்டம்

**“கனவு நனவு திட்டம்”** என்னும் பிரபலமான மாதாந்திர சேமிப்புத் திட்டத்தினை கோ–ஆப்டெக்ஸ் வழங்கி வருகிறது.

**2014–2015–**ஆம் ஆண்டில் இத்திட்டத்தில் **36,000** வாடிக்கையாளர்கள் சேர்ந்துள்ளனர். இதன் மூலம் முதல் தவணையாக ரூ. **125.00** இலட்சம் வசூலித்துள்ளது. வாடிக்கையாளர்கள் பணம் செலுத்தியுள்ளனர். ரூ.**20.28** கோடி மதிப்பிற்கு **2014–2015–**ஆம் ஆண்டில் விற்பனை நடைபெற்றுள்ளது.

### 8.7.4.8 இரண்டு வாங்கினால் ஒன்று இலவசம்

**2011–2012** –ஆம் ஆண்டு **இரண்டு வாங்கினால் ஒன்று இலவசம்** என்கிற புதுமையான திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. வாடிக்கையாளர்களின் மகத்தான ஆதரவினால், இத்திட்டம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. **2013–2014** ஆம் ஆண்டில் ரூ. **36.54** கோடி அளவிற்கு சில்லரை விற்பனை செய்து சாதனை எய்தியுள்ளது. இந்த ஆண்டும், கோ–ஆப்டெக்ஸ் **23.02.2015** முதல் **31.03.2015** வரை இத்திட்டத்தினை செயல்படுத்தி ரூ. **29.40** கோடி மதிப்பிற்கு விற்பனை செய்துள்ளது.

### 8.7.4.9 பெரிய நிறுவனங்களில் முகாம் விற்பனை மேற்கொள்ளுதல்

பெரிய கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், துறைகள், அரசு சாரா நிறுவனங்கள் போன்ற நிறுவனங்களுக்கு அவர்கள் அலுவலகத்திற்கு நேரடியாகச் சென்று பிரத்தியேக

முகாம் விற்பனை செய்யும் வணிக யுத்தியைக் கோ—ஆப்டெக்ஸ் நடைமுறைப்படுத்தி வருகிறது. **2014—2015—**ஆம் ஆண்டில், சென்னையில் அமைந்துள்ள இராமச்சந்திரா மருத்துவக்கல்லூரி, இந்திய மேலாண்மை நிறுவனம், அகமதாபாத், வி.ஐ.டி, வேலூர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், லார்சன் & டூப்ரோ(L&T), அப்பல்லோ மருத்துவமனை, Dr.M.S.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம், கலாஷேத்ரா மற்றும் இந்திய அறிவியல் கழகம் பெங்களூர் போன்ற நிறுவனங்களில் கோ—ஆப்டெக்ஸ் நிறுவனம் முகாம் விற்பனை நடத்தியுள்ளது.

### 8.7.4.10 2014—2015—ஆம் ஆண்டு நவீனப்படுத்தப்பட்ட விற்பனை நிலையங்கள்

**2014—2015—**ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட கோ—ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் நவீனப்படுத்தப்பட்டன.

1. முல்லை விற்பனை நிலையம், கடலூர்.
2. புதுச்சேரி விற்பனை நிலையம், புதுச்சேரி
3. பாலமுருகன் விற்பனை நிலையம், கோயம்புத்தூர்.
4. தக்கலை விற்பனை நிலையம், கன்னியாகுமரி.
5. பாளையங்கோட்டை விற்பனை நிலையம், திருநெல்வேலி.
6. காந்திமதி விற்பனை நிலையம், திருநெல்வேலி.
7. காலிக்கட் விற்பனை நிலையம், காலிக்கட்



முல்லை விற்பனை நிலையம், கடலூர்




காலிக்கட் விற்பனை நிலையம், காலிக்கட்

## 8.7.4.11 2014–2015–ஆம் ஆண்டில் புதியதாகத் திறக்கப்பட்ட விற்பனை நிலையங்கள்

2014–2015–ஆம் ஆண்டில், கீழ்க்கண்ட இடங்களில் புதியதாக கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் திறக்கப்பட்டன.

1. அல்சூர்– பெங்களூர் மண்டலம்
2. முலுண்டு – மும்பை மண்டலம்
3. கோட்டயம் – கேரளா, கோயம்புத்தூர் மண்டலம்.




**முலுண்டு விற்பனை நிலையம் – மும்பை மண்டலம்**

### 8.7.4.12 விற்பனை நிலைய ஊழியர்களுக்கு பயிற்சி அளித்தல்

வாடிக்கையாளர்களை நல்லமுறையில் வரவேற்பதற்கும், இன்முகத்துடன் பேசும் திறமையை வளர்க்கவும் மற்றும் விற்பனை நிலையத்தில் உள்ள இரகங்களை வாடிக்கையாளர்களுக்கு நல்லமுறையில் எடுத்துக் கூறி விற்பனையைப் பெருக்கவும், கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களில் பணியாற்றும் **130** விற்பனை நிலைய பணியாளர்களுக்கு, அண்ணா மேலாண்மை பயிற்சி நிறுவனத்தில் **2015**ஆம் ஆண்டு பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்பட்டது.

இப்பயிற்சியானது வாடிக்கையாளர்களை திருப்திப்படுத்தி அதன் மூலம் விற்பனையை அதிகரிக்க வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 8.7.4.13 கணினி மயமாக்கல்

கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் செயல்பாடுகளை அனைத்து நிலைகளிலும், அதாவது வடிவமைப்புகளை தேர்ந்தெடுப்பதிலிருந்து, வாடிக்கையாளர்களுக்கு துணிகளை சேர்ப்பது வரை, கணினிமயமாக்கும் திட்டம் “இன்போடெக்ஸ்” (Infotex) என்ற பெயரில் நடைமுறைபடுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு “திட்ட மேலாண்மை

குழு” (Project Management Committee) தேர்வு செய்யப்பட்டு அதன் மூலம் மென்பொருள் ஒருங்கிணைப்பாளர் (System Integrator) தெரிவு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

### 8.7.5. தமிழக அரசின் சிறப்பு கைத்தறி இரக ஏற்றுமதிக்கான விருது.

கோ–ஆப்டெக்ஸ் இண்டர்நேஷனல் 100% கைத்தறி ஏற்றுமதி இரகங்களான படுக்கை விரிப்புகள், மேஜை விரிப்புகள், சமையலறை துண்டுகள், கைத்துண்டுகள், பிளேஸ் மேட்கள், ரன்னர்கள், ஏப்ரன், கை உறைகள், பாட் ஹோல்டர்கள், தலையணை உறைகள், கைப்பைகள் ஆகிய இரகங்களை பெல்ஜியம், பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஸ்பெயின், சுவிட்சர்லாந்து மற்றும் பிரிட்டன் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகின்றது.

**2013–2014** ஆம் ஆண்டிற்கான “சிறந்த கூட்டுறவு கைத்தறி இரக ஏற்றுமதியாளருக்கான” விருதினை தமிழக அரசு கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது.

கோ–ஆப்டெக்ஸ் இண்டர்நேஷனல், ஜெர்மனி நாட்டிலுள்ள பிராங்க்பர்ட் நகரில் **14.01.2015** முதல் **17.01.2015** வரை நடைபெற்ற, ஜவுளி இரகங்களுக்கான ஹெய்ம் ஜவுளி

கண்காட்சியில் தனது இரகங்களை காட்சிப்படுத்தி புது வாடிக்கையாளர்களை கவரும் நோக்கில் கலந்து கொண்டது.

### 8.7.6 குழும வளர்ச்சித் திட்டம் (மைய அரசு உதவியுடன் செயல்படும் திட்டம்)

**8.7.6.1** கைத்தறி மற்றும் துணிநூல் துறை, கோ—ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு 10 சிறிய கைத்தறி குழுமங்களையும் மற்றும் 4 சிறிய பட்டு கைத்தறி குழுமங்களையும் செயல்படுத்துவதற்கு அனுமதி அளித்தது. இந்தக் குழுமங்களின் நடவடிக்கைகள் பல்வேறு கட்டங்களில் நிறைவடையும் தருவாயில் உள்ளன.

**8.7.6.2** கோ—ஆப்டெக்ஸ் செயல்படுத்தும் வகையில் ஒருங்கிணைந்த கைத்தறி குழும வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 2006—2007—ஆம் ஆண்டில் திருவண்ணாமலை மற்றும் குறிஞ்சிப்பாடி ஆகிய பகுதிகளில் இரு பெரிய குழும வளர்ச்சித் திட்டங்கள் ஒவ்வொன்றும் ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த மத்திய அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டது. இந்த இரண்டு குழுமங்களின் பல்வேறு இனங்களின் செயலாக்கம் நிறைவடைந்துள்ளது.

### 8.7.6.3 விருதுநகர் கைத்தறி பெருங்குழுமம்

ஒருங்கிணைந்த கைத்தறி குழும வளர்ச்சி திட்டத்தின் கீழ் (CHCDS) விருதுநகர் கைத்தறி பெருங்குழுமம் 2009—2010—ஆம் ஆண்டு மத்திய அரசால் அறிவிக்கப்பட்டு,

அதற்கென ரூபாய் **87.68** கோடி நிதி ஒதுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில், மத்திய அரசு ரூ.**70.00** கோடி மானியமாகவும் மீதமுள்ள தொகை, மாநில அரசும் மற்றும் பயனாளிகள் பங்களிப்பாகவும் இருக்கும்.

இத்திட்ட விவரம் பின்வருமாறு:-

**(ரூ. இலட்சத்தில்)**

| வ. எண் | வழங்கப்படும் உதவிகள் | மத்திய அரசு பங்கு | மாநில அரசு/பயனாளிகள் பங்குத் தொகை | மொத்தத் தொகை |
|---|---|---|---|---|
| 1 | தொழில்நுட்ப மேம்பாடு | 3998.19 | 803.55 | 4801.74 |
| 2 | பொதுவசதி மையங்கள் | 1054.86 | 361.22 | 1416.08 |
| 3 | கழிவுநீர் சுத்திகரிப்பு வசதியுடன் கூடிய சாயச் சாலைகள் | 714.04 | 380.96 | 1095.00 |
| 4 | விற்பனை/பயிற்சி/ வடிவமைப்பு வசதிகள் | 1189.14 | 222.45 | 1411.59 |
| 5 | குழும மேலாண்மை மற்றும் தொழில்நுட்ப முகமை கட்டணம் (கோ–ஆப்டெக்ஸ்) | 43.62 | - | 43.62 |
| **மொத்தம்** | | **6999.85** | **1768.18** | **8768.02** |

கைத்தறி நெசவாளர்களின் திறனை மேம்படுத்தி பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி தரமான கைத்தறி பொருட்களை உற்பத்தி செய்வதன் மூலம், அதற்கு தகுந்த கூலி உயர்வு நெசவாளர்களுக்கு கிடைக்கச் செய்வதுடன், நெசவாளர்களின் வேலைப்பளுவை குறைப்பதும் இத்திட்டத்தினுடைய முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தின் மூலம் விருதுநகர் மற்றும் அதனை சுற்றியுள்ள **6** மாவட்டங்களின் உபகுழுமங்களான அருப்புக்கோட்டை, திருவில்லிபுத்தூர், சுந்தரபாண்டியம், ராஜபாளையம், பரமக்குடி, எமனேஸ்வரம், காரைக்குடி, செல்லூர், நிலையூர், சங்கரன்கோயில், வீரவநல்லூர், கடையநல்லூர், எட்டயபுரம் மற்றும் சாயர்புரம் பகுதிகளில் உள்ள சுமார் **30,000** கைத்தறி நெசவாளர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற்று வருகின்றனர்.

| **வ.எண்** | **மாவட்டம்** | **நெசவாளர்கள் எண்ணிக்கை** |
|---|---|---|
| 1 | விருதுநகர் | 9,133 |
| 2 | மதுரை | 9,642 |
| 3 | இராமநாதபுரம் | 4,839 |
| 4 | திருநெல்வேலி | 3,855 |
| 5 | தூத்துக்குடி | 903 |
| 6 | சிவகங்கை | 678 |
| | மொத்தம் | 29,050 |

இத்திட்டம் கீழ்காணும் உட்கூறுகளைக் கொண்டுள்ளது.

| | |
|---|---|
| அ) | தொழில்நுட்ப மேம்பாடு |
| ஆ) | கழிவுநீர் சுத்திகரிப்பு வசதியுடன் சாய சாலைகள் உருவாக்குதல் |
| இ) | விற்பனை / பயிற்சி / வடிவமைப்பு வசதிகள் உருவாக்குதல் |

விருதுநகர் கைத்தறி பெருங்குழுமத் திட்டத்தினை செயல்படுத்துவதற்கு மத்திய அரசு, தொழில் நுட்ப மேம்பாட்டிற்காக கீழ்க்காணும் தறி உபகரணங்கள் வழங்க ரூ.**4801.74** இலட்சம் (மத்தியஅரசு – ரூ **3998.19** இலட்சம், மாநில அரசு/பயனாளிகள் முனைவோர் பங்கு தொகை**–** ரூ**803.55** இலட்சம்) ஒப்புதல் அளித்து அதனை செயல்படுத்தும் முகமை நிறுவனமாக தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தினை (கோ–ஆப்டெக்ஸ்) நியமித்துள்ளது.

இத்திட்டத்திற்கு கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு அரசு வழங்கியுள்ள தொகையின் விவரம் பின்வருமாறு :-

(ரூ.இலட்சத்தில்)

| வ.எண் | கட்டம் | மத்தியஅரசு | மாநில அரசு | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | முதல் கட்டம் | 599.72 | 73.22 | 672.94 |
| 2 | இரண்டாம் கட்டம் | 999.54 | 123.70 | 1,123.24 |
| 3 | மூன்றாம் கட்டம் | 1,199.46 | 111.25 | 1,310.71 |
| | **மொத்தம்** | **2,798.72** | **308.17** | **3,106.89** |

மேற்குறிப்பிட்டவாறு **31.03.2015** தேதி வரை பெறப்பட்ட நிதி உதவியினைக் கொண்டு, கீழ்க்காணும் உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு பயனாளிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

| வ. எண் | உபகரணங்கள் | மொத்த அலகுகள் | |
|---|---|---|---|
| | | கொள்முதல் ஆணை வழங்கப்பட்டது | விநியோகம் |
| 1 | பெடல் தறிகள் | 6,876 | 4,438 |
| 2 | மின் விசையுடன் கூடிய ஊடை நூல் சுற்றும் இயந்திரம் | 8,925 | 5,325 |
| 3 | 120 ஊக்கு ஜக்கார்டு பெட்டி | 6,866 | 5,164 |
| 4 | டாபி பெட்டிகள் | 139 | 70 |

| | | | |
|---|---|---|---|
| 5 | மின்னியல் ஜக்கார்டு தூக்கு இயந்திரம் | 82 | 52 |
| 6 | அச்சு மற்றும் விழுதுகள் | 9,431 | 6,975 |
| 7 | மின்கலத்துடன் கூடிய மின்விளக்கு | 11,410 | 10,716 |

மூன்றாம் கட்ட பணி நடைபெற்று வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள தறி மற்றும் உபகரணங்களினால், உற்பத்தி அதிகரித்ததோடு நெசவாளர்களின் கூலியும் கணிசமாக உயர்ந்துள்ளது. விருதுநகர் கைத்தறி பெருங்குழுமத்தின் கீழ் உட்கட்டமைப்பு வசதிகள் செய்து தர கீழ்காணும் அரசு நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

| **வ.எண்** | **வழங்கப்படும் உதவிகள்** | **அரசு முகமை நிறுவனங்களின் விவரம்** |
|---|---|---|
| **1** | பொது வசதி மையங்கள் | தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம், சென்னை. |
| **2** | கழிவுநீர் சுத்திகரிப்பு வசதியுடன் கூடிய சாயச்சாலை | தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை, ஈரோடு. |
| **3** | விற்பனைக் கூடம் / பயிற்சி மையம் / வடிவமைப்பு மையங்கள் அமைத்தல் | தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட். (கோ–ஆப்டெக்ஸ்), சென்னை. |

### 8.7.7 2015–2016 –ஆம் ஆண்டிற்கான விற்பனைக் குறியீடு

கோ–ஆப்டெக்ஸ், புதிய வடிவமைப்புகளை உருவாக்குதல், புதிய இரகங்களை அறிமுகம் செய்தல், விற்பனை நிலையங்களை நவீனப்படுத்துதல், அரசுத்துறை நிறுவனங்களின் துணித் தேவைகளை வழங்குதல் ஆகிய நடவடிக்கைகள் மூலம் **2015–2016–**ஆம் ஆண்டிற்கு ரூ.**350** கோடியை தனது விற்பனை இலக்காக நிர்ணயித்துள்ளது.

## 9. 2015–201 6–ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட ஒதுக்கீடு

மாநில அரசு ‘‘கைத்தறி மற்றும் துணிநூல்’’ துறைக்கு **2015-2016–**ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் பின்வரும் விவரப்படி ரூ. **1096.3383** கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது:-

| **வ. எண்** | **திட்டத்தின் பெயர்** | **வரவு செலவு திட்ட ஒதுக்கீடு 2015-2016 (ரூபாய் இலட்சத்தில்)** |
|---|---|---|
| 1 | விலையில்லா சேலைகள் மற்றும் வேட்டிகள் வழங்கும் திட்டம் | **49916.00** |
| 2 | கைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மின்சாரம் வழங்கும் திட்டம் | 985.00 |
| 3 | விசைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மின்சாரம் வழங்கும் திட்டம் | 30342.00 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வரவு செலவு திட்ட ஒதுக்கீடு 2015-2016 (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 4 | வட்டி மானியம் வழங்கும் திட்டம் | 1050.00 |
| 5 | கைத்தறித் துணிகள் விற்பனைக்கு தள்ளுபடி மானியம் வழங்குதல் | 7845.50 |
| 6 | மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா திட்டத்தின் கீழ் தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர்களுக்கு காப்பீட்டுக் கட்டணம் செலுத்துதல் | 200.00 |
| 7 | கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் (8 விழுக்காடு மாநில அரசு பங்கு) | 1200.00 |
| 8 | கைத்தறி நெசவாளர்களுக்கான நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டம் | 250.00 |
| 9 | முதியோர் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் வழங்கும் திட்டம் | 2165.93 |
| 10 | விரிவான கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் குழும வளர்ச்சித் திட்டம் | 1000.00 |
| 11 | விரிவான கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் குழு அணுகுமுறைத் திட்டம் | 100.00 |
| 12 | விரிவான கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் விற்பனை ஊக்கத் தொகை | 4490.25 |
| 13 | பூஜ்ய கழிவு நீர் நிலையை எட்டும் பணிக்காக திருப்பூரில் உள்ள பொது சுத்திகரிப்பு நிலையங்களுக்கு கடன்கள் | 3000.00 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வரவு செலவு திட்ட ஒதுக்கீடு 2015-2016 (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 14 | கூட்டுறவு நூற்பாலைகளுக்கு கடன்கள் | 2584.31 |
| 15 | டெக்ஸ்கோ நிறுவனத்திற்கு வழங்குவதற்காக கூட்டுறவு நூற்பாலைகளுக்கு வழிவகை முன்பணம் | 80.00 |
| 16 | கைத்தறி நெசவாளர்களுக்கு பெடல் தறிகள் வழங்குதல் | 1310.50 |
| 17 | சிறந்த கைத்தறி நெசவாளருக்கு பரிசு வழங்கும் திட்டம் | 1.00 |
| 18 | மின்னணுவால் நியூமேட்டிக் முறையில் இயக்கப்படும் ஜக்கார்டு இயந்திரங்கள் கொள்முதல் செய்தல் – மாநில புதுமை நிதி | 120.00 |
| 19 | கைத்தறி நெசவாளர்களுக்கு நியூமேட்டிக் கருவியுடன் கூடிய கைத்தறிகள் வழங்குதல் – மாநில புதுமை நிதி | 45.00 |
| 20 | **6** கோல்கள் கொண்ட சாயத் தொட்டிகள் நிறுவுதல் – மாநில புதுமை நிதி | 30.00 |
| 21 | பட்டு சாயச் சாலைகளுக்கு கழுவுதல் மற்றும் அலசும் இயந்திரம் கொள்முதல் செய்தல் – மாநில புதுமை நிதி | 3.00 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வரவு செலவு திட்ட ஒதுக்கீடு 2015-2016 (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 22 | கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தினை பிரத்யேக இரகங்களை சந்தைப்படுத்தும் பணி நிறுவனமாக மேம்படுத்த நவநாகரீக விற்பனை நிலையங்கள் துவக்குதல் – மாநில புதுமை நிதி | 120.00 |
| 23 | ஜவுளிப் பூங்காக்களுக்கு நிதி உதவி | 28.20 |
| 24 | ஈரோட்டிலுள்ள விசைத்தறி சேவை மையத்திற்கு வாடகை மானியம் | 3.12 |
| 25 | சம்பளம் மற்றும் நிர்வாகச் செலவுகள் | 2599.44 |
| 26 | அமலாக்கப் பிரிவின் சம்பளம் மற்றும் நிர்வாகச் செலவுகள் | 164.38 |
| 27 | இதர இனங்கள் | 0.20 |
| **மொத்தம்** | | **109633.83** |

**எஸ். கோகுல இந்திரா**
**கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்**